www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாத இதழ்

# புதிய பூமி

පුදිය පූමි

Puthiya Poomi

சுற்று 15 ஆகஸ்ட் 2008 பக்கம் 16 விலை 20/= சுழற்சி 116




# யாருக்காக இது யாருக்காக?

சார்க் (SAARC) எனப்படும் தென்னாசிய நாடுகளின் பிராந்திய ஒத்துழைப்புச் சங்கத்தின் 15 ஆவது உச்சி மாநாடு கொழும்பில் யூலை 27 முதல் ஆகஸ்ட் 2ம் 3ம் திகதிகள் வரை நடாத்தப்பட்டது. யுத்தத்தாலும் பொருளாதார அரசியல் நெருக்கடிகளாலும் மோசமாகப் பாதிக்கப்பட்டு நிற்கும் நாட்டு மக்களின் பணத்திலிருந்தே முன்னூறு கோடி ரூபாய்களுக்கு மேல் இம் மாநாட்டுத் திரு விழாவிற்கு செலவிடப்பட்டுள்ளது. இதனால் மக்களுக்கும் அவர்கள் எதிர்நோக்கி நிற்கும் பிரச்சினைகளுக்கும் பயன் எதுவும் ஏற்படப் போவதில்லை.

இம் மாநாட்டின் மூலம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது அதிகார இருப்பை உறுதிப்படுத்திக் கொள்ளவும் யுத்தத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான தென்னாசிய நாடுகளின் ஒத்துழைப்பைப் பெறவும் வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளார். அத்துடன் அடுத்த மாநாடு வரை சார்க் அமைப்பின் தலைமைத்துவத்தை அலங்கரிப்பதாக ஒரு தோற்றத்தையும் நாட்டு மக்களுக்கு காண்பித்துள்ளார்.

அதே வேளை இம் மாநாட்டை கடந்த காலங்கள் போன்று இந்திய ஆளும் வர்க்க கொள்கை வகுப்பாளர்கள் தென்னாசிய நாடுகளின் மீதான பிராந்திய மேலாதிக்கப் பிடியை வலுப்படுத்திக் கொள்ளும் வகையில் பயன்படுத்தியும் கொண்டனர். குறிப்பாக வர்த்தகம் முதலீடு பொருளாதார லாபங்கள் என்பனவற்றில் இலங்கையை ஒரு பொருளாதாரக் கொலனியாக்குவதிலேயே அதிகம் கவனம் செலுத்தினர். ஏற்கனவே எடுத்துள்ள திட்டங்களில் குறுக்கீடுகளோ தடைகளோ ஏற்படாதவாறு இம் மாநாட்டிலும் பார்த்துக் கொண்டனர். சத்தமில்லாது இலங்கை மீது இறுகி வரும் இந்திய மேலாதிக்கப் பிடியானது எதிர்காலத்தில் இலங்கையின் இறைமைக்கும் சுதந்திரம் சுயாதிபத்தியத்திற்கும் பெரும் அச்சுறுத்தலாகவே இருக்கப் போகிறது.

இலங்கை அரசாங்கங்கள் சகலதும் கடந்த மூன்று தசாப்தங்களாக தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணாது யுத்தத்தையே நடாத்தி வந்துள்ளன. இது இந்தியாவின் பிராந்திய நோக்கங்களுக்கும் அமெரிக்காவின் உலகமயமாதல் மூலமான உலக மேலாதிக்கத் திட்டங்களுக்கும் பூரணமாக உதவி வந்துள்ளன. இத்தகைய நிலை தொடர வேண்டும் என்பதே அவர்கள் அனைவரினதும் விருப்பமாகும். இது இலங்கைக்கு மட்டுமன்றி பல்வேறு நெருக்கடிகள் பிரச்சினைகளை எதிர் நோக்கி நிற்கும் தென்னாசிய நாடுகளும் அவ்வாறு இருந்து வருவதையே மேலாதிக்க சக்திகள் விரும்புகிறார்கள்.

சார்க் உச்சி மாநாட்டின் கொழும்புப் பிரகடனம் வெறும் சொற்கோவைகளே. அதில் கூறப்பட்ட வறுமை ஒழிப்பு வளங்களின் பங்கீடு எரிசக்திப் பிரச்சினை உணவுப் பாதுகாப்புத் திட்டம் பொது நிதிய விஸ்தரிப்பு போன்றன வெறும் வாசிப்புக்கள் என்பதுடன் மக்களை ஏமாற்றும் போலி நாடகங்களேயாகும். இந்தியாவின் சனத்தொகையில் 70 வீதமானவர்கள் ஒரு நாள் வருமானமாக ரூபா 20 மட்டுமே பெறுகிறார்கள். இலங்கையில் இந்நிலை சனத்தொகையில் 45 வீதமாக உள்ளது. ஏனைய தென்னாசிய நாடுகளில் வறுமைக் கோட்டிற்கு கீழே ஐம்பது அல்லது அறுபது வீதமான மக்கள் வாழுகின்றனர். அதே வேளை மிகச் சிறுதொகையானவர்களின் கைகளில் நிலங்கள் தொழிற்சாலைகள் முதலீடுகள் லாபங்கள் சுகபோகங்கள் தொடர்ந்தும் இருந்து வருகின்றன. இவற்றை உறுதிப்படுத்துவதே உலகமயமாதலின் பொருளாதார அரசியல் சமூக பண்பாட்டுச் செயற்பாடுகளாக உள்ளன. அதற்காகவே ராணுவ விரிவாக்கம் யுத்தம் ஆக்கிரமிப்புகள் இடம் பெறுகின்றன. தென்னாசிய நாடுகளின் இயற்கை வளங்களைக் கொள்ளையிட்டவர்கள் யார்? தொழிலாளர்களின் விவசாயிகளின் உழைப்பைச் சுரண்டி ஆதாயமடி நிற்பவர்கள் யார்? மண்ணில் இருந்து இளந் தலைமுறையினரை பிரித்து தகவல் தொழில் நுட்பம் என்ற முதலாளித்துவ மீளமுடியாத வலைக்குள் தள்ளியவர்கள் யார்? பண்பாட்டுச் சீரழிவுகளை நாளாந்தம் திணிப்பவர்கள் யார்? மக்களின் எதிர்ப்புப் போராட்டங்களுக்குப் பதிலாகத் தனிநபர் ஆயுத வீரதீரத்தை ஊட்டி வளர்த்து ஆயுதங்கள் வழங்கி இளந் தலைமுறையினரைப் பலியெடுக்க வைத்தவர்கள் யார்? பயங்கரவாத ஒழிப்பு என்ற பெயரில் மக்களைக் கொன்று குவிக்க வழி காட்டி நிற்போர் யார்? இவற்றைப் பற்றிய ஒரு வரிதானும் சார்க் பிரகடனத்தில் இடம் பெறவில்லை. அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்திய சக்திகள் உலகமயமாதல் உலக ஒழுங்கை முன்னெடுத்துச் செல்வதற்கு பிராந்திய அமைப்பான சார்க் இளைய கூட்டாளியாக உள்ளது. இதனைக் கண்காணிக்க அமெரிக்காவின் தென்னாசியாவுக்கான உதவிச்

[illegible]ம் பக்கம்







(மேலே) மகிந்த சிந்தனை ஆட்சியில் கொழும்பில் வீடு உடைக்கப்பட்டு வீதியில் விடப்பட்ட மக்கள் / (கீழே) பேரினவாத ஆட்சியில் வன்னியில் இடம் பெயர்க்கப்பட்ட மக்கள்







www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்





# 1 1/2 வருடங்களாகியும் விடுதலையும் இல்லை விசாரணையும் இல்லை ஏன்? ஏன்? ஏன்?

## நாலு நடக்கு ம் உ ல கி லே
ந ற் கு ண ன்

## மலையகத் தலைமைகளின் தொடரும் பம்மாத்துக்கள்

**மலையகத்தின் தொழிற்சங்க பாராளுமன்ற** அரசியல் தலைமைகள் தொடர்ந்தும் மலையக மக்களை ஏமாற்றுவதில் தமது பம்மாத்துக்களைச் செய்து கொண்டே இருக்கிறார்கள். ஆளும் அரசாங்கம் எதுவாக இருந்தாலும் அதில் அமைச்சர் பதவிகள் பெற்று சுகம் அனுபவிப்பது அவர்களது வழமையான போக்காகும். அதற்காக இத் தலைமைகள் ஒரு போதும் வெட்கம் அடைந்தது கிடையாது. மலையக மக்களின் உரிமைகள் விடயத்திலும் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு சம்மந்தமாகவும் மேற்படி தலைமைகள் அரசாங்கத்தின் பக்கத்திலும் தோட்டக் கம்பனிகளுடனும் இணைந்து நின்று செயலாற்றுவார்கள். ஆனால் பேச்சுக்கள் அறிக்கைகள் வெளியிடும் போது மிகவும் காரசாரமாகாவும் மலையக மக்களுக்காக உருகியும் நிற்பது போலக் காட்டிக் கொள்வார்கள்.

இவ்வாறான தலைமைகளான இ.தொ.காவும் மலையக மக்கள் முன்னணியும் எதிர்வரும் சப்பிரகமுவ மாகாண சபைக்கு தனித் தனியே போட்டியிடுகின்றன. இவர்களின் வாக்குகள் வாரும் தேர்தல் பேச்சுக்களைக் கேட்டால் உடலே புல்லரிக்கும். “இப்படிப்பட்ட தலைவர்களை நாம் பெற்றிருப்பதற்கு கொடுத்து வைத்தவர்கள் தான்” என்று மலைய மக்கள் நினைக்கும் அளவிற்கு அழகாகப் பேசுகின்றனர். மலையக மக்களின் பின்தங்கிய அரசியல் பொருளாதார சமூக நிலைமைகளைப் புரிந்து கொண்டு தான் அம் மக்களை ஏமாற்றும் வகையில் ஆளும் வர்க்க உள வியலைக் கொண்டு வியூகம் அமைத்தே இம் மலையகத் தலைமைகள் செயலாற்றுகின்றன. ஒரே அரசாங்கத்தில் ஒரே அமைச்சர்வையில் ஒரே பாராளுமன்றத்தில் இருந்தவாறு பேரினவாத ஒடுக்குமுறை ஆட்சிக்கு முட்டுக் கொடுக்கும் இம் மலை யகத் தலைமைகள் சப்பிரகமுவ மாகாண சபைத் தேர்தலில் தனித்தனியாகப் போட்டியிடுகின்றன. தத்தமக்கு வாக்களிக்குமாறு மக்களுக்கு வேண்டுகோள் விடுகின்றன. இதில் வியப்புக்கு இடமில்லை. விசனப்படவே முடியும். இந்த அரசாங்கத்தில் மலையகத் தலைமைகளின் சார்பாக எட்டு அமைச்சர்கள் வீற்றிருக்கிறார்கள். அதுவும் மலையக மக்களுக்குப் “பெருமை” தான். ஆனால் இந்த எட்டு அமைச்சர்களும் எவற்றை மலையக மக்களுக்குப் பெற்றுக் கொடுத்தார்கள் என்றே மலையக மக்கள் மத்தியில் கேள்விகள் எழுகின்றன. ஆனால் அவை எதுவும் அந்தத் தலைமைகளின் செவிகளுக்கு எட்டமாட்டாது. அந்தக் கனவான்கள் மிக உயரத்தில் உட்கார்ந்து இருக்கிறார்கள்.

எவ்வாறாயினும் மலையகத்தின் இத் தலைமைகளுக்கு தேர்தல் காலத்தில் எவ்வாறு மக்களை ஏமாற்ற வேண்டும் என்பதும் சாதாரண வேளைகளில் எத்தகைய பம்மாத்துக்கள் செய்ய வேண்டும் என்பதும் நன்கு அறிந்த விடயங்களேயாகும். இவையனைத்திற்கும் உரிய பதிலாக இருக்கப் போவது மலையக மக்கள் குறிப்பாக இளந்தலைமுறையினர் அரசியல் விழிப்புணர்வு கொள்வதும் வெகுஜனப் போராட்டப் பாதையில் முன் செல்வதுமாகும்.

## காங்கேசன் சீமெந்து ஆலை இந்தியாவின் கரங்களில்

**வடக்கின் ஒரே ஒரு உற்பத்திப் பெரு ஆலையாக** இருந்து வந்தது காங்கேசன்துறை சீமெந்து ஆலையாகும். அது கடந்த 18 ஆண்டுகளாக இயங்கவில்லை. அதன் அமைவிடம் ராணுவப் பாதுகாப்பு வலயத்தில் இருந்து வருகிறது. காங்கேசன் துறை உள்ளிட்ட வலிவடக்கு மக்கள் 1990ல் ஒட்டு மொத்தமாகத் தமது வாழ் விடங்களில் இருந்து ராணுவத்தால் விரட்டப் பட்டார்கள் இன்றுவரை அவர்களது வாழ்வு இடம் பெயர்ந்த அகதி வாழ்வுதான். அத்தகைய மக்கள் நடமாட்டம் அற்ற பிரதேசத்தில் உள்ள இந்த சீமெந்து ஆலையை இந்தியக் கம்பனியான பிர்லா முழுமம் கையேற்றுள்ளது. இலங்கையின் கூட்டுத்தாபனப் பொதுச் சொத்தாக இருந்து வந்த இப் பாரிய சீமெந்து உற்பத்தி ஆலை இப்போது இந்தியப் பெரும் முதலாளிய நிறுவனத்திடம் தாரை வார்க்கப்பட்டுள்ளது. சுமார் 300 மில்லியன் ரூபா முதலீட்டில் இச் சீமெந்து ஆலை புனரமைக் கப்பட இருப்பதாகத் திட்டமிடப்பட்டுள்ளது. ஏற்கனவே உள்ளூர்த் தேவையின் கணிசமான அளவினை பூர்த்தி செய்து வந்த இந்தச் சீமெந்து ஆலை அதற்குரிய மூல வளங்களையும் உழைப்பு சக்தியையும் உள்ளூரிலேயே கொண்டிருந்தது. சுமார் மூவாயிரம் வரையானோர் இவ் ஆலையில் பணிபுரிந்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. அதனால் அதன் பயன்களும் லாபங்களும் நாட்டிற்குள்ளேயே பயன் பெற்றன. ஆனால் இந்திய பெரு முதலாளித்துவக் கம்பனி பொறுப்பேற்பதன் மூலம் அதன் முழுப் பயனும் அவர்களாலேயே எடுத்துச் செல்லப் படும். அங்கு தமது உழைப்பைக் கொடுத்து வந்த தொழிலாளர்கள் கடந்த 18 ஆண்டுகளில் தத்தமது வாழ்வை இழந்தவர்களாகிக் கொண்டனர். அவர்களுக்கோ அன்றி அவர்களின் பிள்ளைகளுக்கோ இங்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுமா என்ற நிலையும் தோன்றியுள்ளது.

இத் தொழிற்சாலையை இந்தியா பெறுப்பேற்பதன் மூலம் உழைப்பும் லாபமும் அங்கு எடுத்துச் செல்லப்படும். அதேவேளை இங்கு சீமெந்தின் விலையை அக் கம்பனியே தீர்மானித்து மக்களிடமிருந்து கொள்ளை லாபம் சம்பாதிக்க முற்படும். பெற்றோல் விற்பனை நிலையங்களையும் விற்பனை உரிமையையும் பெற்ற இந்தியக் ஓயில் கம்பனியே இன்று இலங்கையின் பெற்றோல் விலையைத் தீர்மானிக்கும் நிலையில் உள்ளது. அவ்வாறே எதிர்காலத்தில் மின்சாரத்திற்கும் அவல நிலை உருவாகப் போகிறது.

இவ்வாறு ஒவ்வொன்றாக இந்தியாவின் பொருளாதார ஆதிக்கப் பிடி வளர்ந்தே செல்கிறது. பொருளாதாரத்துறை ஆதிக்கம் நிச்சயம் அரசியல் ஆதிக்கத்திற்கு இட்டுச் செல்லவே செய்யும். இறுதியில் இலங்கையின் இறைமை கையிழக்கப்பட்டு இந்தியாவின் ஒரு மாநிலம் என்ற நிலைக்கு சென்றடையும் நிலையே தோன்றும்.

1ம் பக்க தொடர்ச்சி

### யாருக்காக இது யாருக்காக

செயலாளர் றிச்சட் பவுச்சர் நேரடியாக மாநாட்டில் கலந்து கண்காணிப்பு வேலையைச் செய்து கொண்டார். சார்க் மாநாட்டுக்குத் தனது கண்காணிப்பின் மூலம் நற்சாட்சிப் பத்திரம் வழங்கியதுடன் வழமை போன்று மனித உரிமை மீறல்கள் மோசமடைவதாக மட்டும் சுட்டிக்காட்டிச் சென்றார். அவரது மனித உரிமை நியாயம் உலகறிந்த ஒன்றேயாகும்.

மேலும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இலங்கை வரும் போது இனப்பிரச்சினை விடயமாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு சில அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும் என இலங்கைத் தமிழர்களிடையேயும் தமிழகத்தின் கட்சிகளிடையேயும் எதிர்ப்பார்ப்புக்கள் இருந்தன. அத்துடன் கச்சதீவுப் பிரச்சினை தமிழக மீனவர் தாக்கப்படுவது பற்றியெல்லாம் விரிவான பேச்சும் உரிய நடவடிக்கைகளும் பேசப்படும் எனவும் சிலர் எதிர்ப்பார்த்தனர். அப்பாவித்தனமான அத்தகைய எதிர்ப்பார்ப்பாளர்கள் ஏமாற்றமடைந்தனர். மேற்படி விடயங்கள் பற்றி இந்தியப் பிரதமரோ அன்றி உயர் அதிகாரிகளோ பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. ஒப்புக்குச் சில வார்த்தைகள் கூறிக் கொண்டனர்.

அதேவேளை பயங்கரவாதம் பற்றி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உரத்துக் கூறி வடக்கில் முன்னெடுத்து வரும் தமது யுத்தத்திற்கு அங்கீகாரம் வாங்கிக் கொண்டார். அத்துடன் ஒவ்வொரு நாட்டுத் தலைவர்களும் தாங்கள் எதிர் நோக்கும் பயங்கரவாதம் பற்றிய அக்கறையை வெளிப்படுத்தினர். ஆனால் பயங்கரவாதம் என்று கூறப்படுபனவற்றின் காரண காரியங்கள் பற்றியோ அல்லது அதற்கான பொது வரைவிலக்கணம் சம்மந்தமாகவோ எதுவும் எடுத்துக் கூறவில்லை. அரசாங்கத்திற்கு எதிராக உள்ள அனைத்தும் பயங்கரவாதம் என்றவாறே நோக்கப்பட்டிருந்தது. பத்தொன்பதினாயிரம் இலங்கைப் பாதுகாப்புப் படைகளினதும் இந்திய கடற்படை, விமானப்படை கறுப்புப் பூனைகள் என்பவற்றினதும் பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் நடாத்தப்பட்ட சார்க் உச்சி மாநாடு இலங்கை மக்களுக்கோ தென்னாசிய நாடுகளின் மக்களுக்கோ துளியளவும் பயனற்றவையாகும். மகிந்த சிந்தனை அரசாங்கத்தின் யுத்தக் கொள்கைக்கும் மக்கள் விரோத ஆட்சிக்கும் சார்க் என்ற திரை நல்ல மறைப்பாகும். அவ்வாறே அமெரிக்காவிற்கு நம்பிக்கை தரும் மாநாடுமாகும். எனவே சார்க் உச்சி மாநாடு யாருக்கானது என்ற கேள்வி எழுப்பி உரியவாறு விளங்கிக் கொள்வது அவசியமானதாகும்.

### சாதியப் பூசனிக்காயைச் சோற்றில் மறைப்பது

பேராதனையின் சாதியக் கலாநிதியார் கொமிற்றியிலிருந்து விலகப் போன கதை வெகுதூரம் பரவி விட்ட பிறகு தான் அப்படிச் சொல்லவில்லை என்று தனது சக ஆசிரியர்கள் பங்குபற்றின ஒரு கூட்டத்தில் அறிவித்தாராம். முதலாவதாகக் கதையை அவிழ்த்து விட்டவர் அவரது சக ஆசிரியர். சாதியக் கலாநிதியாரின் மறுப்பு அதிகம் எடுபடவில்லை. எனவே இவங்களெல்லாரும் இப்படி தங்களுடைய சாதிகளைச் சொல்லி மேலை வரப்பார்க்கிறாங்கள் என்று இன்னொரு அஸ்திரத்தையும் பாவித்தாராம். எய்த பாணமும் அவர் தலைமேலேயே விழுந்திருக்க வேண்டும்.

அவர் அப்படிச் சொல்லியிருக்க மாட்டார் என்று சாதியக் கலாநிதியாருக்கு வக்காலத்து வாங்கி ஒரு கம்பரடிப் பொடியின் பொடிப்பிள்ளை ஒன்றும் தூர இருந்து சமாதானம் பேச வந்ததாம். அதன் நோக்கங்கள் வேறு.சாதியக்கலாநிதி வேளைக்கே ஏதொ கோபத்தில் வாய்க்கு வந்ததை உளறிவிட்டேன் அதற்காக வருந்துகிறேன் என்று சொல்லியிருந்தால் கதை இவ்வளவு தூரம் வளர்ந்திராது. இப்போது ஒரு பொய்யை மூட ஒன்பது பொய்யும் ஒரு நூறு பொய்ச்சாட்சிக்களையும் தேட வேண்டிய அவதி. சாதியக் கலாநிதிக்குக் கொழும்பில் ஒரு பெரிய ஆதரவுப்பட்டாளமே இருக்கிறதாம். அந்தப்பட்டாளம் என்ன சொன்னாலும் உண்மை பொய்யாகி விடுமா?

### அதே அரசு! அதே அட்டூழியம்!

யூன் மாத பிற்பகுதியில் மாணவர்களும் புத்த பிக்குமாரும் பொலிஸ் கண்ணீரிப்புகைத் தாக்குதலுக்கும் நீரப்பீரங்கித் தாக்குதலுக்கும் உட்பட்டதையடுத்து மாணவர்களையும் பிக்குமாரையும் தாக்க வேண்டாமென்று சனாதிபதி ஆணையிட்டார். ஆனால் தாக்க ஆணையிட்ட பொலிஸ் அதிகாரி யாரும் தண்டிக்கப்படவில்லை

சார்க் மாநாட்டையொட்டிக் கொழும்பைப் பாதுகாப்பதன் பேரில் பலதும் நடக்கின்றன. யூலை 18 அன்று கொம்பனித்தெருவில் புகையிரதப்பாதையை அண்டிய சட்டவிரோதமான குடியிருப்புக்களை அகற்றும் நடவடிக்கைக்கு எதிரான நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்பும் குடியிருப்புக்கள் அழிக்கப்பட்டன. எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தோரும் படமெடுத்த பத்திரிகையாளர்களும் தாக்கப்பட்டுள்ளனர். சட்டவிரோதமான ஒரு நடவடிக்கையை மேற்கொண்டோர் தண்டிக்கப்படுவார்களா? பதவி உயர்வு பெறுவார்களா?

ஜே.ஆர் ஆட்சியில் நடந்தவற்றை நினைவூட்டுகிற விதமாகவே மகிந்தர் ஆட்சியிலும் பலதும் நடக்கின்றன. அண்மைய நிகழ்வு இந்திரா காந்தியின் அவசரகாலசட்ட அடாவடித்தனத்தின் போது வறுமையை ஒழிப்போம் ”என்று சொல்லி டில்லியிலிருந்து ஏழைகளின் குடிசைகளை அழித்து அவர்களை விரட்டியடித்ததையே நினைவூட்டுகின்றன. அது நடந்து 30 ஆண்டுகட்கு மேல். இந்திரா காந்தி 1977 தேர் தலில் படு தோல்வி கண்டார். வரலாற்றிலிருந்து யார் தான் கற்கிறார்கள்?

### பூச்சுற்றுவதற்கும் கணக்கு வேண்டாமா?

கம்யூனிஸ்ற் கட்சிகள் வலுவான வரலாற்று உணர்வுடையனவயாயிருக்க வேண்டும். எந்த வரலாற்றையும் செம்மையான தகவல்களின் அடிப்படையில் பாட்டாளி வர்க்கக் கண்ணோட்டத்தில் விளங்கிக் கொள்ளாது ஒரு கம்யூனிஸ்ட் கட்சி சோஷலிசத்தை நோக்கி நகர இயலாது. திரியுவாதக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் 04-07-08 தினக்குரலில் இலங்கைக் கம்யூனிஸ்ற் கட்சி நிறுவப்பட்ட 65வது ஆண்டை நினைவு கூர்ந்து குகதாஸ் என்பவர் எழுதியிருந்தார். தேசிய இனப்பிரச்சனையில் கம்யூனிஸ்ற் கட்சி ஆற்றிய பங்கைப்பற்றி அவர் விவரித்தார். 1966 பேரினவாத ஊர்வலம் தரப்படுத்தலையும் அதையடுத்து வடக்கில் ஏற்பட்ட அடக்குமுறைச் சூழலையும் பற்றிய மெத்தனதான போக்கு என்பவற்றையும் சொல்லியிருந்தால் கொஞ்சம் முழுமையாக இருந்திருக்கும். வி.பொன்னம்பலத்துக்கு 1978க்குப் பிறகுதான் ஞாபக சக்தி மீண்டது. ஆனால் அவர் அத்துடன் அ.அமிர்தலிங்கத்தின் அடியார்க்கும் அடியேன் என்று ஆளே தலைகீழாகிச் செந்தமிழர் ஆகி விட்டார்.

குகதாஸ் அவர்கட்கு வடக்கில் கட்சியை நிறுவியவர்கள் யாரென்றே நினைவில்லை. ராமசாமி ஐயர் படம் யாழ் கட்சி அலுவலகத்தில் இன்னமும் தொங்குவதாக ஒரு முறை அவருடைய மகன் சொன்னார். மு. கார்த்திகேசன் நா.சண்முகதாசன் போன்றவர்களது அர்ப்பணிப்பான சேவைகள் எப்படி நினைவுக்கு வரும்?

திரிபுவாத கம்யூனிஸ்ற் கட்சி சமஷ்டி முறையை ஆதரிக்கிறதா ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வை ஆதரிக்கிறதா என்று கூட இந்த மனிதருக்கு விளங்கவில்லையா? ஒரு காதில் எவ்வளவு பூச் சுற்றலாம் என்பதற்கு ஒரு அளவு கணக்கு வேண்டாமா?

### இது மஹாராஜாவின் பொலிஸ் அரசாங்கமா?

எங்கள் அவதானிப்பில் நீங்கள். உங்கள் வாழ்க்கை எங்கள் செய்தி.

இதுதான் “தெரிவிப்பது நாங்கள்” நிறுவனம் நமக்குத் தெரிவித்துள்ள அண்மைய தொலைபரப்புக் கொள்கைப் பிரகடனம். யாரோ சொல்லியோ இப்போது முதலாவது வசனம் “தீரக்கமான செய்தியாக உருவெடுக்கும் சம்பவம்” என்று மாற்றப்பட்டுள்ளது. கொஞ்சம் ஆழச் சிந்தித்துப் பாருங்கள். எங்களில் எவரையும் அவதானிக்க ஒரு ஊடக நிறுவனத்துக்கு என்ன அதிகாரம் உள்ளது? எங்களது வாழ்க்கையை அவர்களது செய்தியாக்க அவர்கட்கு என்ன உரிமை உள்ளது?

இது பொதுவாழ்விலுள்ளவர்கட்கு அவர்கள் விடுக்கும் எச்சரிக்கையானால் அதைத் தெளிவாகச் சொல்லட்டும். ஆனால் எங்களை கண்காணிக்கவும் எங்கள் அலுவல்களை அவர்களது செய்தியாக்கவும் இது என்ன பொலிஸ் இராச்சியமா? மஹாராஜா நிறுவனம் அதன் பிரதம கண்காணிப்பு மையமா? அல்லது வெறும் பணத் திமிரா? ஊடக அதிகாரம் கொண்டு எதையும் கூறலாமா?

### சிவத்தமிழ்ச் செல்வியின் சைவமும் சாதியமும்

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் சைவசமயப் பரப்புரைகளும் சமூகத் தொண்டும் பெரிதும் மெச்சப்படுகின்றவை. அவரது மறைவின் பின்பு அவரது அர்ப்பணிப்பு பற்றி மிகவும் விதந்து பேசப்படுகிறது. அவரது தன்னலமற்ற சேவையை மெச்சுவது பற்றி நமக்கு மறுப்பில்லை. குறிப்பாக சைவ அனாதை சிறுவர்கட்கான அவரது பணி பற்றிப் பேசப்படுகிறது. போர்ச்சூழலில் அது முக்கியமானது.

எனினும் அவரது அனாதை விடுதிகளில் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு இடமில்லை என்ற விடயம் ஏற்கனவே அம்பலமாகியிருந்தது முக்கியமானதாகும். சிவபெருமான் தாயிழந்த பன்றிக்குட்டிக்குத் தானே தாயாகிப் பாலூட்டிய கதையோடுதான் திருவிளையாடல் புராணமே தொடங்குகிறது. உமாதேவிர் பசியாற்கதறிய பிராமணக் குழந்தையான சம்மந்தருக்குப் பாலூட்டினார். இறைவனுக்கும் இறைவிக்கும் பன்றிக்கும் பார்ப்பனருக்கும் வேறுபாடு காட்ட இயலவில்லை. அதே இறைகளின் தொண்டாற்றும் ஒரு மூதாட்டிக்குச் சாதி வேறுபாட்டைத் தவிர்க்க இயலவில்லை என்பது தான் விசனத்திற்குரியதாகும். அவர் தவிர்க்க முயன்றிருந்தாலும் அவரது தொண்டுக்காக வழங்கப்பட்ட கருணை நிதி ஊற்றுக்கள் எல்லாமே வற்றிப் போயிருக்கும். எனவே அவரை நோவதா? அவரை கொண்டாடுகிற சாதிய நெஞ்சங்களை நோவதா? நமது பழைமை பிடித்தாடடும் சமூகத்தை நோவதா? அந்த அம்மையாருக்குப் பின் அவரது புகழ் பாடி வாரிசாக வர உள்ளவர்களும் அந்தச் சாதியச் சுமை கொண்டவர்களாகத் தான் இருக்கிறார்கள் என்னும் தகவலும் வடக்கிலிருந்து கிடைக்கிறது.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# மகிந்த சிந்தனை ஆட்சியும் பிரித்தாளும் சூழ்ச்சியும்

**நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி** ஆட்சி தங்கு தடையின்றி முன்செல்ல சொந்தக் கட்சியின் பாராளுமன்றப் பெரும்பான்மை முக்கியமானதாகும். அத்தகையதொரு தனிப் பெறும்பான்மை மகிந்த ராஜபக்ஷ பதவியேற்றப் போது இருக்கவில்லை.பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொண்டு மகிந்த சிந்தனையை நடைமுறைப்படுத்தலாம் என்றே ஆரம்பத்தில் ஆளும் தரப்பு மூளைகள் வேலை செய்தன. அதற்கான ஆரம்ப முயற்சிகளும் செய்யப்பட்டன. ஆனால் அத்தகைய செயற்பாடு என்றோ ஒரு நாள் முறிவடைந்து கொள்ளும் ஆபத்தை உணர்ந்து கொண்டதால் அந்த முயற்சி கைவிடப்பட்டது. மகிந்த சிந்தனையின் பங்காளியான ஜே.வி.பி. யும் அதனை விரும்பவில்லை. ஏனெனில் ஐ.தே.க. வெறும் பதவிகளுக்கு அன்றி அதிகாரத்திற்கு வரச் சந்தர்ப்பம் தேடும் கட்சியாகவே உள்ளது.

அதனால் ஐ.தே. கட்சியில் இருந்துவந்த அதிருப்தியாளர்களுக்கு வலை வீசும் முயற்சி தீவிரமாக முன்னெடுக்கப்பட்டது. கரு ஜெயசூரியா தலைமையிலான சுமார் பதினேழு பேர் அந்த வலையில் அகப்பட்டனர். இவர்கள் அனைவரும் ரணிலின் இரண்டு வருட பிரதமர் பதவியின் கீழ் அமைச்சர்களாக இருந்தவர்கள். அத்துடன் அவர்களது அமைச்சுகளில் இடம்பெற்ற பல நிதி முறைகேடுகள் கொடுக்கல் வாங்கல் பிசகுகள் இருந்து வந்தன. கோப் எனப்படும் நிறுவன மோசடிகளை கண்டறியும் பாராளுமன்றத் தெரிவுக் குழு கண்டறிந்த 26 நிறுவனங்களில் இடம் பெற்ற 150 மில்லியன் ரூபா முறைகேடுகளுக்குள்ளும் இந்தப் பதினேழு பேர் சம்பந்தப்படும் நிலையும் ஏற்கனவே காணப்பட்டது. இதனை ப் சாட்டாக வைத்தும் அமைச்சர் பதவிகளைக் காட்டியும் அந்தப் பதினேழு பேரும் அரசாங்கப் பக்கம் இழுக்கப்பட்டனர். அதனால் ஐ.தே.க. பிளவு பட்டு அரசாங்கத்தில் ஒரு பகுதி இணைந்து பதவி பெற்று பாவமன்னிப்புக்கு உள்ளாகியது.

அடுத்து இ.தொ.கா. விலிருந்து சுரேஷ் வடிவேலு பிரித்தெடுக்கப்பட்டு அமைச்சராக்கப்பட்டார். ஏனையோரும் அவ்வழியில் செல்லக் கூடிய சூழலில் இந்தியாவின் உதவியுடன் முழு இ.தொ.கா பா. உளக்களும் அமைச்சர்களாகிக் ஆட்சியில் இணைந்தனர். அமைச்சர் பதவி இன்றி விரக்தியுடன் இருந்து வந்த வீ.புத்திரசிகாமணியும் இ.தொ.கா.வை விட்டுச் சென்று அமைச்சராகி கொண்டார். இங்கு பிரிப்பும் இழுப்பும் இலகுவாக நிறைவேறியது. ம.ம.முன்னணியில் இருவர் இருந்தனர். அவர்கள் மத்தியில் பிரிப்பு இடம் பெற முன் னரே அவர்கள் முழு அமைச்சர் அரை அமைச்சர்களாகி கொண் டனர். அத்துடன் அவர்களுக்குப் பாதகமாக இருந்த கோப்புகளும் மூடப்பட்டன.

மேலும் தருணம் பார்த்து ஜே.வி.பியைப் பிரித்து 11 பாராளுமன்ற உறுப்பினர்களுடன் தனிக் கட்சியாக்கிக் கொள்ள வைத்ததிலும் மகிந்த சிந்தனை மூளைகள் வேலை செய்து கொண்டன. இப்பிரிப்பு இழுப்பு முயற்சிகள் மேலும் ஜே.வி.பி.யை நோக்கி நடந்து கொண்டே இருக்கிறது.

அதே போன்று ஆரம்பத்தில் சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்து சிலரைப் பிரித்தெடுத்து அமைச்சர் பதவிகள் தாராளமாக வழங்கப்பட்டது. எஞ்சியிருந்த மு.கா. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் விலைபேச முற்பட்ட சூழலில் முற்று முழுதாகவே அரசில் சேர்ந்து அமைச்சர் பதவி பெறும் யுக்தியை அதன் தலைவர் ரவூப் ஹக்கீம் கையாண்டார். எவ்வாறாயினும் அரசின் பிரிப்பு இழுப்பு பதவி வழங்கலால் மு.கா. உடைந்தது உடைந்ததுதான்.

மகிந்த சிந்தனையின் கீழ் பிரிப்புக்கும் இழுப்பிற்கும் உள்ளாக்காமல் உள்ள ஒரே கட்சியாகப் பாராளுமன்றத்தில் இருப்பது தமிழர் தேசிய கூட்டமைப்பாகவே உள்ளது. அவ்வாறு அது திகழ்வதற்கு வேறு பின்னணிக் காரணம் இருக்கிறதே தவிர அதன் உன்னத தமிழ்த் தேசிய உணர்வின் புனிதம் காக்கும் நிலை என்று கூறிவிட முடியாது.

இத்தகைய பிரிப்பு இழுப்பு பதவி வழங்கும் தந்திரம் பாராளுமன்றத்திற்கு வெளியிலும் மகிந்த சிந்தனையால் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ளது. புலிகள் இயக்கத்திலிருந்து கிழக்கில் கருணா குழு பிரிக்கப்பட்டது. இதற்கு ஐ.தே. கட்சியும் ரணிலும் உரிமை கொண்டாடினர். அதன் பின் கருணா பிள்ளையான் முரண்பாட்டை மகிந்த சிந்தனை மூளைகள் பயன்படுத்தி பிள்ளையானை கிழக்கின் முதலமைச்சராக்கியது வரை கொண்டுவந்து விட்டுத் தமது பிரித்தாரும் தந்திரத்தை நிறைவேற்றி வருகின்றனர். அமைச்சராக இருக்கும் டக்ளஸ் தேவானந்தாவின் ஈ.பி.டி.பி. கட்சிக்கும் பிள்ளையான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சிக்கும் இடையிலான முரண்பாட்டை கிழக்கில் தமக்குச் சாதகமாக வளர்த்து அரசாங்கத்துடன் நிற்கும் தமிழ்க் கட்சிகள் மத்தியில் உடன்பாடு ஏற்படாதவாறு பார்த்துக் கொள்வதிலும் மகிந்த சிந்தனை மூளைகள் கவனமாக இருந்து வருகின்றன.

அவ்வாறே அரசாங்கத்தை ஆதரித்து புலிகளை கடுமையாக எதிர்த்துவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பெயரிலான வீ.ஆனந்த சங்கரிக்கும் அமைச்சர் டக்ளஸிற்கும் இணக்கப்பாடு ஏற்படாதவாறு பார்த்துக் கொள்வதிலும் கவனமாகக் காய் நகர்த்தப்பட்டது. வடக்கு மாகாண ஆளுனர் பதவிக்கு ஆனந்த சங்கரி ஆவல் கொண்டிருந்தார். அதனை அமைச்சர் டக்ளஸ் விரும்பவில்லை. இதனை அரசாங்கத் தரப்பு உரியவாறு பயன்படுத்தி முரண்பாட்டைத் தீவிரமாக்கி தனது பேரினவாத நிலை நின்று முன்னாள் பொலிஸ் மா அதிபரை வடக்கின் ஆளுனராக்கிக் கொண்டது.

சிறீ லங்கா சுதந்திரக் கட்சிக்குள் அதிருப்தி ஏற்பட்டு மங்கள சமரவீரவும் சிறிபதி சூரியாராட்சியும் பிரிந்து சென்று தனிக் கட்சி அமைத்து செயல்பட்டனர். இவர்களுக்கு சந்திரிகா அம்மையார் பின்னால் இருந்து ஆலோசனை வழங்கி வந்தார். ஆனால் அக் கட்சியின் தீவிர செயற்பாடானது சிறிபதி சூரியாராட்சியின் விபத்து மரணத்துடன் தாழ் நிலைக்கு வந்து விட்டது. மேலும் சுதந்திரக் கட்சிக்குள் அதிருப்தியும் பிரதேச வேறுபாட்டுப் பிரச்சினைகளும் இருந்து வருகிறது. இவற்றைப் பயன்படுத்தி சந்திரிகா அம்மையார் அரசியலில் சக்திபெற்று விடுவாரோ என்ற அச்சம் மகிந்த சிந்தனை மூளைகளிடம் இருக்கவே செய்கிறது. எனவே அவரைப் பொது வாழ்விலிருந்து ஓரம் கட்டி விடுவதற்கான வழிவகைகள் ஆராயப்பட்டு வருவதாகவே பேசப்படுகிறது. குறிப்பாக அவரது குடியுரிமையைப் பறித்து விட்டால் விடயம் முடிந்து விடும் என்ற சிந்தனையும் ஓடிக் கொண்டிருக்கிறது. இவ்வாறு எதிர்க்கட்சிகள் எனப்படும் நிலையில் இருந்த கட்சிகளைப் பிரித்து தம்மிடம் இழுத்து வைத்திருப்பதும் போராடிய தமிழ்க் கட்சிகளை உடைத்து தம்வசமாக்கியும் அவ்வாறானவர்கள் ஒன்றினையாது பார்த்துக் கொள்வதும் மகிந்த சிந்தனையின் கீழான முக்கிய அரசியல் காய் நகர்த்தல்களாகும். இவ்வாறு பிரித்தெடுத்தவர்கள் அனைவரும் தங்களுக்குள் முரண்பட்டு நிற்பதற்கும் அதே வேளை ஜனாதிபதியின் காலடியில் நின்று கொள்வதில் சிரமம் ஏற்படாதவாறும் கண்கானித்துக் கொள்ளப்படுகிறது. இதில் சிங்கள தமிழ் முஸ்லிம் மலையகப் பாராளுமன்ற உறுப்பினர்கள் எனப்படுவோர் தத்தமது மக்கள் பிரதேசம் பற்றிய அக்கறைகளை விடத் தமது அரசியல் பதவி வருமானம் இருப்பு என்பனவற்றின் மீதே அக்கறை காட்டி நிற்கும் நிலையே காணப்படுகிறது. இத்தகைய செயற்பாட்டை முன்னெடுக்கும் மகிந்த சிந்தனையின் நடைமுறை காரணமாகவே 110 அமைச்சர்கள் பதவி பெற்று சுகபோகவாழ்வு நடாத்த முடிகிறது. இன்னும் யாராவது அரசாங்கம் பக்கம் போவதாயின் 150 அமைச்சர்களாகப் பதவிகள் விஸ்தரிக்கப்படுவதில் கூட பிரச்சினை எதுவும் இருக்கமாட்டாது என்பதே இன்றைய ஆட்சியின் வெட்கமற்ற போக்காக உள்ளது.

## இப்படி நடந்தது

"நேபாளத்தில் மாஓவாதிகளின் தலைமையிலான புதிய அரசாங்கம் கொழும்பு 15வது சார்க் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வது திட்டமிட்ட அரசியல் சதி மூலம் தடுக்கப்பட்டிருக்கிறது. மாஓவாத அரசாங்கத்தின் புதிய பிரதமர் அம் மாநாட்டில் கலந்து கொண்டிருந்தால் அது முற்றிலும் பாரம்பரிய முறையில் இருந்து விலகிய ஒன்றாக இருந்திருக்கும். நான் நேபாளத்தில் உள்ள இலங்கைத் புதுவருடனும் வெளிவிவகார அமைச்சருடனும் முறையான தொடர்பு கொண்டிருந்தேன். மாநாட்டில் பங்குபற்றும் அழைப்பு விடுக்க எனது புகைப்படத்தையும் அவர்கள் என்னிடம் கேட்டிருந்தார்கள். ஆனால் அரசியல் சூழலின் தெளிவற்ற நிலை யால் நான் புகைப்படத்தை கொடுக்கவில்லை. இருப்பினும் எனது உரையைத் தயாரித்திருந்தேன். அவ்வுரை நேபாளத்தின் எரியும் பிரச்சினைகள் உள்ளடக்கப்பட்ட ஒரு வித்தியாசமான தொன்றாக அமைந்திருக்கும். ஆனால் உச்சி மாநாட்டிற்கு முன்பாகப் புதிய அரசாங்கம் அமைக்கப்படுவது திட்டமிட்டே தடுக்கப்பட்டது. அதனால் அம் மாநாட்டின் ஊடாக எமது புதிய செய்தி உலகத்திற்குச் சென்றடைவது சீர குலைக்கப்பட்டது. இது ஒரு அரசியல் சதி என்பதை விட வேறு எதுவுமாக இருக்க முடியாது."

இவ்வாறு நேபாள மாஓவாத கமயூனிஸ்ட் கட்சியின் தலைவரும் புதிய அரசாங்கத்தின் பிரதமராக வர இருப்பவருமான பிரசண்டா யூலை 30ம் திகதி இந்தியப் பத்திரிகை ஒன்றின் ஆசிரியரான விஜயா காலிசிக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்திருந்தார். மன்னராட்சி வீழ்த்தப்பட்ட பின்பும் அந்நாட்டின் பிற்போக்கு சக்திகள் இலகுவில் பின்வாங்க மாட்டாது என்பதையே இச்சம்பவம் எடுத்துக்காட்டி நிற்கிறது.

## மாமுனிவரின் அருள் வாக்கு

அண்மையில் பாரத புண்ணிய பூமியில் இருந்து ஒரு மாமுனிவர் வந்திருந்தார். தனது சிஷ்சியப் பரிவாரங்களுடன் வந்த அவருக்கு வானிலும் தரையிலும் கடலிலும் தேவ வீரர்கள் பாதுகாப்பு வழங்கினர். அவர் பிரதான உபநியாச உரை நிகழ்த்தவே இங்கு வந்திருந்தார். அவர் தங்கியிருந்த அந்த ஆடம்பர ஆச்சிரமத்தில் நம்பிக்கைக்குரிய பக்தர்கள் சிலர் அருள் வேண்டிக் காத்திருந்தனர். ஒவ்வொருவராகச் சென்று ஐந்து அல்லது பத்து நிமிடங்கள் பக்திசிரத்தையோடு பணிந்து நின்று அருள் வேண்டினர். ஒவ்வொருவரைப் பற்றியும் முனிவருக்கு அவரது சிஷ்சியர்கள் எடுத்துக் கூற பக்தர்களது பின்னனிக்கு ஏற்ப அருள் வாக்குகள் முனிவரால் வழங்கப்பட்டது. சில பக்தர்கள் மாலையிட்டுப் பொன்னாடை போர்த்தி வணங்கி நின்றனர். சிலர் பக்திப் பரவசத்துடன் உள்ளம் உருகி வரம் வேண்டினர். அருள் வாக்கும் வரமும் பெற முடியாத சிலர் மனம் புளுங்கி வெளியே நொந்து கொண்டனர். தரிசனம் பெற்று அருள்வாக்குப் பெற்றோர் அதனை பெரும் பேறாகக் கொண்டு புளங்காகிதம் கொண்டனர். மாமுனிவர் தென் மண்டலத்தில் முனிவர்களுக்கெல்லாம் மாமுனிவர் தானே என்ற மமதைப் புன்முறுவலுடன் புட்பக விமானமேறி சொந்த ஆச்சிரமம் சென்றடைந்தார். இங்கு ஆசியும் அருளும் பெற்றவர்கள் தத்தம் வாக்கு வங்கிகளுக்கு வளம் சேர்க்க ஊடகங்களில் படங்களும் அறிக்கைகளும் வழங்கிக் கொண்டனர். இவற்றையெல்லாம் பார்த்த மக்கள் தங்களுக்குள் சிரித்துக் கொண்டனர்.

## இலங்கை மனிதப் புதைக்குழிகளின் நிலம் உண்மைகளைப் புதைக்க முடியாது.

**மனிதர்களைக் கொன்று புதைக்கலாம்.** ஆனால் உண்மைகளை ஒருபோதும் புதைக்க முடியாது. என்றோ ஒரு நாள் அவை வெளிவரவே செய்யும். அண்மையில் மட்டக்களப்பின் பாலமீன் மடுப் பகுதியில் ஒரு கிணறு தோண்டப்பட்டபோது நிலத்திற்கு அடியில் இருந்து மனித எலும்புகள் வெளிவர ஆரம்பித்தன. அவற்றுடன் உடைகள் வெற்றுத் தோட்டாக்கள் என்பனவும் வெளிவந்தன. இவ்வாறு வெளியே எடுக்கப்பட்ட எலும்புகள் மனிதர்களுடையது எனவும் சுமார் 16 பேரினதாக அவை இருக்கலாம் எனவும் ஆரம்ப விசாரணையில் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. அவை தற்போது பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதே போன்று அண்மையில் செம்மணிப் பகுதியில் வயல் வெளியில் நிலத்திலிருந்து மனித எலும்புக் கூடு எடுக்கப்பட்டுள்ளன. அதே வேளை தெற்கிலே நீரோடையில் மீன் பிடித்தவர்கள் ஒரு சாக்கில் கட்டிப்போடப்பட்ட மனித அவயவங்களின் அழுகிய எச்சங்களைக் கண்டெடுத்தனர். இவை அண்மைய நாட்களில் இடம்பெற்றவையாகும்.

இவ்வாறு மனித எலும்புக் கூடுகள் நிலத்தடியில் இருந்து எடுக்கப்படுவதும் மனிதச் சடலங்கள் அழுகிய நிலையில் கண்டெடுக்கப்படுவதும் இலங்கைக்கு புதியதொன்றல்ல. பெருந்தொகையில் சுட்டுக்கொல்லப்படுவதும் மறைத்து புதைக்கப்படுவதும் ஏதோ புதுமைக்குரிய ஒன்றல்ல. 1971 ன் ஏப்ரில் கிளர்ச்சியின் காலத்திலேயே இந்தக் கொடுமையான மனிதப் புதைக்குழி விவகாரம் ஆரம்பித்து விட்டது. அன்று கதிர்காக அழகி எனப்பட்ட இளம் பெண் மன்னம் பேரி இராணுவ அதிகாரியால் நிர்வாணமாகத் தெருவால அழைத்துச் செல்லப்பட்டு புதைக்குழியில் இட்டு அரை உயிருடன் புதைக்கப்பட்டார். இது பின் வெளிச்சத்துக்கு வந்து நாடே அதிர்ச்சியடைந்தது. அதன் பின் சூரியகந்தவில் மனிதப் புதைக்குழிகள் கண்டு பிடிக்கப்பட்டு எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டன. அது மாணவர்களின் எலும்புகள் எனக் கண்டு பிடிக்கப்பட்டது. அன்றைய யூ.என்.பி ஆட்சியில் நடைபெற்ற சூரியகந்த புதைக்குழி விவகாரம் சந்திரிகா ஆட்சிக்கு வர வழிவகுத்தது.

அதே சந்திரிகா ஆட்சியில் செம்மணியில் புதைக்கப்பட்டவர்களின் எலும்புகள் வெளிவர ஆரம்பித்தன. 1995ம் ஆண்டு காலப்பகுதியில் குடாநாட்டுப் படைநடவடிக்கையின் போது 600 பேர் காணாமல் போயினர். ஆதலால் செம்மணிப் புதைக்குழிகளில் இருந்து மீட்கப்பட்ட எலும்புக் கூடுகள் அவ்வாறு காணாமல் போனவர்களின் எலும்புகளாக இருக்கலாம் என்ற சந்தேகம் வலுவடைந்து வந்தது. ஆனால் செம்மணி மனிதப் புதைகுழிகள் தொடர்ந்து கண்டுபிடிக்கப்படுவதும் விசாரனைகளும் இடைநிறுத்தப்பட்டன என்பது முன்னைய நிலையாகும்.

ஆனால் இப்போது கிழக்கிலும் செம்மணியிலும் கிடைத்த புதைக்குழி எலும்புகள் மீண்டும் புதைக்குழிகளின் விவகாரத்தை வெளியே கொண்டு வந்திருக்கிறது. கடந்த 30 வருட கால யுத்த சூழலில் காணாமல் போனவர்கள் பெரும்பாலும் கொன்று புதைக்கப்பட்டவர்களாகவே கணிக்கப்படுகின்றனர். வடக்கு கிழக்கு அதன் முக்கிய நிலப் பகுதியாகக் காணப்படுகிறது. தமது உறவுகளையும் உற்றாரையும் இழந்தவர்கள் இன்றும் வெறும் நடைப்பிணங்களாகவே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு இந் நாட்டில் நீதி நியாயம் இல்லை. மனித உரிமை மீறலையும் தம்மவர்களுக்கு நடந்த கொடுமைகளையும் எடுத்து கூறி நியாயம் கேட்க இடமற்றவர்களாகவே அவர்கள் இருந்து வருகின்றனர்.

இவ்வாறு அவ்வப்போது தோண்டப்படும் மனித எலும்புகள் பற்றிய கேள்விகள் எழுப்பப்படும் போது அரசாங்கமே குற்றவாளிக் கூண்டில் நிறுத்திப் பார்க்கப்படுகிறது. குறிப்பாக ஆயுதப் படைகளின் சட்டத்திற்கு அப்பாற்பட்ட நடவடிக்கைகள் காரணமாகவே புதைக்குழிகள் உருவாக்கப்படுகின்றன என்பது பகிரங்க இரகசியமாக இருந்து வருகின்றது. ஆனால் படைத்தரப்பும் அரசாங்கமும் புதைக்குழிகளுக்கு புலிகள் இயக்கம் காரணம் எனக் கூறி தன் மீதான சந்தேகத்தைத் திசை திருப்பி வருகின்றது.

எவ்வாறாயினும் ஆயுதப்படைகளும் ஆயுதம் தாங்கிய தமிழ் அமைப்புகளும் இப் புதைக்குழிகளில் இருந்து எடுக்கப்படும் எலும்புகளுக்கும் தமக்கும் சம்மந்தம் இல்லை என்று இலகுவில் மறுத்துவிடமுடியாது. அவற்றின் உண்மைகள் எவ்வகையிலும் புதைக்கப்பட முடியாது. மக்கள் கிளர்ந்தெழுந்து நியாயம் கேட்காதவரை மட்டுமே உண்மைகள் புதையுண்டு கிடக்க முடியும்.

சபா

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# மலையகத் தமிழர்களுக்கு எதிரான இனவன்முறைகள் 1983ற்கு முன்பும் பின்பும்

**1983 யூலை இனவன்முறையால்** மலையகத் தமிழ் மக்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டனர். அத னையடுத்து அவர்களில் பலர் இந்தியாவுக்கு இடம்பெயர்ந்தனர். வடக்கு கிழக்கிற்கு சென்று குடியேறினர். இந்த இனவன்முறையானது சிங்கள பௌத்த பேரினவாதத்தின் திட்டமிட்ட உச்சமானதொரு நடவடிக்கை ஆகும்.

இந்த வன்முறை தான் தமிழர்களுக்கு எதிரான முதலாவது வன்முறையுமல்ல முடிவானது மல்ல. 1956 ஸ்ரீ எழுத்து பிரச்சினையால் ஏற்பட்ட கலவரத்தா லும் வன்முறையாலும் அதிகமாக பாதிக்கப்பட்டவர்கள் மலையகத்தவர்களே. அதாவது வாகனங்களின் இல க்கங்களில் "சிறி" என்ற சிங்கள எழுத்தைச் சேர்ப்பதற்கு தமிழரசுக் கட்சி எதிர்ப்பை தெரிவித்து ஆர்ப்பாட்டங் களை செய்தது. அதன் எதிரொலியாக வட க்கு கிழக்கிற்கு வெளியில் வாழ்ந்த தமிழர்கள் குறிப் பாக மலையகத் தமிழர்கள் தாக்கப்பட்டனர், கொல்லப்




பட்டனர், அவர்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டன.

இந்த 1958 வன் முறை நடைபெற்ற காலத்தில் பெரும் பான்மையான மலையகத் தமிழர்கள் பிரஜா உரிமைப் பறிக்கப்பட்ட நிலையில் இருந்தனர். பாராளுமன்றத்தில் அவர்களின் தேர்ந் தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் எவரும் இருக்கவில்லை. ஆனால் இக்கால கட்டத்தில் பெருந் தோட்டப் பகுதிகளில் தோட்டத் தொழிலாளர்கள் தற்காப்பு அல்லது எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வன்முறையால் காலி, மாத்தறை, களுத் துறை, குருநாகல், கண்டி மாவட்ட தமிழர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இவ்வன்முறைக்கு பிறகு அங்கொன்றும் இங்கொன்றுமாக அவ்வப்போது நடை பெற்ற இனவன்முறைகளை கவனத்தில் எடுக்காமல் இருக்க முடியாது.

இதற்குப் பிறகு 1970 பொதுத் தேர்தலை அடுத்து இடம்பெற்ற வன்முறைகள் இனரீதியாக மலையகத் தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டது. 1977 ஆம் ஆண்டு தேர்தலை அடுத்து தேர்தல் வன்முறையாகவன்றி திட்டமிட்ட இனவன்முறைகள் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் குடிபெயர்ந்து இந்தியாவிற்கு சென்றவர்கள் கப்பலில் செல்வதற்காக தலைமன்னாருக்கு புகையிரத்தில் பிரயாணம் செய்கையில் தாக்கப்பட்டனர். புஸ்ஸல்லாவை டெல்டா தோட்ட லயங்கள் எரிக்கப்பட்டன. இவ் வன்முறையால் கண்டி மாவட்டத் தமிழர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

1979 லும் 1981 லும் இரட்ணபுரி மாவட்டத்தில் தோட்டத் தொழிலாளர்கள் தாக்கப்பட்டனர். 1981 இல் காவத்தையில் பாதிக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர்களை பார்வையிட சென்ற அன்றைய ஜனாதிபதி பாதிக்கப்பட்டவர்களை பார்த்து "இப்போது ஈழம் தெரிகிறதா" என்று தமிழில் கேட்டது மறக்க முடியாதது தங்களது. கால்நடைகள், கோழிகள் கொல்லப்பட்டமை குறித்து மக்கள் முறையிட்டபோது "உங்களுக்கு கோழி தாரது, முட்டை தாரது" என்றும் கிண்டலாகத் தமிழில் தெரிவித்திருந்தார்.

இவ்வாறான பேரினவாத கருத்துக்கள் சம்பவங்கள் என்பவற்றின் வளர்ச்சியாகவே 1983 இனவன்முறை தமிழர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டது. 1977,1979, 1981,1983 இனவன் முறைகள் மேற்கொள்ளப்படும்போது இ.தொ. கா. தலைவர் சௌ. தொண்டமான் ஐ.தே.க. அரசாங்கத்தில் அமைச்சராக இருந்தார்.

அதே போன்று 1986 இல் தலவாக்கொல்லையில் நடைபெற்ற இனவன்முறைகளிலும் 1989 இல் பூண்டுலோயாவில் நடைபெற்ற இன வன்முறைகளிலும் எதிர்த்தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

1998 இல் இரட்ணபுர மாவட்டத்தில் வேவல்வத்தையில் தோட்டக் குடியிருப்பு லயன்கள் எரிக்கப்பட்டதுடன் இனவெறியாட்டம் அப்பகுதி அமைச்சர் ஒருவரின் அனுசரணையுடன் நடத்தப்பட்டது. 2001ல் பிந்தனுவ புனர்வாழ்வு முகாமில் தமிழ் இளைஞர்கள் 25 பேர் வரை இனவெளியர்களால் வெட்டியும் சுட்டும் கொல்லப்பட்டனர். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த மலையக மக்கள் மீது இன வெறியர்களும் பொலீசும் தாக்குதல் கடை உடைப்புகள் நடாத்திக் கொண்டனர்.

இதற்குப் பிறகு கந்தப் பொலையில் 2005 ஆம் ஆண்டு இனரீதியாக மலையகத் தமிழர்கள் தாக்கப்பட்டதும், கொல்லப்பட்டதும் திட்டமிட்ட பேரினவாத தாக்குதல்களே.

அத்துடன் களுத்துரை, காலி, இரட்ணபுர, கேகாலை, குருநாகல் மாவட் டங்களில் தொடர்ச்சியாகவே தனிப்பட்ட சம்பவங் களை அடுத்து தோட்டத் தொழிலாளர்கள் மீது பாரிய தாக்குதல்கள் நடாத்தப்பட்டு வருகின்றன. இதற்கு பொலிஸாரின் ஊக்குவிப்புகளும் இருந் துள்ளன. மேற்படி மாவட்டங்களில் இருந்து தமிழர் களை விரட்டியடிக்கும் நடவடிக்கையாக இந்த தாக்குதல்கள் மேற் கொள்ளப்படுகின்றன. அத்துடன் மொழி ரீதியாகவும் பண்பாட்டு ரீதியாகவும் பெறும்பான்மையினத்துடன் மலையகத்தமிழர்களை ஒன்றுகலக்கச் செய்வதில் நேரடியாகவும் மறைமுகவாகவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

மலையகத்தமிழர்கள் அவர்கள் வாழ்கின்ற பகுதிகளில் அவர்களின் மொழியில் அவர்களது நாளாந்த கடமைகளை செய்துகொள்ளவும் பாதுகாப்பாக வாழ்வதற்கும் ஏற்ற சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும் பரந்தளவில் பெறும்பான்மை மக்கள் மத்தியில் மேற்கொள்ளப்படும். அறிவூட்டும், விழிப்பூட்டும் நடவடிக்கைகளாலும் குறிப்பாக அரச பரிபாலன பாதுகாப்புத் துறைகளினூடாக எடுக்கப்படும் நடவடிக்கைகளினாலும் அச்சூழ்நிலையை உருவாக்க முடியும்.

இச்சூழ்நிலையை உருவாக்குவதற்கு தடையாக இருப்பது பேரின வந்த மேலாதிக்கத்தை கொண்ட ஆட்சிமுறையும் அதற்காகவும் அதனடிப்படையிலும் கட்டிவளர்க்கப்பட்டுள்ள பேரின மேலாதிக்கப் பண்பாடுமாகும். இது ஓரிரவில் மாற்றப்பட முடியாது.

மலையகத்தின் அரசியல் தலைமைகள் எனப்படுபவைகள் பேரினவாத கட்சிகளின் ஆட்சியில் பதவிகளை பெற்றுக்கொள்வதுடன் மூழ்கி விடுகின்றன. இதற்கு மாறாக பேரினவாதத்திற்கு எதிராக மலையகத் தமிழ் மக்கள் தம்மளவில் அணி திரள்வதும் பேரினவாதத்திற்கு எதிரான சக்திகளுடன் கைகோர்த்துக் கொள்வதும் அவசியமாகிறது.

**அழகேசன்**

# சம்பள வாசல்

**— ஓடும்பிள்ளை**



**மலையகத் தமிழ் மக்கள் எல்லாவற்றையும் போராடியே பெற்றனர்** என்று திரும்பத்திரும்ப அடித்துக் கூறப்படுகின்ற போதும் அவர்களுக்கான உரிமைகளும் சலுகைகளும் தாமாகவே வந்து சேர்ந்து விட்டதாகக் கூறும் சில படித்தவர்களும் இருக்கின்றனர். சிலர் காலஞ்சென்ற தொண்டமான்தான் மலையகத் தமிழ் மக்களுக்கு உரிமைகளும் சலுகைகளும் வென்றெடுக்கப்பட அருளிய முழுமுதற் கடவுள் என்று கூறுவதில் இன்னும் ஆர்வமுடையவர்களாக இருக்கின்றனர்.

மலையகத்தமிழ் மக்களின் கல்வி பற்றி இலங்கை திறந்த பல்கலைக்கழக விரிவுரையாளர் தை.தனராஜின் ஒடுக்கப்பட்டோருக்கான கல்வி என்ற நுல் வெளியிடப்பட்டது. அந்த நூலுக்கு கொழும்பில் நடைபெற்ற வெளியீட்டு நிகழ்ச்சியொன்றில் பதிலுரையாற்றிய தை.தனராஜ் மலையகத்தமிழ் மக்களின் கல்விக்காக எவ்வித போராட்டங்களும் நடைபெறவில்லை என்று கூறியுள்ளார். 1943 ஆம் ஆண்டு சீ.சீ. டபிள்யு கன்னங்கரா முன்மொழிந்த இலவசக் கல்வி கொள்கையில் தோட்டப்பாடசாலைகள் கன்னங்கராவினால் ஓரம்கட்டப்பட்டு நியாயப்படுத்தப்பட்டது. தோட்டத் தொழிலாளர்கள் இந்திய ஏஜன்டுகள் என்பதால் அவர்களின் கல்வியை இந்திய முதலாளிகளே கவனிக்க வேண்டுமென்று கூறியிருந்தார். 1945ம் ஆண்டு தோட்டப் பாடசாலைகளும் உள்ளடக்கப்பட வேண்டுமென அரச கழகத்திலிருந்த இந்திய வம்சாவளி உறுப்பினரான எக்ஸ்.பெரேரா செய்த முன்மொழிவு ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த முன்மொழிவு ஏறக்கப்பட அரச கழகத்திலும் ஊடகங்களிலும் பாரியளவிற்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது. எனினும் இது நடைமுறைக்கு வருவதற்கு பல ஆண்டுகள் எடுத்தன. இலவசக்கல்வியின் முக்கிய அம்சமாக பாடசாலைகள் 1950 களில் தேசியமயமாக்கப்பட்டன. ஆனால் தோட்டப் பாடசாலைகள் 1970,1980 களிலேயே முழுமையாகத் தேசியமயமாக்கப்பட்டன. தோட்டப் பாடசாலைகளை தேசியமயமாக்குவதற்கு தோட்டக் கம்பனிகளுக்கு பாரிய அழுத்தங்களைக் கொடுக்க வேண்டியிருந்தது.

1968ம் ஆண்டுகளில் நகரங்களிலிருந்த பாடசாலைகளில் தரம் 1ற்கும் தரம் 6ற்கும் தோட்டப்பகுதி தமிழ் மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்காக அவர்களுக்கு இலங்கை பிரஜா உரிமை இருக்க வேண்டுமென்ற நிபந்தனை விதிக்கப்பட்டது. இந்த முன்நிபந்தனையை நீக்குவதற்கு மலையகத்தில் அன்றைய காலப்பகுதியில் பலமாக இருந்த தொழிற்சங்கங்களின் அழுத்தமே காரணமாக இருந்தது. 1970 களில் பதவியிலிருந்த ஐக்கிய முண்ணணி அரசாங்கத்தில் இருந்த இடதுசாரி கட்சிகளின் அழுத்தம் காரணமாகவே பெரும்பாலான தோட்டப்பாடசாலைகள் அரசமயமாக்கப்பட்டு அவை தேசிய கல்வி நீரோட்டத்துடன் இணைக்கப்பட்டன. .ஆர்.சிவலிங்கம் (இரா.சிவலிங்கம்) கல்வியமைச்சின் தோட்டப்பகுதிக் கல்விக்குப் பொறுப்பான அதிகாரியாக நியமிக்கப்பட்டார். தோட்டப்பாடசாலைகளை தேசிய கல்வி நீரோட்டத்துடன் இணைப்பதற்காக பாராளுமன்றத்துக்கு விசேட மசோதாவொன்றும் சமர்ப்பிக்கிப்பட்டது. இதனை சட்டமாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. 1973 இல் அனைத்து தோட்டப்பாடசாலைகளையும் தேசியமயமாக்கி அரசிற்கு ஆலோசனைகளையும் அழுத்தங்களையும் கொடுக்க மலையகத் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளை கொண்ட குழு அமைக்கப்பட்டது. அதன் செயற்பாடு பெறுமதியானது .

எனினும் 1975 ஆண்டு கொண்டுவரப்பட்ட நிலச்சீர்த்திருத்த திருத்தச்சட்டத்தின் பின்னர் தோட்டப் பாடசாலைகளையும் அதன் காணிகளையும் சுவிகரித்து கல்வியமைச்சிடம் ஒப்படைக்கப்படுவது இலகுவானது. 1970 களில் மலையகத்தின் படித்தவர்களுக்கு மலையகப்பாடசாலைகளில் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டது. இம்முயற்சிகளுக்கு ஜ.தொ.கா தலைவரான ஜனாப் ஏ.அஸீஸின் பங்கு அளப்பரியது. மலையகத்தவர்களை மலையகப் பாடசாலை அதிபர்களாக நியமிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் வலுத்தது.

மலையகத்திலிருந்து பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களில் சிலர் பிரஜாவுரிமை இல்லாததால் பல்கழைக்கழகத்தில் அனுமதிக்கப்படவில்லை. .1978ம் ஆண்டு அரசியலமைப்பின் உறுப்புரை 14(2) இன்படி அனுமதிக்கப்படலாம் என்பதை அமைச்சரவை ஏற்றுக்கொள்வது தானாகவோ தனிமனித முயற்சியாலோ நடைபெறவில்லை. பிரஜாவுரிமை சட்டங்கள் (1986,1988) கொண்டுவரப்பட்டு பிரஜாவுரிமை பிரச்சினை தீர்க்கப்படும் வரை 14(2) உறுப்புரைக்கு அமைவாகவே பல்கலைக்கழகத்திற்கு பிரஜாவுரிமை இல்லாத மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு மலையகத் தமிழர்களுக்கு தோட்டப்பாடசாலைகளிலும் நகர்ப்புற பாடசாலைகளிலும் பல்கழைக்கழகங்களிலும் இலவசக் கல்வியை நிலை நாட்டிக்கொள்வதற்கு 40 ஆண்டுகாலம் எடுத்தது. (ஏனையோருக்கு 45 இலிருந்து இலவசக்கல்வி உறுதிசெய்யப்பட்டது) இதற்கெல்லாம் ஆயுதப்போராட்டம் நடைபெறாவிட்டாலும் அவ்வக்காலங்களில் போராட்டங்கள் நடந்தே இருக்கின்றன. 1970 களில் பிற்பகுதியில் மலையகத்தவர்களான 402 பேருக்கு ஆசிரியர் நியமனம் கிடைத்ததும் 1980 களில் ஆயிரம்பேருக்கு ஆசிரியர் நியமனம் கிடைத்ததும் வெறும் பத்திரிகை அறிக்கைகளினாலும் மனுக்களினாலுமல்ல. இதற்கான தொழிற்சங்கங்கள் கடும் அழுத்தப் பங்களிப்பு செய்தன. 1980 களில் மலையகத்திற்கென தமிழ் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை அமைக்கப்பட்டது. இது ஆசிரியர்களினது நீண்ட போராட்டங்களுக்குப் பின்னரே கிடைத்தது. கொட்டகலையில் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை அமைக்கப்பட்டது. .இது ஆசிரியர்களினது நீண்ட போராட்டங்களுக்குப் பின்னரே கிடைத்தது. இன்று கொட்டகலையில் ஆசிரியர் பயிற்சிகலாசாலை சொந்தக் கட்டிடத்தில் இயங்குகிறது. பத்தனையில் அமைந்துள்ள ஸ்ரீ பாத கல்வியற் கல்லூரி தனியான மலையகத்தமிழ் மாணவர்களுக்குரியதாக அமைய வேண்டுமென பல போராட்டங்கள் நடைபெற்றன. அங்கு நடைபெற்ற மாணவர்களின் போராட்டங்கள் கல்விக்கான போராட்டங்களே ஆகும். அவற்றின் வெகுஜனப் பங்களிப்பு பாரியதாக இருந்தது .அந்தப் போராட்டங்களினுடாக அங்கு பெறும்பான்மையாகத் தமிழ் மாணவர்கள் படிக்கின்ற சூழல் ஏற்பட்டுள்ளது எனக் கூறுவது தவறாகாது.

கடந்த வருடம் வழங்கப்பட்ட 1379 மலையகத்தமிழ் ஆசிரியர்கள் நியமனத்திற்கு ஆதரவாக மலையகமெங்கும் போராட்டங்கள் நடைபெற்றன.

இது இவ்வாறிருக்க தேசிய ரீதியாக கல்விக்கான போராட்டங்களிலும் மலையகத்தவர்கள் பங்களிப்பு செய்துள்ளனர். குறிப்பாக இலவசக் கல்விக்கு ஆப்பு வைக்க ஜே.ஆர்.ஜெயவர்தன (1980 இல்) அறிமுகம் செய்த கல்வி வெள்ளை அறிக்கையை வாபஸ்பெற வைத்த போராட்டங்களில் மலையகத்தவர்கள் பங்கெடுத்தனர். மலையகத்தில் கூட்டங்கள் ஊர்வலங்கள் சுவரொட்டி இயக்கங்கள் நடைபெற்றன.

எனவே மலையக கல்விக்காக போராட்டங்களே நடைபெறவில்லை என்று கூறுவது சரியா ? அப்படி கூறுவதால் மலையகத்தின் சில கல்விப்பெரியார்கள் தங்களின் கல்வி வளர்ச்சிக்கு தனிமனித முயற்சி மட்டுமே காரணம் என்று ஒப்புவிக்க முயற்சிக்கிறார்கள். அதன் மூலம் அவர்களுக்கு சமூகம் உருவாக்கிக் கொடுத்த சூழலை தாங்களே உருவாக்கிக் கொண்டதாகக் கூறி தனிமனித வாதங்களை முதன்மைப்படுத் முயற்சிக்கின்றனர். இலவசக் கல்வியை மலையகத்தவர்களும் பெற்றுக்கொள்வதற்கு இருந்த தடைகளை தகர்த்தது சமூகப் போராட்டங்களேயன்றி தனிமனித முயற்சிகள் அல்ல. எனவே மலையக வரலாற்றை மறந்து, மறுத்து கருத்துக்களை முன்வைப்பதில் அவதானமாக இருப்பது நல்லது. வரலாற்றில் நடைபெற்ற போராட்டங்களில் பங்கெடுக்காது சுயநலநோக்கில் ஒதுங்கி இருந்துவிட்டு அப்போராட்டங்களில் பலாபலன்களை மட்டும் அனுபவித்துக் கொண்டு தற்போது சுயவிருப்பிற்கு ஏற்ப கருத்துக்களை முன்வைக்கக்கூடாது. அது போன்ற விடயங்கள் ஓடும்பிள்ளையின் கவனத்திற்கு வராமல் இருக்காது.

1970 களில் செங்கொடி சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தவர் என்றும் தற்போது இரா.சிவலிங்கம் நினைவு குழுவில் இணைந்து கல்வி இயக்க நடவடிக்கைகளை எடுத்துவருபவர் என்றும் தனராஜ் அறியப்படுகிறார். அத்தகையவருக்கு மலையக கல்விக்காக போராட்டங்கள் நடைபெறவில்லை என்று பொத்தம் பொதுவாகக் கூறுவதற்கு ஏற்பட்டிருக்கும் தேவை யாது?

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



புதிய பூமி
சுற்று 15 ஆகஸ்ட் 2008 பக்கம் 16 விலை 20/- சுழற்சி 116
இல. 47, 3ம் மாடி , கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே: 060 2136530, தொலை நகல்:011-2473757
E- mail : puthiyapoomi@hotmail.com, web : www.ndpsl.org.

# ஜனாதிபதியின் மனிதாபிமான யுத்தம்

**தற்போது நடைபெறுவது** யுத்தமல்ல மக்களின் வாழ்வதற்கு ள்ள உரிமையை மீள உறுதி செய்வதற்கான மனிதாபிமான பணி என்று வடக்கில் நடக்கும் யுத்தம் பற்றி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அநுராதபுரத்தில் நடைபெற்ற வடமத்திய மாகாண சபை தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போது தெரிவித்துள்ளார் .

அதேவேளை மேற்படி கூட்டத்திற்கு பிறகு அநுராதபுர வைத்தியசாலைக்கு சென்று காயமடைந்த பாதுகாப்பு படையினரை பார்த்த ஜனாதிபதியிடம் படைவீரர்கள் கேட்ட கேள்வியொன்றுக்கு பதிலளித்தபோது பல்வேறுபட்ட வானொலிகள் பலவிதமாக செய்திகளை ஒலிபரப்பி இருக்கலாம். ஆனால் தான் யுத்தத்தை நிறுத்தப்போவதில்லை. பிரபாகரனை பிடித்து என்னிடம் கொண்டு வந்து ஒப்படைக்கும் வரை யுத்தம் தொடரும். இன்னும் இரண்டொரு தினங்களில் பிரபாகரன் எனது காலடியில் மண்டியிடப்படுவார். அதற்குப் பின் யுத்தம் நிறுத்தப்படும் என்று ஜனாதிபதி கூறியுள்ளார்.

அனைத்து அரசியல் கட்சிகள் கூட்டத்தில் தற்போதைக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பை இணைத்துக்கொள்ளும் எண்ணமில்லை என்று அதற்கு பொறுப்பான அமைச்சர் திஸ்ஸவிதாரன தெரிவித்துள்ளார். அக்கட்சி தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து இருப்பதால் இக்கட்டத்தில் அதனை அனைத்துக்கட்சி கூட்டங்களில் சேர்த்துக்கொள்ள முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். அத்துடன் அனைத்து கட்சிக் கூட்டங்களில் தேசிய இனப்பிரச்சினை அரசியல் தீர்வு காண்பதற்கான 90 சதவீதமான விடயங்களில் இணக்கம் காணப்பட்டுள்ளது. இன்னும் 10 சதவீதமான விடயங்கள் முடிவு செய்யப்பட்ட பிறகே ஐ.தே கட்சியை அழைத்து இணக்கம் காணப்படும். அவ்வாறு இரண்டு பிரதான கட்சிகளான சுதந்திரகட்சிக்கும் ஐ.தே. கட்சிக்குமிடையில் இணக்கம் காணப்பட்டப் பிறகே த.த. கூட்டமைப்பை அழைக்க முடியும் என்றும் கூறியுள்ளார்.

மேற்படி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நிலைப்பாடும் அமைச்சர் திஸ்ஸவிதாரனவின் நிலைப்பாடும் ஒரே செய்தியையே கூறுகின்றன. அதாவது த.வி.பு. இயக்கத்துடனோ த.தே. கூட்டமைப்புடனோ தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகளை நடத்த அரசாங்கம் தயாராக இல்லை என்பதே அச்செய்தியாகும்.

அதேவேளை யுத்தத்தின் முடிவிற்கும் அனைத்து க்ட்சி கூட்டங்களின் முடிவிற்கும் காலவரையறை இருப்பதாக தெரியவில்லை. யுத்தத்தின் வெற்றிக் களிப்பை விட அழிவுகள் குறித்து சிந்திப்பது அவசியம். யுத்தத்தின் முடிவு என்பது மீண்டும் யுத்தம் ஏற்படுவதை தவிர்க்கும் வகையில் யுத்தம் ஏற்பட்டதற்கான காரணிகளை கண்டறிந்து அவற்றுக்கு தீர்வு காண்பதிலேயே தங்கியுள்ளது.

யுத்தத்தை நியாயப்படுத்தும் அனைவரும் மனிதாபிமான காரணங்களுக்காக யுத்தத்தை நடத்துவதற்காக தெரிவிப்பது வழமையாகிவிட்டது. இதனை தொடங்கி வைத்தது அமெரிக்காவின் அதன் மேற்கத்தேய கூட்டாளி நாடுகளுமாகும். குவைத்-ஈராக் யுத்தத்தில் அமெரிக்கா தலையிட்டு ஈராக்கை தாக்கியது. கொசேவாவில் யுத்த த்தை முன்னெடுத்தது . ஈராக்கையும் - ஆப்கானிஸ்தானையும் ஆக்கிர மித்தது அமெரிக்கா. இதற்கெல்லாம் மனிதாபிமான தலையீடு என்ற பெயரையே வைத்துக்கொண்டது .

பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான யுத்தங்களை இராணுவ நடவடிக்கைகளன்றி மனிதாபிமான ரீதியான நடவடிக்கைகள் என்று அமெரிக்கா பெயர் சூட்டியது. இதன் மூலம் ஆயுதப்போராட்டங்களின் நெறிமுறையான தன்மையை நிராகரிப்பதாக அமைந்து விட்டது. அடக்குமுறை அரசிற்கு எதிராகக் கிளர்ச்சி செய்யும் உரிமையையும் உரிமைக்கோரிக்கைக்கெதிரான ஆயுதரீதியான எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கும் உரிமையும் மறுக்கப்படுகிறது."பயங்கரவாதத்தை "ஒழிப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் பற்றிப் பேசும் "சர்வதேச சமூகம்"பயங்கரவாதத்திற்கு தெளிவான விளக்கமளிக்க தவறுகிறது. ஏனெனில் அதற்கு தேவையான ஆயுத நடவடிக்கைகளை அது ஊக்குவித்து வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

அரசின் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். விமானத்தாக்குதல்களில் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். யுத்த நடவடிக்கையின் விரிவாக்கமாகவே நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் கடத்தல்களும் கொலைகளும் நடைபெறுகின்றன. வாழ்க்கைச் செலவு என்றுமில்லாதவாறு கூடியமைக்கு காரணம் யுத்தத்திற்கு மிகையாக செலவழிப்பதே ஆகும் என்பது வெளிப்படை. இந் நிலையில் யுத்தம் நடைபெறவில்லை என்று கூறுவது எப்படி உண்மை ஆகும் .

ஜனாதிபதிகள் ஜே.ஆர்.ஜெயவர்தன, ஆர்.பிரேமதாஸ, டி.பி. விஜேதுங்க ஆகியோர் "பயங்கரவாதத்தை" ஒழிக்க யுத்தம் நடத்தினர். ஜனாதிபதி சந்திரிகா "சமாதானத்திற்கான யுத்தம்" செய்தார். எல்லாவற்றிலும் பேரழிவுகள் இடம்பெற்றதுடன் அவ்வப்போது சில இராணுவ வெற்றிகள் அவர்களின் அரசாங்கங்களுக்கு கிடைத்தன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் சில இராணுவ வெற்றிகள் இடம் பெறுவதை காணமுடிகிறது. ஆனால் அழிவுகளை அதிகமாக காணமுடிகிறது. இந்நிலையில் அவரின் யுத்தத்தை அவர் யுத்தமல்ல என்று கூறுவதுடன் மனிதாபிமான தலையீடு அல்லது பணி என்கிறார் .

இது யுத்தமல்ல என்று கூறிக்கொண்டு யுத்தம் செய்வது ஏகாதிபத்தியத்தின் மொழியும் நடத்தையுமாகும். யுத்தத்தை நடத்திக்கொண்டு மனிதாபிமான தலையீடு என்று கூறுவது ஏகாதிபத்திய பூகோளமயமாதலின் கீழ் அமெரிக்க ஜனாதிபதி புஷ் முன்னெடுத்த நடைமுறையாகும்.

சொந்த நாட்டின் ஒரு பகுதியில் யுத்தம் செய்யப்பட்டு மக்கள் மடிகின்ற போது எவ்வாறு அது மனிதாபிமான தலையீடாகும்? அம் மக்களின் அடிப்படைப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வில்லாதபோது எப்படி மனிதாபிமானப் பணியாகும்?

**ஆசிரியர் குழு**

# போரும் பொருளாதாரமும்

**போர் என்பது உயிர் உடைமைகளை** அழித்து மீளாத் துயரங்களில் ஆழ்த்த வல்லது. பொருளாதாரம் என்பது மக்களின் வாழ்வுக்கும் நாட்டின் வளர்ச்சிக்கும் அடிப்படையாக அமைவது. இவை இரண்டும் ஒன்றுக்கு ஒன்று எதிரானது. இருப்பினும் போர்கள் பொருளாதாரத்திற்காக நடாத்தப்பட்டு வந்துள்ளதை வரலாறு முழுவதும் காண முடியும். வேட்டையாடவும் உணவு சேகரிக்கவும் இருந்த சூழலில் மனிதக் குழுக்களிடையே மோதல்கள் இடம் பெற்று இருக்கின்றன. பின்பு மாடு, நிலம் ஏனைய செல்வங்களைக் கவர்வதற்கான போர்கள் நடைபெற்றன. கொலனிய நாடுகளைக் கைப்பற்றவும் வைத்திருக்கவும் விஸ்தரிக்கவும் போர்கள் நடந்தன. அவற்றின் அடிப்படை பொருளாதார நலன்களாகவே காணப்பட்டன. சமகாலத்தில் இடம் பெறும் ஒவ்வொரு ஆக்கிரமிப்புப் போரின் பின்னாலும் பொருளாதாரக் காரணங்கள் தெளிவாக இருக்கின்றன. ஈராக்கின் எண்ணெயும் ஆப்கானிஸ்தானின் இயற்கை எரிவாயும் தற்போதைய அமெரிக்காவின் பயங்கரவாத எதிர்ப்புப் போரின் அடிப்படையாகி நிற்பது ஒரு உதாரணம்.

உலக அளவிலும் பிராந்திய அளவிலும் நாடுகளை ஆதிக்கம் செய்ய முன்னெடுக்கும் ஒவ்வொரு போரும் பொருளாதார நலன் சார்ந்தவைகளே. இத்தகைய அண்மைக் கால போர்களும் பொருளாதார நலன்களும் முற்றிலும் முதலாளித்துவ ஏகாதிபத்தியத் தேவைகள் கொண்டதேயாகும். நாடுகளையும் மனிதர்களையும் சமத்துவமாகக் கொண்டு வாழ்வின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கில் வளங்களைப் பயன்படுத்தும் சூழ்நிலைகளில் போர்கள் அவசியமற்றுப் போகின்றன. லாபங்களை மேன்மேலும் குவிக்க மனிதர்களின் உழைப்பையும் நாடுகளின் வளங்களையும் அபகரிக்க முற்படுவதால் போர்கள் இடம் பெறுகின்றன. இவை நாடுகளுக்கிடையிலான போர்களுக்குரியனவாக உள்ள போதிலும் உள்நாட்டுப் போர்களும் அதே பொருளாதாரக் காரணிகளையே கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு நாடுகளின் சொத்து சுகம் படைத்த உயர் வர்க்கத்தினரே ஆளும் தரப்பினராக இருந்து வருகின்றனர். நிலவுடைமைக் காலம் கொலனியக்காலம் அதன் பின் இன்று வரையான சமகாலத்திலும் சொத்துடைய உயர் வர்க்கத்தினர் தமது பொருளாதார நலன்களையே முதன்மைப்படுத்தி பாதுகாத்து விரிவுபடுத்தி வந்துள்ளனர். அதற்காகவே ஆட்சி அதிகாரத்தையும் இறுகப்பற்றி நிற்கின்றனர்.

இவர்கள் நடைமுறையில் கொண்டுள்ள பொருளாதாரமும் அதற்கான அரசியல் பாதுகாப்பும் முற்றிலும் தனிச் சொத்துடைமை சார்ந்தது. ஏகப் பெரும்பான்மையான உழைக்கும் மக்களிடமிருந்து உறிஞ்சப்படும் உழைப்பின் மூலமாகவே சொத்துடைய வர்க்கம் சுகபோக வாழ்வு நடாத்துகிறது. அதேவேளை சகல தரப்பு உழைக்கும் மக்களும் வறுமை, வேலையின்மை, வீடின்மை, நோய்கள் மற்றும் வாழ்க்கையின் தேவைகளைப் பெறமுடியாத நிலையில் அறைகுறை வாழ்வும் அடி நிலை வாழ்வும் வாழ்ந்து வருகின்றனர். அவர்களது இத்தகைய நிறைவற்ற வாழ்வை மதங்களும் இலக்கியங்களும் நியாயப்படுத்தி பொய்யான கற்பிதங்கள் போதிக்கின்றன. அதேவேளை இத்தகைய சமுக யதார்த்தத்திற்கு மேலாக நாட்டின் பல்லின மக்களிடையே அவரவர் சார்ந்த இன, மத, மொழி, பிரதேச வேறுபாடுகளை கிளறிவிடுகின்றனர்.

உழைக்கும் மக்களைப் பிளவு படுத்தி அவர்களிடையே மோதல்களை உருவாக்கி அவற்றின் ஊடாகத் தமது சொத்து சுகம் ஆட்சி அதிகாரம் என்பனவற்றை நிலைநிறுத்திக் கொள்கின்றனர். அந்த வழியில் பெரும்பான்மயினர், இரண்டாயிரத்து ஐந்நூறு வருட நாகரிகமுடையவர்கள். புத்தபெருமானால் ஆசிர்வதிக்கப்பட்ட இனத்தவர்கள். இந்த நாட்டின் உரிமையாளர்கள், பௌத்த மதத்தைப் பேணிப் பாதுகாக்கும் தெய்வீகக் கடமை கொண்டோர் என்றவாறான இன மத மொழிப் புனிதங்களும் பழைமைவாத மேன்மைகளும் உயர்த்திப் பேசப்படுகின்றன. இவற்றை சாதாரண சிங்கள மக்கள் பேசிப் பெருமைப்படுவது மிகக் குறைவு. ஆனால் சொத்து சுகம் பெற்ற பௌத்த சிங்கள மேட்டுக்குடி வழி வந்தவர்களும் புதிய சொத்துச் சேர்ப்பவர்களும் மக்களின் கவனங்களைத் திசை திருப்ப இடைவிடாத இவ்வாறான கருத்தியல் சிந்தனைப் பரப்புரைகளைச் செய்து வந்துள்ளனர். இதற்காக துட்டுகெமுனு என்றும் பராக்கிரமபாகு என்றும் சிங்கள மன்னர்களை தேவைக்கேற்றாற் போல் மக்கள் முன்னிறுத்திக் காட்டுபவர். இத்தகைய இன மத மொழி பண்பாட்டு மேன்மை எனக் கொண்ட கருத்தியல் சிந்தனைப் போக்கே சிங்கள மக்கள் மத்தியில் கடந்த நூற்றாண்டின் முன்னிருந்தே பௌத்த சிங்களப் பேரினவாதமாக வளர்க்கப்பட்டு வந்தது. அவை தமிழ் முஸ்லிம் மலையகத்தமிழ் மற்றும் சிறுபான்மையினருக்கு எதிரான நடைமுறைப் பாகுபாடு புறக்கணிப்பு உரிமை மறுப்புக்களாக வளர்க்கப்பட்டன. இனவாதம் பேரினவாத வெறியாகவும் ராணுவ ஒடுக்கு முறையாகவும் நீட்சி பெற்றது. அதுவே தமிழ் மக்கள் மீதான பேரினவாத ஒடுக்குமுறை யுத்தமாகவும் திணிக்கப்பட்டது.

**வெகுஜனன்**

இவ்வாறு திணிக்கப்பட்ட யுத்தத்திற்குப் பின்னால் திட்டவட்டமான உயர்வர்க்கப் பொருளாதார நலன்கள் இருந்து வருகின்றன. யுத்தம் முழு நாட்டிலும் கடந்த மூன்று தசாப்தங்களில் பொருளாதார வளர்ச்சியை முடக்கியது என்பது உண்மை. ஆனால் சுரண்டும் அமைப்பாக உள்ள நிலவுடைமை வழிவந்த உயர் வர்க்க மேட்டுக் குடிகளினது பொருளாதார நிலைகளை அது பாதிக்க செய்யவில்லை. அல்லது அந்நிய ஏகாதிபத்திய சக்திகளுடன் இணைந்து முன்னெடுக்கும் பொருளாதாரத்தை சிதைக்கவில்லை. அதேவேளை யுத்தத்தால் பாதிப்படைந்த பொருளாதாரம் என்பது தொழிலாளர்கள் விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்களது வாழ்வாதாரப் பொருளாதார நிலைமைகளையே பாதிப் படையச் செய்து கொண்டது. யுத்தத்தின் மூலம் வரும் அத்தனை பிரச்சினைகளும் சுமைகளும் சாதாரண மக்களின் தலைகளின் மீதே சுமத்தப்படுகின்றன. அத்துடன் யுத்தம் செய்வதற்கான பல்லாயிரம் கோடி ரூபாய்களை சொத்து சுகம் பெற்றவர்களும் அவர்களின் பிரதிநிதிகளாக ஆட்சி அதிகாரம் செலுத்துவோரும் தமது சொந்தப் பணத்திலிருந்து கொடுப்பதில்லை. அவை மக்களிடமிருந்து பல வழிகளிலும் பெறப்படுகிறது. மக்கள் விரும்பிக் கொடுக்கவில்லை. பறித்துக் கறக்கப்படுகிறது.

ஏகப் பெறும்பான்மையான மக்கள் எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிகள் பிரச்சினைகள் இல்லாமைகள் போதாமைகள் என்பனவற்றுக்கான அடிப்படைக் காரணம் இனப் பிரச்சினையோ சிறுபான்மைத் தேசிய இனங்களோ அல்ல. நிலவுடைமை வழிவந்த ஏற்றத் தாழ்வான சுரண்டும் பொருளாதார அரசியல் சமூக அமைப்பேயாகும். வர்க்கங்களாக மக்கள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள பாகுபாடுகள் கொண்ட சமத்துவமற்ற ஒரு சமூக அமைப்பு பேணப்பட்டு வருகின்றது. அதனால் வர்க்கம் இனம் சாதி பெண்கள் என்ற நிலைகளில் அனைத்து மக்களிடையேயும் வேறு பாடுகளும் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற நிலைப்பாடுகளும் பேணப்படுகின்றன. இவை பொருளாதார ஏற்ற இறக்க அடிப்படையிலே தான் முன்னெடுக்கப்படுகின்றன.

இன முரண்பாடு வர்க்க முரண்பாட்டை மேவிப் பிரதான முரண்பாடாகி அதுவே யுத்தமாகித் தீர்வின்றித் தொடர்கின்றது. இதில் ஆளும் பேரினவாத முதலாளித்துவ ஆளும் வர்க்கம் தான் பிரதான எதிரியாகும் என்பதில் இரண்டு கருத்துக்கு இடமில்லை. அதே வேளை பேரினவாதத்தால் ஒடுக்கப்படும் தேசிய இனம் அதனை எதிர்த்துப் போராடுவதற்கு அந்த இனத்தின் மத்தியில் உள்ள சொத்து சுகம் பெற்ற உயர்வர்க்கத்தினரது வர்க்க நலன் காக்கும் கருத்தியல் சிந்தனை ஊடாக பயணிக்க முடியாது. அங்கும் ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் மத்தியில் உள்ள உழைக்கும் மக்களே முதன்மை பெற வேண்டும். அவர்களின் அபிலாஷைகளை நிராகரித்துச் செல்ல முடியாது.

எனவே ஒவ்வொரு போராட்டத்திலும் இடம் பெறும் ஒவ்வொரு போரிலும் வர்க்க நிலைகளும் பொருளாதார நலன்களுக்கு அடிப்படைகளாக இருந்து வருகின்றன என்ற சமூக யதார்த்தம் கண்டறியப்பட வேண்டும். அவ்வாறானால் மட்டுமே அனைத்து இன மத மொழி மக்களும் உழைக்கும் வர்க்க நிலையில் அணிதிரண்டு உயர்வர்க்க மேட்டுக்குடி ஆளும் வர்க்க சக்திகளை எதிர்த்துப் போராடி முரண்பாடுகளுக்கும் பிரச்சினைகளுக்கும் தீர்வுகளைக் கொண்டு வர முடியும்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# மாகாண சபைத் தேர்தல்களும் வன்முறைகளின் அதிகரிப்பும்

**இம்மாதப் பிற்பகுதியில் வடமத்திய சப்ரகமுவ** மாகாண சபைகளுக்கு தேர்தல் நடைபெற இருக்கின்றது. நியமனப்பத்திரம் தாக்கல் செய்த தினத்திலிருந்து இதுவரை 100க்கு மேற்பட்ட தேர்தல் வன்முறைகள் இடம் பெற்றிருப்பதாக சுயாதீன தேர்தல் வன்முறை பற்றிய கண்காணிப்பு நிலையம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. இதில் அதிக மானவை அனுராதபுர மாவட்டத்தில் இடம் பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது. அரசாங்கக் கட்சி ஆதரவாளர்கள் என்போரால் ஐக்கிய தேசியக் கட்சி ஜே.வி.பி என்பவற்றுக்கு எதிராகவே மேற்படி வன்முறைகள் நடாத்தப்பட்டுள்ளன. இக்கட்சிகளும் சந்தர்ப்பம் கிடைத்தால் வன்முறையைப் பயன்படுத்தாத சாதுக்கள் அல்லர். ஆனால் அரசாங்க அதிகாரமும் வளங்களும் குண்டர்களையும் அடியாட்களையும் வன்முறைகள் மீது உற்சாகம் கொள்ள வைத்துள்ளது. அடிதடியில் பெயர் பெற்ற அமைச்சர் மேவின் சில்வாவே களத்தில் நின்று கலக்கி வரும் செய்திகளைப் பார்க்க முடிகிறது. மேலும் திட்டமிட்ட வழிகளில் உருவாக்கப்பட்ட குண்டர்களும் பாதாள உலகக் கும்பல்களும் தேர்தல் வன்முறைகளில் சம்மந்தப்பட்டும் வருகின்றன. பொலிஸ் துறையினர். அரசாங்கப்பக்கம் சார்பாகவே நடந்து வருகின்றனர் என்ற குற்றச்சாட்டு உரத்துக் கூறப்படுகிறது. ஜே.வி.பியினர் மீதான தாக்குதல்களைக் கண்டித்து அக் கட்சி கடுமையான தொனியில் பேசி வருகின்றது. ஆனால் இதே ஜே.வி.பி. முன்பு அரசாங்கத்துடன் இணைந்து நின்ற வேளை நடந்து கொண்ட நடைமுறைகள் பற்றியும் மக்கள் பேசிக் கொள்கிறார்கள்.

தேர்தலுக்கு முன்பு வன்முறைகள் மூலம் தமது வெற்றியை வேண்டி நிற்கும் இக் கும்பல்கள் தேர்தல் தினத்தன்று கள்ள வாக்குகள் அதிகாரிகளின் துணையுடன் செய்யும் முறைகேடுகள் தாராளமாகவே இடம் பெறும். இறுதியாகப் பெட்டி மாற்றல்களும் நடைபெறும். இவையாவும் அண்மைக்காலம் வரை பாராளுமன்ற ஜனநாயகத்தின் கேடுகெட்ட பண்புகளாக இருந்து வந்துள்ளன என்பது மறுக்க முடியாதவைகளாகும்.

இத் தேர்தலில் வடமத்திய மாகாண சபையின் ஐ.தே. கட்சியின் வேட்பாளர் பற்றிச் சில வார்த்தைகள் கூற வேண்டும். அவர் மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா. அவரது தேர்தல் பிரசாரத்தின் முக்கிய பேச்சு தனது ராணுவ சேவைக் காலத்தினம் வீரதீரத்தைப் பற்றிய தாகும். வடக்கிலும் கிழக்கிலும் "பயங்கரவாதத்தை" எதிர்த்து தான் வீரதீரத்துடன் போராடிய கதைகளை ஒவ்வொரு கூட்டத்திலும் கூறிவருகிறார். இந்த ராணுவ அதிகாரி பயங்கரவாத ஒழிப்பின் பெயரால் ஒன்றுமறியாத எத்தனை தமிழ் மக்களைக் கொன்றொழித்தார் என்பது இரகசியமல்ல. ஒரே ஒரு உதாரணம். இவரது கட்டுப்பாட்டின் கீழ்த்தான் வடக்கில் 600 பேர் காணாமல் போயினர். அவர்களில் பலர் செம்மணியில் புதைக்கப்பட்டதாகவும் நம்பப்படுகிறது. ஏற்கனவே செம்மணியில் தோண்டி எடுக்கப்பட்ட எலும்புக் கூடுகள் இந்தப் புண்ணியவானின் கதையை உறுதிப்படுத்தி நிற்கின்றன. இவ்வாறு பச்சைக் கட்சியும் நீலக் கட்சியும் பேரினவாத ராணுவ ஒடுக்குமுறையில் ஒன்றுக்கொன்று சளைத்தன அல்லவே. இவர்கள் தான் ஜனநாயகம் பேசித் தேர்தலில் வாக்குச் சேகரித்து வருகின்றனர்.

# சாதியம் பேசுதடி சிந்தை அழியுதடி

இலங்கையில் சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும் என்னும் நூல் இரண்டாவது பதிப்பாக அண்மையில் வெளிவந்துள்ளது. இந்நூல் பற்றிய ஒரு பயன்தரும் மதிப்புரையை செல்லக்கண்ணு என்பவர் தினக்குரல் வார இதழ் மூலம் எழுதியிருந்தார். அடுத்து ஞானம் சஞ்சிகையின் யூலை மாத இதழில் கலாநிதி துரை மனோகரன் எழுதத்தூண்டும் எண்ணங்கள் என்ற தனது பத்திக்குரிய பக்கங்களில் இந்நூல் பற்றிய சுருக்கமான ஆனால் கனதியான பார்வையை செலுத்தியிருந்தார். அவர் நூல் பற்றி எடுத்துக் கூறியதுடன் நில்லாது சாதியத்தின் சமகால வெறி உணர்வுகள் எப்படி எந்நெந்த மட்டங்களில் வெளிப்படுகின்றன என்பதையும் தெளிவுறக் கூறி இருந்தார். குறிப்பாகக் கற்றோரும் கற்போரும் கூடியிருக்கும் பல்கலைக் கழகங்களில் சாதியம் ஒரு "பிரம்மாஸ்திரமாக" பயன்படுத்தப்படுவதையும் சுட்டிக் காட்டியிருந்தார். அவரது சாதிய மனத்தடையற்ற துணிவான கருத்து அதுவும் ஞானம் சஞ்சிகையில் வெளிவந்திருப்பது வரவேற்க வேண்டியதும் பாராட்டப்பட வேண்டியதுமாகும்.

மேற்படி சாதியமும் அதற்கெதிரான போராட்டமும் நூல் வரவானது சிலருக்கு கோபத்தையும் வேறு சிலருக்கு விழுங்கவும் முடியாத கக்கவும் இயலாத நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. சில சாதியக் கல்விமான்கள் மிகத்தணிந்த குரலில் "இந்தநேரத்தில் இந்த நூலை ஏன் இரண்டாவது பதிப்பாக வெளியிட வேண்டும். இப்ப சாதி என்பதெல்லாம் முடிந்துபோன விடயமாகி விட்டது" என்று கூறிக் கொள்வதையும் கேட்க முடிகிறது. புலம்பெயர்ந்த நாடுகளிலும் சாதி உண்டு என்றும் இல்லை அது மறைந்து விட்டது என்றும் விவாதங்கள் நடந்த வண்ணம் உள்ள சூழலில் இந்நூல் அவ் விவாதத்தை மேலும் சூடாக்கி நிற்கிறது. எவ்வாறாயினும் சாதியம் இன்னும் உயிர்ப்போடுதான் இருக்கிறது. அது தமிழர் போகுமிடம் கூடுமிடம் எங்கும் வியாபித்து உள்ளொளி வீசும் ஒன்றாய் இருந்து வருகிறது. அண்மை ஒரு உதாரணம் படியுங்கள்.

அண்மையில் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் மூத்த தமிழ்ப் பேராசிரியரைக் கௌரவிக்கவென விழாவிற்கான ஒரு குழுவைச் சக ஆசிரியர்கள் அமைத்தார்கள். அதில் பல்கலைக்கழக ஆரம்ப போதனாசிரியரான ஒரு இளம் கல்வியாளரும் சேர்க்கப்பட்டார். அவர் சமூக ஏற்றத்தாழ்வு நிலையில் ஒரு தாழ்த்தப்பட்ட சமூகப் பிரிவைச் சேர்ந்தவர். இதை அறிந்த ஒரு முதுநிலை விரிவுரையாளரால் அதைப் பொறுக்க முடியவில்லை. நேராக கௌரவத்திற்குரியவரின் வீட்டுக்குச் சென்று "அந்த அம்பட்டப் பிள்ளையையும் தூக்கி கொமிற்றியிலை போட்டிருக்கு. நான் உதிலை இருந்து விலகப் போறன் "என்று அமளிகிளம்பிச் சென்றாராம். அவரது இந்த சாதிய வக்கிர நிலைப்பாடு பேராதனையில் ஒரு மினிச் சூறாவளியை ஏற்படுத்தியது. இவர் வடபுலத்தைச் சேர்ந்த சாதித் தடிப்புமிக்க இடத்திலிருந்து வந்தவர். இந்தக் கலாநிதி மகேசனார் அடிக்கடி கொழும்பில் ஆய்வுரை சிறப்புரை நிகழ்த்தச் சிலரால் அழைக்கப்படுவது வழக்கம். பாவம் இப்போது தனது பல்கலைக்கழகப் பட்டத்திற்கு முன்னால் மற்றொரு சமூகப் பட்டப் பெயரையும் சேர்த்துள்ளார். அது சாதியக் கலாநிதி என்பதாகும். வடபுலத்து தமிழரிடையே படிந்துபோன சாதிய அழுக்கை அந்த சிவனார் வந்தாலும் இந்த மகேசனார் போன்றவர்களிடமிருந்து அகற்ற முடியாது என்பதை 2008ல் அதுவும் பேராதனையின் பல்கலைக் கழகத்தில் நிறுவி இருக்கிறார்.

இது வெளியில் வெளிவந்த ஒரு சம்பவம். ஆனால் காதோடு காது வைத்தாற்போல் அல்லது தங்களுக்குள் தாங்களாகவே முன்னெடுத்து வரும் சாதிய வக்கிரச் சம்பவங்கள் பல நடந்தேறுகின்றன. சாதியம் செத்துவிட்டது என்றும் சிலர் தேவையில்லாது அதனைத் தூக்கிப் படிக்கின்றனர் என்றும் கூறுவோருக்கு மேற்படி சம்பவம் சமர்ப்பணம்.

-நமன் -

# பெண்களின் போராட்டப் பங்களிப்பும் அரசியல் பிரதிநிதித்துவமும்

"**எங்களுடைய பெண்கள் இயக்கம்** ஆண்களுக்கு எதிரானதல்ல. அது ஒடுக்கு முறை நடைமுறைகளைகொண்ட நேபாள பழமைவாத சமூகத்திற்கு எதிரானதாகும். இத்தகைய சமூகத்தில் 300 பெண்கள் பாராளுமன்றத்திற்கு வந்தாலும் அதனை மாற்றியமைக்க முடியாது. உண்மையான மாற்றம் போராட்டம் மூலமே சாத்தியமாகும்."

இவ்வாறு நேபாள கம்யூனிஸ்ட் கட்சியின் பெண்கள் இயக்கத்தின் அரசியல் நிர்ணயசபைக்குத் தெரிவான பெண் உறுப்பினர் ஒருவர் கூறினார்.

அண்மையில் நேபாளத்தில் இடம் பெற்ற அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தலில் சிறுபான்மை இனத்தவர் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பின்தங்கிய மக்கள் பிரிவினரின் பிரதிநிதிகள் பலர் வெற்றி பெற்றனர். குறிப்பாகப் பெண்களுக்குரிய பிரதிநிதித்துவம் மேற்படி சபையில் 33.21 வீதமாக உள்ளது. அதாவது 575 உறுப்பினர்கள் கொண்ட அரசியல் நிர்ணய சபையில் 191 பேர் பெண் பிரதிநிதிகளாவர். இவர்களில் 30 பேர் நேரடித் தேர்தல் மூலமும் மிகுதி 161 பேர் விகிதாசாரத் தேர்தல் அடிப்படையிலும் தெரிவாகியுள்ளனர். ஆனால் 1999ம் ஆண்டு பழைய பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற பெண்கள் வெறும் 6 சதவீதம் மட்டுமே அதாவது 205 உறுப்பினர்கொண்ட பாராளுமன்றத்தில் 12 பேர் மட்டுமே பெண்களாக இருந்தனர்.

ஆனால் அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தலில் மா ஓவாத கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளர்களாக 74 பேர் போட்டிக்கு நின்றனர். 39 பெண்கள் நேபாளக் காங்கிரஸிலும் 36 பேர் ஐக்கிய மாக்ஸிஸ்ட் லெனினிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியிலும் 13 பெண்கள் மாதேசிக் கட்சியிலும் வேட்பாளர்களாக இருந்தனர். இத்தகைய பெண் வேட்பாளர்கள் பல முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களைத் தோற்கடித்து வெற்றி பெற்றனர். இவ்வாறு வெற்றி பெற்ற பெண் வேட்பாளர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் மா ஓவாத கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களாவர். அவர்களில் ஒருவர் ஹகாற்றி மாகர் என்பவர். அவரது கணவர் முடியாட்சியை எதிர்த்த மா ஓவாதிகள் நடாத்திய போராட்டத்தில் தியாகியானார். தனது கணவனது இறப்பிற்கு பின்பும் கைக்குழந்தையுடன் நேபாளத்தின் பல பிரதேசங்களிலும் சென்று மக்கள் யுத்தப் போராட்டப் பணிபுரிந்த ஒரு போராளியாவார். அவரைப் போன்ற பெண்களின் பிரதிநிதிகள் நேபாளத்தின் 12.5 மில்லியன் பெண்களுடைய உரிமைகளுக்கான பிரதிநிதிகளாக உள்ளனர். அவர் கூறுகையில் 33 வீதத்துடன் நின்றுவிடாது எதிர்காலத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் 50 வீதமாக உயர வேண்டும் என்றார்.

பெண்கள் பிரதிநிதித்துவம் என்பது வெறும் பதவிப் பிரச்சினை அல்ல. நடப்பில் இருக்கும் சமூக அமைப்பில் உள்ள பெண்கள் மீதான ஒடுக்கு முறைகள் உட்பட அனைத்து ஒடுக்குமுறைகளுக்கும் எதிராகப் போராடும் கொள்கையையும் நடைமுறைகளையும் கொண்டிருக்க வேண்டும் என்பதே பிரதானமானதாகும்.

மேற்படி பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை இலங்கை இந்திய நாடுகளில் ஒப்பிட்டுப்பார்த்தால் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடு போன்றதாகும். குறிப்பாக இந்தியாவில் இதுவரை பெண்களுக்கான 33 சதவீத ஒதுக்கீடு சட்டமாக்கப் படவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும். ஜனாதிபதி என்ற பொம்மைப் பதவிக்கு ஒருவரை நியமித்து விட்டு தம்பட்டம் அடிக்கும் பிற்போக்கு நிலைதான் அங்கு காணப் படுகிறது. இங்கும் சிறிமாவோ சந்திரிகாவைக் காட்டி பெண்களுக்கு அந்தஸ்து கிடைத்ததாகப் பெருமை பேசுவோர் உள்ளனர். ஆனால் நேபாளத்தின் பத்து வருட ஆயுதப் போராட்டமும் கிளர்ந்தெழுந்த ஐந்து பிரதான வெகுஜன எழுச்சிப் போராட்டங்களும் பெண்களின் பங்களிப்பைச் சாத்தியமாக்கிக் கொண்டன. நேபாளத்தில் மா ஓவாதக் கட்சியின் பெண்கள் இயக்கம் சகல நிலைகளிலும் ஒடுக்கப்பட்டு வந்த பெண்கள் மத்தியில் சமூக மாற்றம் நோக்கிய வெகுஜன அரசியல் வேலைகளை முன்னெடுத்து வந்ததன் விளைவே அங்கு பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்க காரணமாகும்.

# ஜீ 8 இற்கு எதிரானவர்கள் மீதான தாக்குதலுக்கு கண்டனம்

**ஜீ 8 நாடுகளின் 34 வது மாநாடு ஜப்பானின்** வட தீவுகளில் ஒன்றான கொக்கைடோவில் இம்மாதம் 7ஆம் திகதி முதல் 9 திகதிவரை நடைபெற்றது ஜீ 8 என்ற சர்வதேச அமைப்பானது கனடா, பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி, ஜப்பான், பிரிட்டன், அமெரிக்கா, ரஷ்யா, ஆகிய 8 செல்வந்த நாடுகளின் அமைப்பாகும். அதன் மாநாடு வருடாந்தம் நடைபெறும்.

இந்த நாடுகள் உலக வருமானத்தில் 65 வீதத்தை கொண்டுள்ளன. பிரதான இராணுவ பலம் பொருந்தியதும், அணுவாயுதங்களை கொண்ட நாடுகளும் இதில் அடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவையே ஏகாதிபத்திய உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலை பிரதானமாக முன்னெடுக்கும் நாடுகளாகும். ஐ. நா. பாதுகாப்புச் சபையின் நிரந்தர அங்கத்துவம் கொண்டுள்ள 4 நாடுகளும் இவ் அமைப்பில் உள்ளன. எனவே இதன் மாநாடுகள் நடைபெறும் போது சர்வதேச ரீதியாக ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்துவதுண்டு.

இம்முறை ஜப்பானில் இம்மாநாடு நடைபெற்ற வேளை உலக நாடுகளிலிருந்து வந்திருந்த ஏகாதிபத்திய எதிர்ப்பு செயற்பாட்டாளர்கள் ஜப்பானில் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். அவ்வார்ப்பாட்டக்காரர்கள் மீது ஜப்பானியப் பொலிஸார் மூர்க்கத்தனமாக தாக்கியதால் பலர் பாரிய காயங்களுக்குள்ளானார்கள்.

ஆர்ப்பாட்டக்காரர்களின் மீதான தாக்குதலை ஏகாதிபத்திய எதிர்ப்பு அமைப்புகளின் சர்வதேச குழு கண்டித்துள்ளது. அக்குழுவின் செயலாளரான மானிக் முக்கர்ஜி (இந்தியாவிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளில் ஒன்றான இந்திய சோஷலிஸ ஐக்கிய நிலையத்தின் வெளிவிவகார செயலாளர்) கண்டன அறிக்கையை வெளியிட்டுள்ளார். இவ்வமைப்பின் தலைவர் அமெரிக்காவின் முன்னாள் சட்டமா அதிபர் ராம்சே ஆவார். இச் சர்வதேசக்குழுவில் இலங்கையின் சார்பில் புதிய-ஜனநாயக கட்சி அங்கம் வகிக்கிறது. ஜீ 8 அமைப்பு உலக கைத்தொழில் நாடுகளின் தேவையைக் கருதி 1973 இல் ஏற்பட்ட சர்வதேச எரிபொருள் தட்டுப்பாட்டை அடுத்து அமைக்கப்பட்டது. தற்போது ஏகாதிபத்திய உலகமய மாதலை இயக்கும் நாடுகளாக இருக்கின்றன.

அந்நாடுகள் அவற்றின் தேவைக்காக இந்தியா, பிரேசில், சீனா, மெக்சிக்கோ, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளையும் ஜீ 8 அமைப்பில் இணைத்துக்கொள்ள ஆர்வம் கொண்டுள்ளன.

ஜீ 8 நாடுகளுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் நியாயமானதும் நீதியானதும் ஆகும் உலக மக்கள் எதிர் நோக்கும் வறுமை வேலையின்மை வீடின்மை உட்பட அன்றாடம் அனுபவிக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கும் இவ் ஜீ 8 நாடுகளே மூலாதாரமாக இருந்து வருகின்றன. அவற்றை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்வது முற்றிலும் நியாயமானதாகும். அத்தகைய ஆர்ப்பாட்டத்தையே ஏகாதிபத்திய யப்பானின் பொலிஸ் படை மிருகத்தனமாக தாக்கியுள்ளது.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# கருணாநிதியின் மீனவ நண்பன் நாடகம் கலைஞர் பேச்சு விடிந்தால் போச்சு



**கச்சதீவைத் திருப்பிக்** கேட்கப் போவதாகக் கருணாநிதி அறிக்கை விட்டாலும் விட்டார். தமிழகத்து மீனவர்களை மட்டுமே அவர் முட்டாளாகப் பார்க்கிறார் என்றால் அவர்களை முந்திக் கொண்டு நமது பத்திரிகைக்காரர்கள் அல்லவா முட்டாள்களாகப் போட்டி போடுகிறார்கள்.

தமிழக மீனவர்கள் மீது தொடுக்கப்படுகிற தாக்குதல்களை இலங்கை அரசாங்கம் நிறுத்தாவிட்டால் 1974ல் இந்திரா காந்தி அரசாங்கம் இலங்கைக்கு விட்டுக்கொடுத்த கச்சதீவைத் திருப்பிக் கேட்கப் போகிறதாகக் கருணாநிதி மிரட்டியிருக்கிறார். இந்த மிரட்டல் ஏன் என்று இந்தியப் பிரதமருக்குத் தெரியும். அவரது எசமானியான சோனியா காந்திக்கும் தெரியும். அவர்கள் எல்லாரையும் உள்ளங்கையில் வைத்திருக்கிற அமெரிக்க ஏகாதிபத்தியத்தியத்திற்கும் தெரியும்.

தமிழக மீனவர்கள் இலங்கை கடற் படையினரால் துன்புறுத்தப்படுவதும் கொல்லப்படுவதும் நீண்ட காலமாகவே நடைபெறுகிறது. இரண்டு நாடுகளதும் படையினருக்கும் காவற் துறையினருக்கும் இது ஒரு விதமான இழுபறி விளையாட்டு. நடுவில் மாட்டிக் கொண்டு தவிப்போர் ஏழை மீனவர்கள். அவர்களது பாதுகாப்பும் கச்சதீவுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. கருணாநிதி மக்கள் எல்லாரையும் முட்டாள்கள் என்று நினைக்கலாம். ஆனால் மக்கள் அவரையோ ஜெயலலிதாவையோ தெரிவு செய்வது இருவரில் எவரையும் நம்பி அல்ல. தேர்தல் மூலம் எதுவும் மாறப் போவதில்லை என்று தெரிந்து கொண்டே பலர் உள்ளதில் மோசமானதை நிராகரிக்கிறார்கள்.

கருணாநிதிக்கு மீனவரின் பிரச்சினை நினைவுக்கு வர இரண்டே காரணங்கள் இருந்தன. அவர் அக்கறை காட்டத் தவறியதால் நடிகர் விஜயகாந்த் ஜெயலலிதா போன்றோர் அவரை முந்திக் கொண்டனர்.மீனவர் மீதான இலங்கை கடற்படையின் வன்முறை தமிழக மீனவர்களிடையே மட்டுமன்றிப் பிறர் நடுவிலும் கொதிப்பை ஏற்படுத்தியுள்ளது. மீனவர்கள் பல நாட்களாகப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்ட பின்னரே கருணாநிதிக்கு அவர்கள் பற்றிய கவனம் வந்துள்ளதற்குக் காரணம் தொடர்ந்தும் புறக்கணித்தால் தி.மு.க.வின் நேச அணியில் இருந்து கொண்டு விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு என்று சாட்சி கொடுக்கப்படுகிற நெடுமாறன் போன்றோருக்குச் சங்கடமாகித் தனது அரசியல் சாம்ராச்சியம் சிறிது ஆட்டங்காணக்கூடும் என்பதல்ல. ஆனானப்பட்ட ராமதாசையே போனால் போ என்று விரட்டியவருக்கு நெடுமாறன் ஒரு பொருட்டா? எதிரணியினர் மீனவர் பிரச்சினையை முன்வைத்து தம்மை வளர்த்துக் கொள்ளுவதைக் கண்டதாலேயே இந்த அக்கறை. இந்த அக்கறை ஏன் இந்த நேரத்தில் வருகிறது என்று யோசித்தால் அதைவிட முக்கியமான இரண்டாவது காரணம் விளங்கும். மத்திய அரசில் காங்கிரஸ் ஆட்சி கவிழாமல் கவனித்துக் கொள்ள அவர் உதவினாலும் கம்யூனிஸ்ற் கட்சிகள் தமது ஆதரவை விலக்கிக் கொண்ட பிறகு அந்த ஆட்சி மேலும் பலவீனமடையும் என்பது உறுதியாகத் தெரியத் தொடங்கிவிட்டது. மிகவும் பலவீனப்பட முதலே ஒரு தேர்தலை நடத்தக் காங்கிரஸ் தலைமை முடிவெடுக்கலாம். எனவே இவ்வளவு காலமும் டில்லிக்கு வற்புறுத்தல் கொடுக்கிறேன் என்று சொல்லி இழுத்தடித்து அணாப்புவது தொல்லையில் மாட்டிவிடும் என்பது மற்றக் காரணம்.

ஆனாலும் கச்சதீவுக்கும் மீனவர் பிரச்சனைக்கும் என்ன உறவு? இவ்வளவு காலமும் சொன்ன கதைகளைக் கேட்டு மீனவர்கட்கு அலுத்துவிட்டது. தி.மு.க. ஆதரவு மீனவத் தலைவர்கட்குத் தமது சமூகத்தினரிடம் முகங்காட்ட இயலாத நிலைமை உருவாகி வந்துள்ளது. எனவே தான் அதிரடியாக இலங்கை அரசாங்கத்துக்கும் சவால் விடுகிற மாதிரி ஒழுங்காக நடந்து கொள்ளாவிட்டால் கச்சதீவை பறிப்பேன் என்று பூச்சாண்டி காட்டுகிறார்

கச்சதீவைத் திருப்பிக் கேட்க வேண்டும் என்று கோபாலசாமி பல காலமாகக் கேட்டு வந்துள்ளார். விஜயகாந்தும் தவறு என்கிறார். கொடுத்தது தவறு என்று இவர்கட்கு முதலே சொன்னவர் ஜெயலலிதா. ஒவ் வொருவருக்கும் ஒவ்வொரு நோக்கம். கொடுத்த போது எதேச்ச திரமாக நடந்து கொண்டிருந்த இந்திராகாந்தி தனது ஆட்சியைக் கலைத்தால் எம்.ஜி. ராமச்சந்திரன் முதல்வராக வரலாம் என்ற பயத்தில் வாயை மூடிக்கிடந்தவர் கருணாநிதி. அது போகக் கச்ச தீவு என்ன சேது சமுத்திரமா கோடிக் கோடியாகக் கொள்ளையடிக்க?

கச்சதீவைத் தமிழகம் முழுவதுமே ஒன்று திரண்டு கேட்டாலும் அதை இந்திய அரசு திருப்பி எடுப்பது எளிதல்ல. கச்சதீவு பற்றிய உடன்பாடு இரண்டு நாடுகளின் ஆட்சியாளர்களிடையிலான கடலெல்லை தொடர்பான ஒரு உடன்படிக்கை.அதை விட வேறு விடயங்களும் சேர்ந்தே அந்த உடன்படிக்கை 1974ல் ஒப்பமிடப்பட்டது. கச்சதீவை இலங்கை பெற்றபோது நமது மீனவர்கட்கு இந்தியக்கடற்பிரதேசத்திற் சென்று மீன் பிடிப்பதற்கு இருந்து வந்த உரிமை தாரை வார்க்கப்பட்டுவிட்டது .கச்ச தீவை இந்தியாவினதாக்க உடன்படிக்கை முழுவதும் செல்லுபடியற்றுப்போக வேண்டும் அல்லது புதிதாகப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்க வேண்டும். இலங்கையை "சீனாவிடமிருந்தும் பாக்கிஸ்தானிடமிருந்தும் காப்பாற்ற வேண்டி இலங்கை அரசுக்கு ராணுவ உதவி வழங்கி வருகிற மன் மோகன் சிங் ஆட்சி அதற்கு ஆயத்தமாக இருக்குமா?

கருணாநிதி பேச்சு விடிந்தால் போச்சு என்று மீனவர்கட்கும் தெரியும். எனினும் போராட்டத்தை மேலும் விரிவு படுத்துவதற்கு அவர்கள் எவ்வளவு தூரம் ஆயத்தமாயுள்ளனர் என்பது ஒரு பிரச்சினை. இது வயிற்றுப்பிழைப்புக்கில்லாத ஏழைகளின் பிரச்சினை. தமிழகம் பரவிய திட்டமிட்ட ஒரு பெரும் இயக்கமாக இதை வளர்த்தெடுக்க வாய்ப்புக்கள் போதாமலும் பெரிய கட்சிகளின் குறுக்கீட்டால் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளும் காரணமாகக் கருணாநிதியே தலைமைதாங்கி போராட்டம் ஒருநாள் நடத்தியுள்ள சூழ்நிலையிற் பின்வாங்குவதை விட மீனவர்கட்கு முன் தெரிவுகள் இல்லை. இன்னுஞ் சில போராட்டங்களின் பின்னரே அவர்கள் தங்களது தலைமைகள் பற்றிய பாடங்களை முழுமையாக கற்பர்.

இவையெல்லாம் தமிழகத்தில் சகஜமாகிவிட்ட அரசியற் கூத்துக்கள். அங்கே ஒன்றும் நடக்கப் போவதில்லை சில நாட்களுக்கு வேண்டுமானால் இலங்கை கடற்படை கொஞ்சம் விட்டுப்பிடிக்கலாம். அதற்கேற்பத் தமிழகத்தில் விடுதலைப் புலிகலின் செயற்பாடுகட்கு எதிரான கடும் நடவடிக்கைகள் சிலதை எடுக்கலாம். பிறகு எல்லாம் வழமைக்குத் திரும்பிவிடும்.

என்றாலும் நமது வார ஏடுகள் முன்பக்கத்தில் பிரதான செய்தியாக வெளியிடும் அளவுக்குக் கருணாநிதி என்ன சொல்லியிருக்கிறார். கச்சதீவை மீட்டு அங்கே தமிழீழம் பிரகடனஞ் செய்யப் போகிறதாகச் சொன்னாரா? அல்லது அங்கு இலங்கைத் தமிழரைக் காப்பதற்கான ஒரு தளம் அமைக்கப் போவதாகச் சொன்னாரா? கருணாநிதி எப்பேர்ப்பட்ட மோசடிப் பேர்வழி என்று இவர்கட்குத் தெரியாதா? அவரது அரசியலில் தில்லுமுல்லுகள் இங்கே தெளிவாக அம்பலமாகிவருகிற வேளையில் அவர் இலங்கையின் தேசிய பிரச்சனையில் யார் தரப்பில் நிற்கிறார் என்பது தெட்டத் தெளிவாகியுள்ள வேளையில் ஏனிந்த வெற்று வேட்டுச் சமாச்சாரத்துக்கு இவ்வளவு முக்கியத்துவம் ?

யாரை வைத்து யார் யாரை ஏய்க்கப் பார்க்கிறார்கள் ? இலங்கைத் தமிழ் மக்கள் இந்த ஏமாற்றுத் தலைமைகளை எந்தளவிற்கு நம்புவது என்பதே பிரச்சினை.

நரசிம்மா-

# மனிதாபிமானத்தை காவு கொள்ளும் காப்புறுதிகள்

**காப்புறுதிக் கம்பெனிகள் எமது நாட்டு** மக்களிடமிருக் கும் மிச்சசொச்ச பணத்தையும் பறித்துக்கொள்ளும் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றன. அதுவும் மீதமாக இருக்கும் மனித உறவுகள் மீதான நம்பிக்கைகளை முற்றாக இல்லாமல் செய்யும் பிரசாரங்களை மேற்கொண்டே மக்களை அவர்களின் வாடிக்கையாளர்களாக்கிக் கொள்கின்றனர்.

நீங்கள் பிள்ளைகளால் கைவிடப்படலாம், பெற்றோர்களால் கைவிடப்படலாம், நீங்கள் அகால மரணமடையலாம் உங்களையும் உங்களை தங்கி வாழ்வோரையும் பாதுகாக்க காப்புறுதி செய்து கொள்ளுங்கள் என்று பிரசாரம் செய்கின்றன. தாத்தாமார், பாட்டிமார், அப்பா, அம்மா, தம்பி, தங்கை, அண்ணா, அக்கா, குழந்தைகள் பிறக்கவிருக்கும் குழந்தைகள் எவரையும் விட்டு வைப்பதாக இல்லை. எல்லாக் குடும்ப இரத்த உறவுகளின் பேராலும் காப்புறுதி செய்வதாக மக்களுக்கு ஆசைக்காட்டி பணத்தை கறந்து கொள்கின்றன.

ஒரு தனி மனிதனுக்கு இருக்கும் நம்பிக்கைகள் அவர்களின் உறவுகள் சூழல் பொது அமைப்புகள் தான் அந்த இடத்தைப் பிடித்துக் கொள்வதில் காப்புறுதிக் கம்பெனிகள் போட்டிப் போட்டுக் கொண்டிருக்கின்றன. ஒரு மனிதன் அவனது எல்லா உறவுகளாலும் தொடர்புகளாலும் கைவிடப்படுவான். அதனால் அவன் எல்லாவித நம்பிக்கைகளையும் தொலைத்துவிட்டு அவனிடம் இருக்கும் மிச்ச சொச்ச பணத்தையும் காப்புறுதி கம்பெனிகளிடம் கொடுத்தால் அக்கம்பெனிகளே கைவிடப்படுபவர்களின் பாதுகாவலனாகி விடும் என்ற நம்பிக்கையே ஊட்டப்படுகிறது.

தொழில் நேரத்தில் ஏற்படும் விபத்துகள் ஆபத்துக்களினால் பாதிக்கப்படுகின்ற தொழிலாளர்களுக்கு நட்ட ஈடு வழங்குவதற்கு முதலாளிகளை பொறுப்புடையவர்களாக்குவதற்காக அறிமுகம் செய்யப்பட்டதே காப்புறுதித் திட்டமாகும். பின்னர் அது விவசாயத் துறையில் வர்த்தகத்துறையில் இருப்போருக்கும் விரிவாக்கப் பட்டது. சோஷலிச நாடுகளுக்கு மாற்றென அமைக்கப்பட்ட நலன்புரி அரசாங்கங்களினால் நலன்புரித்திட்டங்களினுடாக காப்புறுதி திட்டங்கள் மேலும் விஸ்தரிக்கப்பட்டது.

தாராள பொருளாதார முறைமையின் கீழும் நவதாராள பொருளாதார முறையின் கீழும் காப்புறுதிக் கம்பெனிகள் அமைக்கப்பட்டு காப்புறுதித்துறை பாரிய வர்த்தகமாக வளர்ச்சியடைந்துள்ளது. இன்றைய ஏகாதிபத்திய பூகோள மயமாதல் சூழ்நிலையில் காப்புறுதித்துறை லாபகரமான பல்தேசிய கம்பெனிகளுக்குரிய வியாபாரமாகியுள்ளது.

ஒரு சதமும் முதலீடுமில்லாது காப்புறுதி வியாபாரத்தில் கோடீஸ்வரர்களாகியவர்கள் பற்றிய கதைகள் போய் ஒரு முதலீடுமில்லாது தொழிலை ஆரம்பித்த மக்களிடமிருந்து காப்புறுதிப்பணத்தை சேகரித்து காப்புறுதி கம்பெனிகளிடம் குவிக்கும் தரகர்களான காப்புறுதி முகவர்கள் லட்சாதிபதிகளாகிய கதைகள் பேசப்படுகின்றன. ஆனால் காப்புறுதிகளை மீளப்பெறுகின்றபோது காப்புறுதி செய்தவர்களோ அவர்களது குடும்பத்தை சேர்ந்தவர்களோ படுகின்ற கஷ்டங்கள் பற்றி யாரும் கதைப்பதில்லை. காப்புறுதிப் பணத்தை மீளப் பெறுவதற்காக சாதாரண வசதியில்லாதவர்களும் கூட பெருந்தொகை பணத்தை செலவழித்து வழக்காட வேண்டியிருப்பது பற்றி யாரும் கவலைப்படுவதில்லை.

காப்புறுதி போன்ற பணரீதியான உத்தரவாதங்கள் மனிதத்தன்மையை மேலும் செழுமைப்படுத்த உதவவேண்டுமேயன்றி அதனை குழி தோண்டி புதைப்பதற்கானதாக இருக்கக்கூடாது. மனித சமூகம் மட்டுமே ஒருவருக்கொருவர் உதவக்கூடிய வல்லமையை கொண்டுள்ளது. அந்த பரஸ்பர உதவிகள் இல்லா விட்டால் மனிதத்துவம் இல்லாமல் போய்விடும். அதனை இல்லாமலாக்கி அதனிடத்தில் உணர்வற்ற இயந்திரங்களிடமும் நிறுவனங்களிடமும் மனித சமூகத்தின் தலைவிதிகள் ஒப்படைக்க முடியாது.

இதைப்போன்று கைவிடப்பட்ட சிறுவர்களுக்கான சிறுவர் நிலையங்களும்,முதியோர்களுக்கான முதியோர் இல்லங்களும் இயங்கி வருவது தெரிந்ததே. இவ் இல்லங்களின் எண்ணிக்கையும் கைவிடப்பட்ட சிறுவர்களினதும் முதியோர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளன.

தற்போது முதியோர் இல்லங்களில் முதியோர்களை அனுமதிக்க கட்டணம் 1 லட்சம் ரூபாவிற்கு மேலும் மாதாந்த கட்டணம் 25 ஆயிரம் ரூபா அளவிலும் அறவிடப்படுவதாக பத்திரிகைகளில் விளம்பரங்கள் வெளிவந்தன. அதாவது பணம் படைத்தவர்களுக்கென அவ் இல்லங்கள் கொழும்பில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

காப்புறுதிகள் ஓய்வூதியத்திட்டங்கள் போன்றன அறிமுகம் செய்யப்பட்டிருந்தபோதும் அரசாங்கத்தின் பொறுப்பில்லாமல் முதியோரை பராமரிக்க முடியாது. இன்று எமது நாட்டில் முதியோரின் எண்ணிக்கை மொத்த சனத்தொகையில் 40 சதவீதம் இருந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையில் அவர்களது வாழ்வு இருப்பு பற்றி சிந்திக்காமல் இருக்க முடியாது.

அவர்களின் வாழ்வு இருப்பு போன்றவற்றை காப்புறுதி நிறுவனங்களிடம் விட்டுவிடமுடியுமா? அவர்களை பாதுகாக்க முதிர்வடைந்த மனிதர்களை வாழவைக்க - அரசாங்க நலன்புரித் திட்டங்கள் மட்டுமன்றி பொறுப்புமிக்க சமூகப் பண்பாடும் கட்டி வளர்க்கப்பட வேண்டும். இதனைச் செய்ய உலகமயமாதலின் சூழல் இடமளிக்குமா? இவற்றுக்கான விழிப்புணர்வு மக்கள் மத்தியில் ஊட்டப்பட வேண்டும்.

# உறங்கும் மனிதம்

இருளடைந்த
பகற்பொழுதொன்றில்
அழுது கொண்டிருக்கிறாள்
பெண்ணொருத்தி

கண்ணீரில் நனைந்துவிட்ட
சட்டையை சப்பியபடி
அவள் குழந்தை.

வெறிச்சோடிப் போன வீதியில்
வேகமாய்ப் போய்வரும்
மனிதர்கள்
ஒப்பாரில் காண்காட்சியை
ஓரக்கண்ணால் பார்த்துவிட்டு
நழுவிக் கடக்கிறார்கள்.

ஒப்பாரியின்
முழு நீள விவரணத்தை
தொகுக்கிறது.
செய்தி ஊடகம்

வெள்ளை ஊர்தியின்
அடையாளந் தெரியாக் காவலர்கள்
கடத்திச் சென்ற கணவனை
மீட்டுத்தருமாறு
புலம்புகிறாள்.

குழந்தை
சட்டையைச் சப்பிய படி
மருள மருள விழிக்கிறது
மனிதர்கள்
போய் வந்து கொண்டிருக்கிறார்கள்

கண்ணீர் வற்றிப்போன
கண்களுடன்
வீதியில் அவள்.

தனக்கு சம்பந்த மில்லாததுபோல்
கந்தல் போர்வையை
தலைவரை போர்த்திக் கொண்டு
ஓரமாய் வீதியில்
உறங்குகிறது
மனிதம்.

கிருஷ்ணா

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# சார்க் அமைப்பை விளங்கிக்கொள்ளல்

**15 ஆவது சார்க் மாநாடு இரண்டு வாரங்கள்** கொழும்பை மயான அமைதிக்குள்ளாக்கி நடத்தப்பட்டது. அணிசேரா நாடுகள் இயக்கத்தின் அளவிற்கு தென்னாசிய நாடுகளின் அமைப்பான சார்க் உலக மேலாதிக்கங்களுக்கு எதிராக செயற்படவில்லை. தென்னாசிய நாடுகளின் அபிவிருத்தியில் கவனம் செலுத்தப்பட்ட முன்னைய கொழும்புத்திட்டத்தின் வளர்ச்சியாகவே சார்க்கை பார்க்க முடியும். சார்க் அங்கத்துவ நாடுகளான இந்தியா, இலங்கை, பாக்கிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், பூட்டான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் எங்குமே அமைதி இல்லை. அமைதி இழந்த அரசுகள் தம்மை தக்க வைத்துக்கொள்வதற்கு சார்க் மாநாடுகளில் முணுமுணுத்துக்கொள்கின்றன. இவற்றில் இந்தியா தனது மேலாதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்வதற்கு சார்க் அமைப்பை பலவழிகளிலும் பயன்படுத்திக் கொள்கிறது.

இதற்கு முன்பு 1998 ஆம் ஆண்டு இங்கு நடைபெற்ற 10 வது சார்க் மாநாட்டை அடுத்து இந்திய -இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

அதனால் இலங்கையில் இந்தியா அதனது பொருட்களுக்கான சந்தையை மேலும் விஸ்தரித்துக் கொண்டது. இலங்கையின் எரிபொருள் (எண்ணெய்) வர்த்தகத்தையும் இந்தியா பெருமளவிற்கு அபகரித்துக் கொண்டது. மேலும் பல முதலீடுகளையும் செய்து கொண்டது.

இந்த 15 ஆவது சார்க் மாநாட்டுடன் சிப்பா (CEPA) எனும் உடன்படிக்கையை இந்திய அரசு இலங்கை மீது திணிக்கப்பார்க்கிறது. இதன் மூலம் இந்தியாவின் தொழில்சார் நிபுணர்கள் இங்கு வந்து ஆதிக்கம் செலுத்துவார்கள். சேவைத்துறைகள் விஸ்தரிக்கப்படும்.




இவ்வாறு இந்திய ஆதிக்கம் பாகிஸ்தானை தவிர ஏனைய சார்க் நாடுகளில் சார்க் அமைப்பினூடாக விஷேடமாக மாநாடுகளினூடாக அதனுடைய பொருளாதாரத்தால் பிடிகளை இறுக்கிக் கொண்டு வந்துள்ளது எனலாம். இந்நாடுகள் இந்தியாவின் ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்ட நிலையிலேயே செயற்படுகின்றன. பான்டுங் பஞ்ச சீலக் கொள்கை அணிசேரா நாடுகளின் கொள்கை என்பவற்றை மேலும் வலுப்படுத்துவதற்கான பணியை சார்க் மூலம் செய்யலாம் என்பது வெளிப்படையாக கூறப்பட்ட விடயம் .

உலக அதிகார சமநிலையில் ஏற்பட்ட மாற்றங்கள் குறிப்பாக சோவியத் யூனியன் முற்றாகவே சிதைந்த பிறகு அமெரிக்க ஏகாதிபத்தியத்தை மையமாகக் கொண்டதான மாற்றங்கள் நிகழ்ந்தன. அதனால் நாடுகளின் சுதந்திரம் இறைமை என்பன வெகுவாக அச்சுறுத்தப்படுவதாக அமைந்தது. ஏகாதிபத்திய உலகமயமாக்கலின் சந்தைக்கான தேடலும் வளங்களை சுரண்டிக் குவிப்பதுமான பொருளாதார மேலாதிக்கமும் பயங்கரவாதத்திற்கு எதிரான போர் மனிதாபிமானத்திற்கான போர் போன்றனவும் ஏகாதிபத்தியத்தின் இன்றைய ஒழுங்காகி இருக்கிறது. இதில் ராணுவ மேலாதிக்கம் முதன்மை பெறுகிறது.

இச் சூழ்நிலையில் சார்க் ஏகாதிபத்திய உலகமயமாக்கலுக்கு மாறாகவோ பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்பதற்கு மாறாகவோ தனது நிலைப்பாட்டை எடுக்கவில்லை. ஆனால் மனிதாபிமான நடவடிக்கை என்றபேரில் அமெரிக்க மேற்கு ஏகாதிபத்திய நாடுகள் சார்க் நாடுகளில் தலையிடுவதை ஏற்கப்போவதில்லை. அதாவது இன்றைய உலக ஒழுங்கில் முக்கியமாக இருக்கும் ஏகாதிபத்திய உலகமயமாதல் பொருளாதாரக் கொள்கைளுக்கு எதிராக தனித்தனி நாடுகளின் அல்லது பிராந்திய நாடுகளின் ஆட்சேபனை இல்லை. இவ்விடயத்தில் சார்க் நாடுகள் கூட ஏகாதிபத்திய பொருளாதார நடவடிக்கைகளுடன் இணைந்து கொள்கின்றன. அந் நடவடிக்கைகளுக்கூடாகவே தமது பொருளாதாரப் பிரச்சினைகளை அணுகுகின்றன. அந்நடவடிக்கை தமது பொருளாதாரப் பிரச்சினைகள் மிகையாகியுள்ளதை ஏற்க மறுக்கும் வர்க்கத்தினரே சார்க் நாடுகளின் பொருளாதாரக் கொள்கை நடைமுறைகளில் ஆதிக்கம் செலுத்துகின்றனர்.

அதேவேளை உள்நாடுகளில் இருக்கும் தேசிய இனப்பிரச்சினை அதனால் இருக்கும் போராட்ட சூழ்நிலையைக் கொண்டு அமெரிக்க ஐரோப்பிய ஜப்பான் ரஷ்ய ஏகாதிபத்தியங்களை தலையிடா வண்ணம் தமது ஆட்சியை தொடர வேண்டும் என்பது சார்க் நாடுகளில் ஏறக்குறைய உடன்பாடு கொண்டுள்ளன. ஆப்கானிஸ்தானின் நிலைமை வேறு. மனிதாபிமான நடவடிக்கை பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கை என்ற பேரிலான தலையீட்டினாலேயே தற்போதைய ஆப்கானிஸ்தான் உருவாக்கப்பட்டுள்ளது. அந்நிலை ஏனைய நாடுகளில் ஏற்பட்டு தற்போதைய ஆளும் தரப்பினர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் சார்க் நாடுகள் தம்மளவில் ஒற்றுமையாக இருக்கின்றன.

இந்த நிலைமையை மேலாதிக்க நிலையில் இருக்கும் இந்தியாவின் ஆளும் வர்க்கம் ஏனைய சார்க் நாடுகள் மீது அவற்றின் ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்வதில் முனைப்பாகவே இருக்கின்றது.

எனவே அமெரிக்கா, ஐரோப்பா,ஜப்பானிய, ரஷ்ய ஏகாபதிபத்திய நாடுகளின் நிகழ்ச்சிநிரலுக்கு ஏற்ப நடக்க வேண்டிய நிர்ப்பந்தத்துடன் இருப்பது மட்டுமன்றி அவற்றுக்கு எதிரான முரண்பாடுகளை சார்க் நாடுகள் கொண்டுள்ளன. அத்துடன் பாக்கிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையிலான ஆதிக்கப்போட்டி ஏனைய நாடுகளின் மீதான இந்தியாவின் மேலாதிக்கம் என்பவற்றையும் கொண்டதாகவே சார்க் அணுகப்படவேண்டும்.

## ஏகாதிபத்திய எதிர்ப்பு

சார்க் நாடுகளின் ஆளும் வர்க்கத்தினரின் ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பது தமது ஆட்சிக்கு அமெரிக்க ,ஐரோப்பிய, ஜப்பானிய, ரஷ்ய ஏகாதிபத்தியங்கள் இடையூறாக இருக்கக்கூடாது என்ற நிலைமைக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ளது.

சார்க் நாட்டு மக்கள் உலக மக்களில் அதிகமான வறுமைக்கு உளளாகியுள்ளனர். இந்நாடுகளில் உள்ளே ஆயுத முரண்பாடுகள் வலுவடைந்துள்ளன. ஏகாதிபத்திய உலகமயமதலினால் பொருளாதார ரீதியாகவும் பண்பாட்டு ரீதியாகவும் அதிகம் பாதிக்கப் பட்டுள்ளனர். இந் நாடுகளின் ஆளும் வர்க்கத்திற்கு ஏகாதிபத்திய அரவணைப்பு அதிகமாகவே இருக்கிறது. இதனால் சார்க் மக்கள் இயல்பாகவே ஏகாதிபத்திய எதிர்ப்புடையவர்கள். அவர்கள் உணர்வை வெளிக்காட்ட கூடியதாக அரசாங்கங்களின் அமைப்பு இல்லை. அவை ஏகாதிபத்தியத்தின் வாடிக்கையாளராக செயற்பட்டு கொண்டு தமது இடுப்பை பாதுகாத்துக் கொள்வது போன்று சார்க் என்ற அமைப்பையும் வைத்துக் கொண்டு தம்மை பாதுகாத்துக் கொள்ளவே எண்ணம் கொண்டு செயற்படுகின்றன. இது மக்களின் அபிலாஷைகளுக்கு மாறானதாகும்.

## ஏகாதிபத்திய உலகமயமாதல்

ஏகாதிபத்திய உலகமயமாதல் என்ற நிகழ்ச்சி நிரலுக்குள் சென்றே சார்க் நாடுகள் தமது பொருளாதார செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டியவைகளாக இருக்கின்றன. ஏனெனில் பொருளாதாரக் கொள்கையும் நடைமுறையும் அந்தப் பக்கத்திற்கே தள்ளுகின்றன.

அவற்றை ஏற்றுக் கொள்கின்றபோது உள்நாட்டில் மக்களுக்கு எதிரான ஜனநாயக விரோத மனித உரிமை மீறல்களைக் கொண்ட ஆட்சிமுறையே பொருத்தமானதாகிறது.

சார்க் நாடுகளுக்கிடையே செய்யப்படுகின்ற உடன்படிக்கைகள் உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலுக்கு மாறாக செயற்படக்கூடிய சந்தர்ப்பங்களை கொண்டதாக இருக்கப்போவதில்லை. அவை பொருளாதார நடவடிக்கைகளில் சார்க் நாடுகளுக்கும் ஏகாதிபத்தியத்திற்குமிடையேயான முரண்பாட்டை சார்க் நாடுகளுக்கு சார்பான அனுகுமுறை கொண்டு தீர்க்கும் திராணியை கொண்டிருக்கவில்லை. ஏகாதிபத்தியத்திற்கு எதிராகச் செயற்பட்ட அணிசேரா நாடுகளின் இடத்தை சார்க் அமைப்பில் எட்டமுடியாது. ஏகாதிபத்திய உலகமயமாக்கலுக்கு சார்க் நாடுகளுக்குமிடையிலான முரண்பாட்டை அடிப்படையாகவோ பிரதானமாகவோ எடுக்கவில்லை என்பது தான் முக்கிய பிரச்சினையாகும்.

## பயங்கரவாதத்திற்கு எதிரான போர்

இது ஏகாதிபத்திய உலகமயமாதலினால் அறிமுகம் செய்யப்பட்ட சுலோகம். அதனை சார்க் நாடுகளும் ஏற்றுக்கொண்டுள்ளன. இந்த சுலோகத்தின் கீழ் அரச பயங்கரவாதத்தை நிலைநாட்டி மக்களின் நியாயமான ஜனநாயக ரீதியான போராட்டங்களையும் நசுக்குவதற்கு வசதி ஏற்பட்டுள்ளது. நேபாளத்தின் இன்றைய இடைக்கால ஆட்சியில் ஆயுதப்போராட்டத்தை அடிப்படையாகக் கொண்ட மாவோ வாதிகள் இருக்கின்றனர். இவர்கள் பயங்கரவாதம் என்பதற்கு கொடுக்கும் வரைவிலக்கனத்திற்கு ஏனைய சார்க் நாடுகளின் அரசாங்கங்கள் கொண்டிருக்கும் (ஆட்சியில் இருக்கும் அரசாங்கத்திற்கு மாறான எல்லா கொள்கைகளும் நடவடிக்கைகளும் பயங்கரவாதமென வரை விலக்கணப்படுத்துகின்றன) வரைவிலக்கணங்களும் நிறையவே வேறுபாடுகள் இருக்கின்றன.

இந்நிலையில் கொழும்பில் நடைபெற்ற இந்த 15 வது சார்க் மாநாட்டில் பயங்கரவாதத்திற்கு எதிரான சார்க் நாடுகளின் கூட்டு நடவடிக்கை என்ற பிரகடனம் நிச்சயமாக அடக்குமுறை அரசாங்கங்களின் தேவையிலிருந்தே எழுகிறது. இந்த மாநாட்டின் மூலம் பயங்கரவாத எதிர்ப்பு என்பது உள்நாட்டு சாதாரண குற்றவியல் சட்டக்கோவையின் பகுதியாக்கப்படவேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதுவரை சார்க் நாடுகளில் பயங்கரவாத தடைச்சட்டங்கள் யாவும் விஷேட சட்டங்களாகவே தற்காலிக ஏற்பாடுகளாகவே இருக்கின்றன. இவற்றை நிரந்தரமாக்கவும் சாதாரண சட்ட ஏற்பாட்டில் கொண்டுவருவதற்கான முடிவும் சாதாரண சட்ட ஆட்சியை விஷேடமான அடக்குமுறை சட்ட ஆட்சியாக மாற்றுகிறது. இவ்வாறான விஷேட சூழ்நிலைக்குரிய விடயங்களை சார்க் நாடுகளுக்குப் பொதுவாக்குவது சார்க் நாட்டு மக்களுக்கு எதிரான சார்க் அரசாங்கங்களின் நடவடிக்கையாகும்.

## இலங்கை அரசாங்கம்

ஜனாதிபதி ராஜபக்ஷ அரசாங்கம் கொழும்பில் நடத்திய 15 வது சார்க் மாநாட்டினால் இலங்கை மக்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்கள் தெரிந்தவையே. மக்கள் வாழ்க்கைச் செலவு மிகையாகி கஷ்டப்படும்போது கோடிக்கணக்காண ரூபாய்களை செலவழித்து நடத்தப்படும் மாநாட்டால் இலங்கை நாட்டிற்கோ மக்களுக்கோ எவ்வித நன்மையும் இல்லை. ஜனாதிபதிக்கு சார்க் நாடுகளின் தலைவர் பதவி கிடைப்பதை தவிர வேறென்ன லாபம்?

இலங்கை அரசாங்கம் கடந்த இரண்டு வருடகாலமாக வடக்கு கிழக்கில் எடுத்துவரும் இராணுவ நடவடிக்கைகளுக்கு பயங்கரவாத எதிர்ப்பு என்ற பேரில் சார்க் அமைப்பின் மூலம் அங்கிகாரம் தேடப்படுகிறது. கைது காணாமல் போதல், கடத்தல், கொலை மிகுந்த மனித உரிமைகள் மீறல் நிறைந்த ஜனநாயக விரோத ஆட்சிமுறையும், லஞ்சம், ஊழல், மோசடி, அடாவடித்தனம் நிறைந்த பரிபாலன முறையும் கொண்ட இலங்கை அரசாங்கம் சர்வதேச ரீதியாக ஓரம்கட்டப்பட்டு வருகிறது. இதனைச் சரிக்கட்டுவதற்கு சார்க் மாநாடு பயன்படுத்தப்பட்டுள்ளது. அதற்காக இந்திய மேலாதிக்கத்திற்கு சரணடையவும் இலங்கையின் தற்போதைய ஆளும்தரப்பு தயாராகவே இருக்கிறது.

பொருளாதார ரீதியாக இந்தியாவுக்கு இலங்கை தாரைவார்க்கப் பட்டுவிட்டது. இன்னும் பல நெருக்கடியான சூழ்நிலைகளில் முழுமையாக இலங்கை இந்தியாவின் பொருளாதார கொலனி ஆக்கப்பட்டுவிடும்.

## சில முடிவுகள்

சார்க் மக்களுக்கானதாக இல்லை. சார்க் ஆளும் வர்க்கத்தினருக்குரிய ஏகாதிபத்திய உலகமயமாதலை தென்னாசியாவில் நடைமுறைப்படுத்தப்படும் அமைப்பு. இந்திய மேலாதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்வதற்கான அமைப்பு. பயங்கரவாத எதிர்ப்பு என்ற போர்வையில் சார்க் அரசுகளின் கூட்டமைப்பு இறுக்கமாக்கப்படுவதற்கான மத்திய அமைப்பு. “ஏகாதிபத்திய மனிதாபிமான தலையீட்டினால் ”சார்க் ஆளும் வர்க்கத்தினருக்கு அச்சுறுத்தல் ஏற்படாமல் தவிர்ப்பதற்குரிய பிராந்திய ஏற்பாடு

மேற்படி அடிப்படையில் பல நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப் பட்டு வந்தன. தொடர்ந்து எடுக்கப்படும் இந்நிலையில் சார்க் அமைப்பை மக்களுக்குரிய அமைப்பாக மாற்ற முடியுமா என்பதே கேள்வியாகும்.

- தயா -

# இந்திய மேலாதிக்கப் பிடிக்கு சீப்பா (CEPA) வழிவகுக்கும்

**அமெரிக்க- இந்திய அணுசக்தி ஒப்பந்தம்** இந்தியாவை அமெரிக்கா கட்டுப்படுத்த வழிவகுக்கும். ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் இந்தியாவைக் கூட்டாளியாக்கிக் கொண்டு அமெரிக்கா தனது உலக மேலாதிக்கத்திற்கு செயலாற்கி வருகிறது. இது இந்திய மக்களுக்குத் தோல்வியாகும்.

அவ்வாறே இந்தியா சார்க் நாடுகளுடனான ஒப்பந்தங்கள் மூலம் தென்னாசியாவின் பிராந்திய மேலாதிக்கத்திகு செயலாற்றி வருகிறது. அதன் வழிப்பட்டதே இலங்கையுடன் இந்தியா செய்யவுள்ள சீப்பா (CEPA) என்னும் உடன்படிக்கையாகும். இலங்கையுடனான விசால பொருளாதார ஒத்துழைப்புக்கான மேற்படி ஒப்பந்தத்தை நடைமுறைக்கு கொண்டு வருவதில் இந்தியா மும்மரம் காட்டி நிற்கிறது. ஆனால் இலங்கையில் இதற்கான எதிர்ப்புகள் அரசியல் சமூக பொருளாதார மட்டங்களில் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. ஜே.வி.பியினர் பாராளுமன்ற விவாதத்தில் கடும் எதிர்ப்புக் காட்டி யுள்ளனர். அதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அக மகிழ்ச்சியுடன் வரவேற்றுப் பேசியுள்ளனர். இந்திய விசுவாசிகளான இத் தமிழ்க் கூட்டமைப்பினர் இலங்கையில் இந்தியா ஆதிக்கம் செய்வதை வரவேற்கின்றனர். அதன் ஊடாகத் தமிழர் தரப்பிற்கு அரசியல் லாபங்கள் கிடைக்கும் என எதிர்பார்க்கின்றனர். சீன பாகிஸ்தான் ஏதாவது திட்டங்கள் தொடங்கினால் அதற்கு சீன ஆதிக்க விஸ்தரிப்பு என்றும் பாகிஸ்தான் ஊடுருவுகின்றது என்றும் ஓலம் வைக்கும் சம்மந்தனும் தமிழர் தரப்பும் பாராளுமன்றத்தில் அரசாங்கத்திற்கு சீப்பாவில் கையெழுத்திடுமாறு ஆலோசனையும் ஆதரவும் தெரிவித்துள்ளனர். தமிழ்த் தரப்புகள் யாவும் ஒரு போதும் ஏகாதிபத்தியத்தையோ இந்திய ஆதிக்கத்தையோ விமர்சனம் செய்ததோ எதிர்த்ததோ கிடையாது என்பது நினைவுபடுத்த வேண்டியதாகும்.

அதேவேளை ஜே.வி.பி சீப்பா ஒப்பந்தத்தை எதிர்க்கிறது. அது இந்திய ஆதிக்கம் பற்றி விபரமாக எடுத்துக் கூறுகிறது. ஆனால் அதனை பேரினவாத நிலைப்பாட்டின் ஊடாகவே நோக்குகிறது. இந்தியா இங்கு வருவதன் ஊடாக வடக்கு கிழக்கும் தமிழ் மக்களும் பிரிவினைப் பாதையில் செல்வதற்கு வாய்ப்பு ஏற்படும் என்றே ஜே.வி.பி கூறுகிறது. தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளை வழங்கி அரசியல் தீர்வு மூலம் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து அனைத்து மக்களும் ஒன்றுபட்டு இந்திய மேலா திக்கத்தை எதிர்ப்பதே சரியான நிலைப்பாடு என்பதை ஜே.வி.பி முன்வைக்கத் தயாராக இல்லை. இங்கே தான் ஜே.வி.பி யின் இந்திய எதிர்ப்பிற்கும் மாக்சிச லெனினிச வாதிகளின் இந்தியப் பிராந்திய மேலாதிக்க எதிர்ப்புக்கும் உள்ள வேறுபாடு தெளிவாகத் தெரிகிறது.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# 1983ன் இருண்ட யூலை நாட்களும் 25 வருட அனுபவங்களும்

**கடந்த மாதம் யூலை 24ம்,25ம்** திகதிகளில் 1983ம் ஆண்டின் யூலை இருண்ட நாட்களின் துயர நினைவுகள் நினைவு கூரப்பட்டன. பேரினவாதத்திற்கும் பேரினவாத ஒடுக்குமுறையாளர்களுக்கும் இவ் நினைவு கூறுல் கடும் ஒவ்வாமை கொண்டதாகும். ஆனால் அன்றைய கொடுர பேரினவாத இனவன்முறையால் பாதிக்கப்பட்டு உயிர் உடைமைகளை இழந்து நிர்க்கதிகளுக்கு உள்ளான தமிழ் மக்களுக்கும் மலையகத் தமிழ் மக்களுக்கும் அந் நாட்கள் வரலாற்றுத் துயரமும் சோகமும் கொண்டவையாகும். வடக்கு கிழக்கிலும் தெற்கிலும் மலையகத்திலும் சுமார் நாலாயிரம் தமிழர்கள் வரை சுட்டும் வெட்டியும் எரித்தும் கொல்லப்பட்டனர். இரண்டாயிரம் பேர் வரை படுகாயங்கள் பட்டனர். வீடுகளில் புகுந்து கொள்ளைகள் நடத்தியதுடன் பல நூற்றுக்கணக்காண வீடுகள் எரியூட்டப்பட்டன. தமிழர்களின் வர்த்தக வியாபார நிறுவனங்கள் உணவகங்கள் தொழில் நிறுவனங்கள் கொள்ளையடிக்கப்பட்டு எரித்து அழிக்கப்பட்டன. இதனால் பல நூறுகோடி ரூபாய்கள் பெறுமதியான சொத்துக்கள் கொடிய வன்முறையால் இழக்கப்பட்டன. அதேவேளை அன்பு கருணை அகிம்சை என்பவற்றை நேசிக்கும் நேர்மையான பௌத்தர்களுக்கும் மனித நேய நட்புறவைத் தமிழர்களுடன் கொண்டிருந்த சாதாரண சிங்கள மக்களுக்கும் இவ் யூலை வன்முறைகள் தீராத அவமானத்தையும் தலைகுனிவையும் ஏற்படுத்தியிருந்தன.

அன்றைய ஜே.ஆர்.தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் 1977ம், 79ம், 81ம் ஆண்டுகளில் வடக்கு கிழக்கிலும் தெற்கிலும் தொடராக முன்னெடுத்து வந்த பேரினவாத இனவன்முறைகளில் உச்சநிலை வெளிப்பாடாகவே 83ன் யூலை இனவன்முறைகள் முன்னெடுக்கப்பட்டன. நன்கு முன் கூட்டியே திட்டமிடப்பட்டு இன வெறிக் குண்டர்களாலும் இரானுவத்தினராலும் நடாத்தப்பட்ட இவ் இனவெறியாட்டத்திற்கு ஜே.ஆரும் அவரது அமைச்சர்களும் பச்சைக் கொடி காட்டி ஆதரவு அளித்தனர். அதனாலேயே அவ் இன வன்முறைகளை உடன் தடுத்து நிறுத்த எவ்வித நடவடிக்கைகளையும் அரசாங்கம் என்ற வகையில் எடுத்திருக்கவில்லை. அரசாங்கத்தின் சிறைச்சாலையில் 53 தமிழ் அரசியல் கைதிகள் கொடூரமாகச் சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டனர். இத்தனைக்கும் மத்தியில் இவ்வின வன்முறைகளைச் சிங்கள ம்க்களின் தேசிய எழுச்சி என வர்ணித்து ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர். ஆதரவு வழங்கினார் என்பது வரலாற்றில் என்றுமே மறக்கக் கூடியதொன்றல்ல.

இத்தகைய இருண்ட யூலை வன்முறையானது இலங்கையின் அரசியல் சமூகத் தளங்களில் ஒரு பாரிய திருப்பு முனை யைத் தோற்றுவித்துக் கொண்டது. இனிமேலும் பௌத்த சிங்களப் பேரினவாத ஆளும் வர்க்கத் தலைமைகள் தமிழ் மக்களுக்கு நியாயமான உரிமைகள் எதனையும் வழங்கப் போவதில்லை என்ற விரக்தி நிலைக்குத் தமிழ் மக்கள் தள்ளப்பட்டனர். அதனால் பாராளுமன்றப் பேரப்பேச்சுக்களும் அகிம்சை ரீதியிலான போராட்டங்களும் பயனற்றவை என்ற நிலைக்குத் தமிழ் மக்கள் விரக்தியடைந்தனர். அதன் காரணமாக தமிழ் இளைஞர்கள் முன்னெடுத்த ஆயுத நடவடிக்கைகளுக்கு அங்கிகாரம் வழங்கும் நிர்ப்பந்த நிலைக்கும் தமிழ் மக்கள் உள்ளாகினர். இத்தகைய நிலை தமிழர் உரிமைப் போராட்டப் பயணத்தில் புதிய பாதையைத் திறந்து வைத்தது. அத்துடன் இத்தகைய சூழலை இந்திய ஆளும் வர்க்கம் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் தலையீட்டைச் செய்தது. பத்துக்கு மேற்பட்ட தமிழ் இளைஞர் இயக்கங்களுக்கு ஆயுதப் பயிற்சிகளும் ஆயுதங்களும் வழங்கி ஆயுதப் போராட்டப் பாதைக்கு ஊக்கமளித்துக் கொண்டது. இது தமிழர் விடுதலையையோ அன்றி தமிழீழக் கோரிக்கையையோ வென்றெடுக்கும் நோக்கில் அன்றி இந்தியப் பிராந்திய மேலாதிக்க நலன்களை இலங்கையில் பேணிக்கொள்ளும் வகையிலேயாகும். இதன் சாரம்சமான தாற்பரியத்தை அன்றைய நிலையில் மாக்சிச லெனினிச வாதிகள் முன்னெச்சரிக்கையுடன் சுட்டிக் காட்டியிருந்த போதிலும் தமிழர் தலைமைகளும் தமிழ் இளைஞர் இயக்கங்களும் அதனைக் கண்டு கொள்ளவில்லை. அவர்களது இந்திய விசுவாசமும் தமிழர் இன உறவின் வழியான தாய்நாடு சேய் நாடு என்ற தமிழகத்தின் மீதான அதீத நம்பிக்கையும் அவர்களைப் பீடித்திருந்தது. யாவற்றுக்கும் மேலாக இந்தியத் தலையீட்டால் பங்களாதேசம் உருவாக்கப்பட்டமை போன்று இலங்கையில் தமிழீழம் உருவாக்கித் தரப்படும் என்ற எதிர்ப்பார்ப்பு தமிழர் தலைமைகளிடமும் இளைஞர் அமைப்புகளிடமும் மேலோங்கி இருந்தது. ஆதலால் தமிழீழ விடுதலைக்கான தெளிவான கொள்கைகளை சரியான கோட்பாட்டு அடிப்படையில் வகுத்துக் கொள்ளாது இளைஞர் அமைப்புகள் ஆயுதங்கள் மீதான அதீத நம்பிக்கையுடன் போன போன திசைகளில் எல்லாம் வழிநடக்க ஆரம்பித்தன. தடியெடுத்தவன் எல்லாம் தண்டக்காரன் என்பது போன்று பத்துப் பன்னிரன்டு இளைஞர் இயக்கங்கள் தம்மை வெளிப்படுத்திக் கொண்டன. கொலைகள் கொள்ளைகள் துரோகிகள் அழிப்பு மற்றும் மக்கள் விரோத நடவடிக்கைகள் மூலம் தம்மை விடுதலை அமைப்புகள் எனக் கூறிக் கொண்டன. ஆனால் விடுதலை இயக்கங்களுக்குரிய அடிப்படை அம்சங்களை அவை கொண்டிருக்கவில்லை. சிறு முதலாளித்துவ தமிழ்த் தேசியவாத உணர்வே மேலோங்கி இருந்தது. இவற்றின் கடந்த இருபத்தைந்து வருடகால நடைமுறைகள் போராட்டங்கள் ஏனைய அரசியற் செயற்பாடுகள் விமர்சன ரீதியில் கட்டாயம் பார்க்கப்பட வேண்டியவையாகின்றன.

அதேவேளை பேரினவாத ஒடுக்குமுறையானது தமிழ் இளைஞர்களின் ஆயுத நடவடிக்கைகள் மீதும் தமிழ் மக்கள் மேலும் ராணுவ யுத்த செயற்பாடாக விரிவாக்கப்பட்டது. ஜே.ஆர். 1977ல் பதவிக்கு வந்ததும் இரட்டைத் தந்திரோபாயத்தை தனது பேரினவாத பெருமுதலாளித்துவ நிலைக்கு ஏற்ப நடைமுறைப்படுத்தினார். அவர் எப்பொழுதும் "யங்கி டிக்கி" என வர்ணிக்கப்படும் அமெரிக்க ஏகாதிபத்திய விசுவாசியாவார். அவரது தலைமையில் ஆறில் ஐந்து பெரும்பான்மை பலத்துடன் பாராளுமன்றத்தில் ஆட்சிக்கு வந்ததும் அன்றுவரை செய்ய முடியாமல் இருந்து வந்த அனைத்தையும் செயலாக்கத் தொடங்கினார். ஒன்று தனது உச்ச நிலைப் பேரினவாத ஒடுக்குமுறையைத் தமிழ் மக்கள் மலையகத் தமிழ் மக்கள் மீது பிரயோகித்து அவர்களது உரிமைகளை மறுத்து ஒடுக்குவது. இதன் மூலம் சிங்கள மக்களின் கவனத்தை திசை திருப்பிக் கொள்வது. இரண்டாவது பேரினவாத ஒடுக்கு முறையை யுத்தமாகத் திணிக்கும் அதே வேளை நாட்டின் பொருளாதாரத்தை தாராளமயம் தனியார் மயத்திற்கு உள்ளாக்கி ஏகாதிபத்தியத்தை அரவணைத்து முதலாளித்துவத்தை தூக்கி நிலைநிறுத்திக் கொள்வதாகும். அதற்கான பாதையில் எண்பதுகளில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் முன்தள்ளப்பட்ட உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலை இலங்கையில் தங்கு தடையின்றி முன்னெடுக்க வைப்பதாகும். யுத்தமும் நவதாராள பொருளாதாரக் கொள்ளையும் ஒரே நேரத்தில் ஒன்றுக்கொன்று உதவுவது போன்று கடந்த இருபத்தைந்து வருடங்களில் முன்னெடுக்கப்பட்டு வந்த நிகழ்வுப் போக்கினை இருண்ட யூலையின் துயர நினைவுகளினூடே காணத் தவறவிட முடியாத பிரதான அம்சங்களாகும்.

77ம் 79ம் 81ம் 83ம் ஆண்டுகளில் அரசாங்க வழிகாட்டலுடன் தமிழர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட இன வன்முறைகள் யுத்தத்திற்கும் தமிழ் இளைஞர்களின் ஆயுத நடவடிக்கைகளுக்கு வழிவகுத்தன. யுத்தம் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்ட அதே வேளை இராணுவப் பலம் படிப்படியாகப் விரிவாக்கப்பட்டு நவீன ஆதங்களுடன் கட்டியெழுப்பப்பட்டது. அமெரிக்கா இந்தியா இஸ்ரேல் என்பன பிரதான பயிற்சி வழங்குவோராகவும் ஆயுத விற்பனையாளர்களாகவும் விளங்கினர். ஐரோப்பிய நாடுகளும் சீனாவும் பாகிஸ்தானும் ஆயுதங்கள் விநியோகித்தன. இவை அனைத்தும் இலங்கை ராணுவத்தைப் எண்ணிக்கையிலும் போரிடும் தரத்திலும் உயர்த்திக் கொள்ள வழிவகுத்தது. இது அடிப்படையில் தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி முழு இலங்கை மக்கள் அனைவரையும் ஒடுக்கும் அரசு யந்திரமான ஆயுதப்படைகளை மேன் மேலும் பலமடையச் செய்தது. குறிப்பாக வர்க்க இன ரீதியில் ஒடுக்கப்படும் உழைக்கும் மக்களுக்கு எதிரான ஒன்று என்பது விளங்கப்பட



வேண்டிய உண்மையாகும்.

கடந்த இருபத்தைந்து வருடங்களில் தமிழர் தலைமைகளும் ஆயுதம் தாங்கிய இளைஞர் இயக்கங்களும் தமிழர் பழைமைவாதக் கருத்தியல் சிந்தனைத் தளத்தில் நின்றே அரசியலையும் போராட்டங்களையும் முன்னெடுத்து வந்துள்ளனர்.தமிழர் ஒடுக்கப்படும் தேசிய இனம் என்ற நிலைப்பாட்டிலிருந்து அவர் தம் சுய நிர்ணய உரிமைக்கும் நியாயமான சுயாட்சிக்குமான கொள்ளை முன்வைக்கப்பட்டு சிங்களச் சாதாரண மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலையில் போராட்டம் முன்னெடுக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக ஆண்ட பரம்பரைக் கதை பேசும் குறுந்தேசியவாத ஆதிக்கப் போக்கின் ஊடான கொள்கையே முன்நிறுத்தப்பட்டது. அத்துடன் ஆயுதங்கள் மீதான நம்பிக்கையும் வீரதீரச் செயற்பாடுகளும் மேலோங்கிக் கொண்டதுடன் இந்தியாவையும் அதன்பின் அமெரிக்க மேற்குலக நாடுகளையும் எதிர்ப்பார்த்து நிற்கும் நிலைக்குப் போராட்டம் என்பது தாழ்ந்து கொண்டது. இவற்றின் ஒட்டுமொத்த வளர்ச்சிப் போக்கானது கடந்த 25 வருடங்களில் தமிழ் மக்களுக்குச் சாதகமான விடையங்களைக் கொண்டு வருவதற்குப் பதிலாக மிகப் பாதகமானவற்றையே நிலைநாட்டிச் சென்றுள்ளது.

கடந்த இருபத்தைந்து வருடங்களில் வடக்கு கிழக்கில் சுமார் ஒன்றரை லட்சத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஆயுதம் ஏந்திய இளைஞர் இயக்கங்களில் இணைந்த தமிழ் இளைஞர்கள் ராணுவத்தினராலும் இயக்கங்களுக்குள் தோன்றிய உள் முரண்பாடுகளாலும் இயக்கங்களுக்குமிடை யில் ஏற்பட்ட போட்டியால் எழுந்த சகோதரப் படுகொலைகளாலும் சுமார் 50 ஆயிரம் பேர் வரை கொல்லப்பட்டனர். பல ஆயிரம் பேர் வரை படுகாயங்கள் பட்டு வாழ் நாள் முடமாகினர். வடக்கு கிழக்கில் எட்டு லட்சம் மக்கள் வரை தமது வாழ் வாதாரங்கள் இருப்பிடங்கள் இழந்தும் அகதிகளாகினர். சுமார் 10 லட்சம் தமிழ் மக்கள் இந்தியா மேற்குலக நாடுகளில் புலம் பெயர்ந்தவர்களாகினர். இவற்றுக்கும் மேலாக வடக்கு கிழக்கில் சுனாமிப் பேரழிவால் சுமார் 30 ஆயிரம் மக்கள் மடிந்து போயினர். அதனால் அகதிகளாகிய தமிழ் மக்கள் இன்னும் அவ் அழிவுகளில் இருந்து மீளவில்லை. கோடிக்கணக்காண ரூபாய்கள் கொண்ட சொத்துக்கள் அழிவுற்றன. இதன் தொடச்சியான கொலைகள் கடத்தல் காணாமல் போதல் போன்றன தொடர்ந்த வண்ணம் உள்ளன. இருபத்தைந்து வருடகாலப் பேரினவாத ஒடுக்குமுறை யுத்தமும் போராட்டமும் தமிழ் மக்களின் வடக்குக் கிழக்கின் பொருளாதாரத்தை முற்றாக நாசம் செய்து கொண்டன. ஒரு கால கட்டத்தில் நெல் உற்பத்தியிலும் உப உணவுப் பயிர்ச் செய்கையிலும் முன்நின்ற வடக்கு கிழக்கு இன்று வாழ்விழந்த பூமியாகி விவசாயிகள் ஓட்டாண்டிகளாகி அவல நிலைக்கு உள்ளாகி நிற்கின்றனர். அவ்வாறே மீன்பிடித்துறையில் முன்நின்ற வடக்கு கிழக்கு மீனவர்கள் கடலுக்குள் இறங்க முடியாத நிலையில் பட்டினி வாழ்வு நடாத்தி வரும் அவலத்தைக் காணமுடிகிறது.

கிழக்கின் கடதாசி ஆலை வடக்கின் சீமேந்து ஆலை பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை ஆணையிறவு உப்பளம் இன்னும் பல உற்பத்தி மையங்கள் அழிவுற்ற நிலையிலேயே இருந்து வருகின்றன. மேலும் சிறு தொழில்களும் சுய சார்பு உழைப்பு முயற்சிகளும் அவற்றுக்கான வளங்களும் வடக்கு கிழக்கில் அழிந்தொழிந்துள்ளன. இன்று தமிழ் மக்களின் ஒரு பகுதியினருக்கு புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் உறவுகள் அனுப்பும் பணமானது அதன் நாணயமாற்றுப் பெறுமதி அதிகரிப்புத் தன்மையால் ஓரளவுக்கு பணச் சுழற்சியாகி நிற்கிறது.

ஆனால் அத்தகைய புலம் பெயர்ந்தவர்களின் பண வருவாய் அற்ற தமிழ் மக்கள் உள்ளுர் வருமானத்துடனும் அது போதுமானதாக இல்லாமலும் துயரமிக்க வாழ்வையே வாழ்ந்து வருகிறார்கள். அவ்வாறே தமிழ் மக்களிடம் கல்வி வளங்கள் யாவும் அழிந்தே காணப்படுகின்றன. பெயரளவில் பல்கலைக்கழகங்கள் பாடசாலைகள் இருப்பினும் கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் ஏற்ற வளங்கள் இல்லாத நிலையே காணப்படுகின்றது. அதே போன்று சுகாதார மருத்துவ நிலைமைகளும் மோசமடைந்தனவாகவே இருந்து வருகின்றன.

கடந்த 25 வருட காலத்தில் யுத்தமும் ஏகாதிபத்திய உலகமயமாதலும் முழு நாட்டையும் அதள பாதாளத்திற்கு இட்டுச் சென்றுள்ள அதே வேளை வடக்குகிழக்கை பொருளாதார அரசியல் சமூக பண்பாட்டு அடிப்படைகளில் நாசப்படுத்தியே வந்துள்ளது. 1983 ன் யூலை இனவன்முறை ஒரு துயரமான வரலாற்றுத் திருப்புமுனை என எடுத்துக்கொண்டால். அதன் ஊடாக வடக்கு கிழக்குத் தமிழ் முஸ்லிம் மக்களும் அடைந்த பலாபலன்கள் தான் என்ன? அவற்றின் சாதக பாதக அம்சங்கள் உரிய மதிப்பீட்டுக்கும் விமர்சனம் சுய விமர்சனத்திற்கும் உள்ளாக்கப்பட வேண்டும். ஒட்டுமொத்த தமிழ்த் தேசிய இனத்தினதும் தலைவிதி உரியவாறு தீர்மானிக்கப்பட வேண்டும். அத்தகைய தலைவிதித் தீர்மானத்தை தீர்மானிக்க வேண்டியவர்கள் வடக்கு கிழக்கில் இத்தனை ஒடுக்குமுறைகளின் கொடூரங்களின் இழப்புகளின் மத்தியில் வாழ்ந்து வரும் மக்களாகவே இருக்க வேண்டும். அதுவும் ஏகப் பெறும்பான்மையான உழைக்கும் மக்களாலேயே அத்தகை உரிய தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழர்கள் இரண்டாம் பட்சமானவர்களேயாவர். அவர்கள் ஆதரவும் பொருள் உதவியும் செய்பவர்களாக இருக்கலாம். ஆனால் முற்றுமுழுதாக மண்ணில் கால் பதித்து வாழ்வோடும் சாவோடும் போராடிக்கொண்டிருக்கும் மக்களே சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையின் அடுத்தக் கட்டத் தீர்மானத்தை சமகால யதார்த்த தேசிய யுத்த போராட்ட சர்வ தேசிய நிலைமைகளுக்கு ஏற்ப எடுக்க வேண்டியவர்களாவார். இதனையே கால் நுற்றாண்டு கால அனுபவங்கள் பட்டறிவுகள் வேண்டி நிற்கின்றன.

**சண்முகம்**

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# இலங்கையின் இருபதாம் நூற்றாண்டு

இமயவரம்பன் 12

## சர்வசன வாக்குரிமையின் முதற் கோணல்

**டொனமூர் சீர்திருத்தம்** ஆலோசிக்கப்பட்ட காலம் உலகப் பொருளாதாரத்தில் பாரிய தொய்வு ஏற்பட்ட காலமாகும். 1929ம் ஆண்டு பிரித்தானியப் பொதுத் தேர்தலில் தொழிற்கட்சி வெற்றி பெறக் காரணமாயிருந்தது பிரித்தானியாவில் 1927 முதல் மோசமடைந்து வந்த பொருளாதார நெருக்கடியாகும். இந்தியாவில் சைமன் ஆணைக்குழுவும் இலங்கையில் டொனமூர் ஆணைக்குழுவும் நியமிக்கப்பட்டதன் நோக்கம் 1929ல் பிரித்தானியாவில் தொழிற்கட்சி ஆட்சிக்கு வரும் வாய்ப்புள்ள நிலைமைகளில் கொலனி நாடுகட்குக் கூடிய சலுகைகளை வழங்கலாம் என்று வலதுசாரிகள் அஞ்சியமை எனக் கூறப்படுகிறது. ஆட்சிமாற்றத்தின் முன்னரே பழமைவாதிகள் ஆதிக்கத்தில் இருந்த போதே சில சீரத்திருத்தங்களை மேற்கொள்வதன் மூலம் கொலனிய நாடுகளில் இருந்த அரசாங்கங்களில் உள்நாட்டவரது அதிகாரங்களை மட்டுப்படுத்துவதே இந்த ஆணைக் குழுக்களை நியமித்ததன் நோக்கம் என்று கொள்ளலாம்.

டொனமூர் ஆணைக்குழு இலங்கை தேசிய காங்கிரஸ் தலைவர்களது நிலைப்பாடுபற்றி மிகவும் அதிருப்தி தெரிவித்தது. உள்நாட்டு அரசாங்கத்திற்கு கூடிய அதிகாரங்களைப் பெறுவது பற்றி அவர்கள் அக்கறை காட்டிய அளவுக்கு அந்த அரசாங்கத்தை தெரிவு செய்யும் அதிகாரத்தை நாட்டின் மக்களுக்குப் பரவலாக்க விரும்பவில்லை என்பது தெட்டத் தெளிவாகவே இருந்தது. ஒட்டுமொத்தமாக இலங்கை தேசிய காங்கிரஸ் சார்பில் கூறப்பட்ட கருத்துகள் மிகவும் பழைமைவாத நோக்கிலே அமைந்திருந்தன என்பதையிட்டு ஆணைக்குழு குறிப்பான அதிருப்தி காட்டியது . டொனமூர் ஆணைக்குழுவில் தீவிரமான ஊக்கத்துடன் செயற்பட தொழிற்கட்சி உறுப்பினரான ட்றமண்ட் ஷீல்ஸ் தனது கட்சிக்கும் ஏ.ஈ.குணசிங்கவுக்கும் உருவாகியிருந்த தொடர்புகளின் பின்னணியிலே ஏ.ஈ.குணசிங்கவை சர்வசன வாக்கெடுப்புக்கு ஆதரவாகவும் ஆணைக்குழுவுக்கு ஏற்புடையதாகவும் சாட்சியமளிப்பதற்கு வழிகாட்டி ஊக்குவித்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே டொனமூர் அறிக்கை அன்றைய இலங்கையின் அரசியல் தலைவர்களது விருப்பங்களின் அடிப்படையில்லா அவற்று க்கும் பெருமளவும் முரணாகவே சர்வச வாக்குரிமையை வழங் கியது எனலாம். வரவிருந்த புதிய அரச அவையின் பிரதிநிதித்துவம் தொடர்பாக முக்கியமான கருத்து முரண்பாடுகள் இருந்தன.

### இலங்கை மக்களின் சுதந்திர அபிலாஷைகளை டொனமூர் சீர்திருத்தம் ஏற்க வில்லை.

"பொறுப்புள்ள "அரசாங்கம் ஒன்றை நடத்த இலங்கையர் இன்னமும் தகுதி பெறவில்லை என்ற கருத்து அப்போது சிங்கள மயமாகிவிட்ட இலங்கை தேசிய காங்கிரஸிலும் கணிசமானோரிடம் இருந்தது. இந்தவிதமானவர்கள் இலங்கைக்கு கொலனிய அமைப்புக்கு உட்பட்ட சுயாட்சி பெற இன்னும் அவகாசம் வேண்டும் என்ற எண்ணத்தையே கொண்டிருந்தனர் .அதேவேளை கண்டியச் சிங்களவர் கரையோரச் சிங்களவர் என்ற வேறுபாடுகளும் வலுவானதாக இருந்தது. இலங்கைத் தேசிய காங்கிரஸ் கேட்ட முழுமையான பொறுப்புள்ள அரசாங்கத்தை டொனமூர் அறிக்கை ஏற்கவில்லை. பல்வேறு சிறுபான்மை சமூகத்தினருக்கான பிரதிநிதித்துவம் என்ற கருத்தையும் அறிக்கை நிராகரித்தது. 21 வயதான ஆண்கட்கும் 30 வயதான பெண்கட்கும் வாக்குரிமை என்று டொனமூர் அறிக்கை பரிந்துரைத்த போதும் பிரித்தானியக் கொலனிய நிர்வாகம் 1931ம் ஆண்டில் இருபாலாருக்கும் 21 வயது என்று வாக்குரிமைக்கான வயதை நிர்ணயித்தது.

டொனமூர் அறிக்கையின் அடிப்படையில் நிறுவப்படவிருந்த அரச சபை பற்றிய எதிர்ப்பு முக்கியமான சில கோணங்களிலிருந்து எழுந்தது. இலங்கைவாழ் "இந்தியர்கட்கு" நிபந்தனையின்றி வாக்குரிமை வழங்கியது சிங்களத் தலைவர்களிடையே முக்கியமாக கண்டிய மலைநாட்டு சிங்களத் தலைவர்களிடையே கசப்புணர்வை ஏற்படுத்தியது. இதில் மலையகத் தமிழர் பற்றிய குரோதத்தை விட ஆங்கிலத் தோட்டத் துரைமாரின் அரசியல் செல்வாக்கு கூடிவிடும் என்ற அச்சமே உடனடியாக அதிகமா யிருந்தது

டொனமூர் பரிந்துரைகளின் கீழ் இலங்கைத் தேசிய காங்கிரஸ் தலைமை எதிர்ப்பார்த்தளவு ஆட்சி அதிகாரம் "அரச சபைக்கு" வழங்கப்படவில்லை. அமைச்சரவை என்பதற்கு மாறாகக் "செயற் குழு" என்ற அமைப்பும் கொலனிய ஆளுநரின் அதிகாரங்கள் மேலும் வலுப்படுத்தப்பட்டமையும் அதிருப்திக்கு காரணமாயின.

சிறுபான்மையினரிடையே தமக்கான பிரதிநிதித்துவம் போதாமை பற்றியும் உறுப்பினர்களில் 50 சதவீதத்திற்கு மேற்பட்டோர் சிங்களவர்களாக அமைவதன் மூலம் தமது அரசியல் செல்வாக்கு மதிப்பிறக்கமடையும் என்ற கவலையும் இருந்தன. இதைப் பேரினவாத அரசியலின் எழுச்சியின் பின்பு இலங்கைத் தேசிய காங்கிரஸிலிருந்து பிரிந்து சென்ற பொன்னம்பலம் ராமநாதனும் பழமைவாதிகளான அகில இலங்கைத் தமிழர் கழகத் தலைவர்கள் மட்டுமன்றி முஸ்லிம்களது பிரதிநிதியான "துவான் பங் ஸ"ஜயாவும் எதிர்த்தனர். அது பயனற்று போன பின்பு இந்தத் தமிழ்த் தலைவர்கள் புதிய ஏற்பாட்டில் பங்கேற்றுப் பார்க்கலாம் என்ற நிலைப்பாட்டிற்கு மாறினர்.

இக் காலகட்டத்திலேயே இந்திய விடுதலை இயக்கத்தாலும் இந்திய தேசிய காங்கிரஸால் உணர்வூட்டப்பட்டவர்களுமான யாழ் குடாநாட்டு இளைய தலைமுறை ஒன்று முற்றிலும் வேறு பட்ட ஒரு கோணத்திலிருந்து டொனமூர் அறிக்கையை எதிர்த்தது. யாழ்ப்பாண மாணவர் கழகமாகத் தொடங்கி யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸாக உருப்பெற்ற அந்த அமைப்பு 1925ம் ஆண்டிலிருந்து சாதி ஒழிப்பு, சிங்கள மக்களுடன் ஒத்துழைப்பு,தேசிய ஆடை ஆங்கிலத்தின் இடத்தில் தாய்மொழி போன்ற சிந்தனைகளை வற்புறுத்தி வந்தது. டொனமூர் ஆலோசனைகள் பற்றிய அதன் நிலைப்பாடுகள் இலங்கையருக்கு பூரண சுயாட்சியை டொனமூர் ஆலோசனைகள் மறுப்பதனால் அதை நிராகரிப்பது என்று அமைந்தது. அந்தத் துணிவான சிந்தனையை வட பிரதேசம் முழுவதும் பிரசாரம் செய்து 1931 நடக்கவிருந்த அரச சபைத் தேர்தலைப் பகிஷ்கரிப்பது என்ற முடிவைக் குடாநாடு முழுவதும் வெற்றிகரமாக ஒப்பேற்றியது.

எனினும் தென்னிலங்கையின் சந்தர்ப்பவாத அரசியல் இவ்வாறான பகிஷ்கரிப்பை இயலாமலாக்கியது. இவ்வாறு நாடளாவிய ஒரு சுதந்திர இயக்கத்திற்கான முதல் வாய்ப்பு சிங்கள மேட்டுக்குடி அரசியல்வாதிகளால் மறுக்கப்பட்டது. மன்னாரிலும் மலையகத்திலும் கொழும்பிலும் இருந்த தமிழர் பிரமுகர்களும் தேர்தலில் போட்டியிட்டனர். பொன்னம்பலம் ராமநாதன் அப்போது உயிருடன் இல்லை..

பதவிகளின் அடிப்படையிலேயே அமைந்த அன்றைய தமிழ்த்தேசிய அரசியல் தலைமை பகிஷ்கரிப்பை எதிர்த்து நடத்திய பிரசாரத்தை மக்கள் நிராகரித்தனர். கிராமசபைகளுடாக பகிஷ்கரிப்பை எதிர்த்து தீர்மானங்களை நிறைவேற்றுகிற முயற்சிகளும் தோல்வி கண்டன. எனினும் நாடளாவிய முறையில் பகிஷ்கரிப்பு பயனளியாத சூழ்நிலைகளிலும் இந்தியத் தேசிய காங்கிரஸின் வழியில் அந்நியப் பொருட்களைப் பகிஷ்கரிக்கும் இயக்கம் எதிர்ப்பார்த்தளவு பொதுசன ஆதரவை பெறாத நிலையிலும் 1933ம் ஆண்டு யாழ்ப்பாணத்திற் கூட்டப்பட்ட தமிழர் மாநாடொன்றில் மேட்டுக்குடிகளின் கை ஓங்கியது பகிஷ்கரிப்பு தீர்மானம் தவறென்று கடுமையான கண்டணத்திற்குள்ளானது. பகிஷ்கரிப்பை முன்னெடுத்த முக்கியமான தலைவர்களும் அந்தக் கண்டனத்தின் முன்பு தாக்குப்பிடிக்க இயலாது பணிந்து போன பின்பு பகிஷ்கரிப்பு இயக்கம் முடிவுகட்டப்பட்டு 1934ல் யாழ் குடாநாட்டுக்கான பிரதிநிதிகள் தெரிந்தெடுக்கப்பட்டனர். இதுவே யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸின் சரிவுமாயிற்று .

எவ்வாறாயினும் இலங்கையின் தேசிய விடுதலைக்கான ஒரு அறைகூவல் என்ற வகையில் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் டொனமூர் அறிக்கையையும் அரச சபைத் தேர்தலையும் பற்றி எடுத்த நிலைப்பாடு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. 1921ல் பொன்னம்பலம் அருணாசலத்தை வஞ்சித்து சிங்கள மேட்டுக்குடி தலைவர்கள் இலங்கைத் தேசிய காங்கிரஸை ஒரு நாடளாவிய அமைப்பாகவும் இன வேறுபாடுகள் கடந்ததும் சமூக நீதிக்காக குரல் கொடுக்கக்கூடியதுமான ஒரு அரசியற் கட்சியாகவும் விருத்திபெறாமல் தடுத்தனர். அதன்மூலம் பேரினவாதத்தையும் குறுகிய தேசிய வாதத்தையும் மேட்டுக்குடி அரசியலில் நுழையவிட்டனர். பத்தாண்டுகள் பின்பு முற்போக்கான தேசிய முதலாளியத் தலைமையின் கீழ் ஒரு நாடளாவிய தேசிய இயக்கம் உருவாகாமல் தடுக்கப்பட்டது. இது தேசிய இன அடிப்படையிலான அரசியலை வலுப்படுத்தினாலும் அவர்களது வர்க்க நலன்கள் கொலனிய ஆட்சிக்கு எதிராக அவர்களை ஒரு வலிய சக்தியாகச் செயற்பட அவர்கட்கு இடமளிக்கவில்லை.

நெருக்கடிகள் சில மனிதரின் உயர்ந்த பண்புகளுக்கும் வேறு சிலரின் கீழ்மையான பண்புகட்கும் கதவுகளை திறந்து விடுகின்றன. டொனமூர் ஆணைக்குழு செயற்பட்ட காலமும் அதன் ஆலோசனைகள் நடைமுறைப்படுத்தப்பட்ட காலமும் உலகளாவிய பொருளாதாரத் தொய்வு நிலையில் இலங்கையும் கடுமையாகப் பாதித்த காலத்திற்குட்பட்டவை . இவ்வாறான ஒரு நெருக்கடியான சூழலில் பாட்டாளிவர்க்கச் சிந்தனையால் வழிநடத்தப்பட்ட ஒரு தொழிலாளிவர்க்கமும் அச்சிந்தனையை உயர்த்திப்பிடித்துள்ள ஒரு தலைமையும் இச் சூழலை தேசிய விடுதலைக்கான ஒரு இயக்கமாக மட்டுமன்றிப் பாட்டாளி வர்க்கத் தலைமையின் கீழ் சமூக நீதிக்கானதும் சமூக சனநாயகத்திற்கானதுமான ஒரு இயக்கமாகவும் வளர்த்தெடுத்திருக்கலாம். ஆனால் அதற்கான வாய்ப்பை அன்றைய தொழிற்சங்க அமைப்புக் கொண்டிருக்கவில்லை.

ஏ.ஈ. குணசிங்கவின் கம்யூனிஸ விரோதம் பிரித்தானிய தொழிற்கட்சியால் மேலும் ஊக்குவிக்கப்பட்டிருந்ததால் பொருளாதார நெருக்கடியின்போது ஏ.ஈ. குணசிங்க தனது அரசியலின் சிறு முதலாளி வர்க்கத்தன்மைக்கு உடன்பாடாகவே நடந்து கொண்டார். அவரது சந்தர்ப்பவாத இந்திய விரோத அரசியல் அவரைக் காப்பாற்ற உதவவில்லை. இடதுசாரிகளின் அரசியற் பிரவேசம் அவரது சரிவின் ஒரு காரணமாக அமைந்தது. என்றாலும் குணசிங்கவால் தொடர்ந்தும் ஒரு தொழிலாளி வர்க்கத் தலைவராக உலா வந்திருக்க இயலுமா என்பது ஐயத்திற்குரியது.

### யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசின் 1931 பகிஷ்கரிப்பு துணிவான கொலனிய எதிர்ப்பு நடவடிக்கையாகும்.

உலகப் பொருளாதாரத் தொய்வும் இலங்கையில் அதன் பாதிப்புகளும் இலங்கை அரசியலில் சில முக்கியமான மாற்றங்களைப் புகுத்தின. அவற்றில் மிக முக்கியமானவை இலங்கையின் நாடளாவிய கொலனிய எதிர்ப்பு இயக்கமாக இடதுசாரிகள் தம்மை அடையாளப்படுத்தியதுடன் தொழிலாளி வர்க்கத் தலைமையைத் தம் வசமாக்கியதும் எனலாம் எனினும் இந்த இடதுசாரித் தலைவர்களது வசதிபடைத்த வர்க்கப்பின்னணி இடதுசாரி இயக்கத்தின் வளர்ச்சிப் போக்கை பிற உலகநாடுகளினின்று எவ்வாறு வேறுபடுத்தியது என்பதையும் நாம் அடுத்து வரும் பகுதிகளிற் காண்போம். **வளரும்**

## தேர்தலும் வாக்குரிமையும்

இலங்கை மக்களுக்கு சர்வசன வாக்குரிமை கிடைத்து 77 வருடங்கள் ஆகின்றன. முதலாவது அரச சபைக்கு வாக்களித்தவர்களில் ஒருவர் இருவர் கூட இன்று இருக்கமாட்டார்கள்.

ஆனால் இத்தனை வருடங்களாக வாழையடி வாழையாக வாக்களித்து வந்த மக்கள் பெற்றுக் கொண்ட பயன்கள் தான் யாவை? அதே வேளை இவ்வாக்குகளை வாங்கிப் பாராளுமன்றம் வரை சென்ற ஆண்ட பரம்பரையினரின் ஆளும் வர்க்க வாரிசுகள் தான் சொத்தும் சுகபோகங்களும் அனுபவித்து வருகின்றனர். பாராளுமன்ற ஜனநாயகமும் அதன் கீழான தேர்தல்களும் மக்களை அரசியல் விழிப்பற்ற மக்களாக வைத்து பணத்திற்கும் பரம்பரையினருக்கும் சாதிய நிலைக்கும் பின்னால் செல்லும் மந்தைக் கூட்டங்களாக மாற்றி விட்டது. பணம் பதவி அந்தஸ்து உயர் வர்க்கம் சாதி என்பவற்றைக் கொண்டவர்கள் தான் தேர்தலில் வேட்பாளர்களாக நிற்க முடியும் வெற்றி பெற முடியும் என்ற நிலை தான் இன்று வரை நீடித்து நிலைத்து வருகிறது. அத்தகைய கனவான்கள் மக்களை ஏமாற்றும் வாக்குறுதிகளை அள்ளி அள்ளி வழங்குவர் அவர்களது கட்சிகளும் தேர்தல் விஞ்ஞாபனங்களை வெளியிடும். அவை ஆளப்படும் கண்ணோட்டத்தில் முன்னெடுக்கப்படும் போது மக்கள் ஆளப்பட்ட அடிமை மனப்பான்மையுடன், பணிவுடன் தேர்தலில் புள்ளடியிட்டு அரசியல் திருப்தி கொள்வர். மக்கள் மாற்றுச் சிந்தனைக்குப் போகாதவாறு மலட்டு அரசியல் பாரம் பரியத்தை பின்பற்ற வைத்துள்ளது. தேர்தல்களில் பின்பற்றப்படும் முறைகேடுகள், பலாத்காரங்கள், ஏமாற்றுக்கள், ஊழல்கள் போன்றவற்றை நேரில் கண்டு அனுபவித்த பின்பும் அதிலிருந்து அனுபவங்களைப் பெறாது அறணை அரசியலின் பின்னால் மக்கள் இழுபட்டுச் செல்வது தான் முதலாளித்துவ பேரினவாத ஆளும் வர்க்கத்திற்கு கிடைத்து வரும் வெற்றியாகும். எதிலும் கேள்வி எழுப்பாத சமூகமாக அரசியல் விழிப்புணர்வற்ற மக்களாக இருப்பதையே பாராளுமன்ற ஜனநாயகம் தொடர் ந்து வற்புறுத்தி வருகிறது. அதனையே அரசியலமைப்பு உட்பட நிறுவனங்கள் யாவும் வரையரை செய்து வற்புறுத்துகிறது. இந்நிலையில் இன்றும் 100 வருடங்கள் ஜனநாயகம் எனக் கூறி மக்கள் வாக்களித்தாலும் மாற்றங்கள் எதுவும் வரப்போவதில்லை.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# சுகாதாரம் இன்மையோடும் நோய்களோடும் போராடும் வடபுலத்து மக்கள்

**வட புலத்து மக்களை அம்** மண்ணின் பெரு வளமாக இருந்து வரும் பனைகளுடனும் அவற்றின்
கன்றுகளான வடலிகளுடனும் ஒப்பிடுவர். எப்படி வெட்டினாலும் அழித்தாலும் அந்தக் கரும் பனைகள் அந்த மண்ணில் மீண்டும் மீண்டும் வேர் பாச்சி வளர்ந்து கொண்டேயிருக்கும். வெறும் வளர்ச்சி மட்டுமன்றி பயன்கள் பல தருவதுடன் வைரம் பாய்ந்தவைகளாகவும் விளங்கும். அதே போன்று தான் வடபுலத்து மக்களும் எத்தனையோ அழிவுகள் இழப்புக்கள் இடப்பெயர்வுகள் பொருளாதார நெருக்கடிகள் மத்தியில் வாழ்ந்து வருகிறார்கள். பேரினவாத ஒடுக்கு முறை ஒருபுறத்தால் மக்கள் வாழ்வை அடக்கி ஒடுக்கி நிற்க மறுபுறத்தால் மேய்ப்பர்கள் என்போர் மக்களைச் சூறையாட அநியாயங்களும் அவலங்களுமே இங்கு மேலோங்கிக்கொண்டன. மக்களின் நலன்கள் தேவைகள் அபிலாஷைகள் புறந்தள்ளப்பட்டன. அதில் ஒன்றே சுகாதார மருத்துவ பிரச்சனையாகும்.

இன்று வட புலத்தில் வாழ்ந்து வரும் சுமார் ஆறு லட்சம் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளில் சுகாதார மருத்துவப் பிரச்சினை முக்கிய இடத்தை வகிக்கிறது. யுத்த சூழலின் நீடிப்பும் அதன் காரணமான பொருளாதார நெருக்கடிகளும் உணவு உடை இருப்பிடங்களின் வசதியின்மைகளும் சூழல் மாசடைதல்களும் வடபுலத்து மக்களின் சுகாதாரத்தைக் கடுமையாகப் பாதித்து வந்துள்ளன. உரிய ஊட்டச்சத்துணவுகள் பெற முடியாமையால் குழந்தைகள் சிறுவர்கள் பெண்கள் முதியவர்கள் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வந்துள்ளனர். அத்துடன் யுத்தத்தின் காரணமான வெடி மருந்துகளின் நச்சு இரசாயனங்களின் பரவல்கள் மக்கள் வாழ்வைப் பாதித்து கடுமையான நோய்கள் பெருகக் காரணமாகின.



இவற்றுடன் நீரிழிவு இருதய சிறுநீரக நோய்கள் பலமடங்காகி மக்களை வாட்டி வதைத்து வருகின்றன. புற்று நோயின் தாக்கம் வட பகுதியில் விசேஷித்த ஒன்றாக இருந்து வருகிறது. அதே போன்று முன்பு கட்டுப்பாட்டிற்குள் இருந்து வந்த காச நோய் மலேரியா காய்ச்சல் என்பன மீளவும் பரவி வரும் சூழல் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. மூளைக் காய்ச்சல் சிக்கிண்குன்யா காய்ச்சல் போன்றன உயிர் குடித்து வருகின்றமை காணக்கூடியதாகும். மன அழுத்தம் வளர்ச்சி பெற்று மனநோய் கணிசமான அளவுக்கு மக்களைப் பீடித்து வருகின்ற போக்கு அதிகரித்துக் காணப்படுகின்றது. மேலும் குறிப்பாக மகப்பேறு காணும் தாய்மார்கள் கடுமையான சிரமங்களின் மத்தியிலேயே குழந்தைகளைப் பெற்றெடுத்துப் பராமரித்து வளர்க்க வேண்டியுள்ளது. இத்தாய்மார்கள் தாய்மை அடைந்ததிலிருந்து பிரசவம் இடம் பெற்ற பின்பும் எதிர் கொள்ளும் உணவு சுகாதாரம் மருத்துவம் போன்றவை கடுமையான பிரச்சினைகளாகவே இருந்து வருகின்றன. இதனால் தாய் சேய் மரணங்கள் அடிக்கடி நிகழ்ந்து கொள்கின்றன. அகால மரணங்கள் கொடுமையானவைகளாகத் தொடர்ந்து இடம் பெற்று வரும் வடபுலத்து மண்ணிலே நோய்களின் தாக்கத்தினால் இறப்பு விகிதம் அதிகரித்து வருவதையும் அவதானிக்க முடிகிறது. வடபுலத்திலே யாழ் நகரில் அமைந்துள்ள அரசாங்க பொது மருத்துவமனையானது பெரியதும் ஒரே ஒரு போதனா மருத்துவமனையாகவும் இருந்து வருகின்றது. இங்கு மட்டுமே பெரிய அளவிலான சத்திர சிகிச்சை உட்பட பல்வேறு நோய்களுக்கும் சிகிச்சை அளிக்க கூடிய வசதிகளும் உள்ளன. முன்பு அவற்றுக்குரிய வளங்களும் வைத்திய நிபுணர்களும் ஓரளவிற்கு இருந்து வந்தனர். ஆனால் கால் நூற்றாண்டுகால யுத்தம் இம் மருத்துவமனையின் வளங் களையும் ஆற்றல்களையும் சூறையாடி விட்டது. சேவை மனப் பான்மையுடன் பணிபுரிந்து வந்த பல வைத்தியர்களையும் நிபுண ர்களையும் புலம் பெயரவைத்தது. இலங்கை இந்திய இராணு வங்கள் இம் மருத்துவமனையை யுத்த களமாகப் பாவித்த சந்தர்ப்பங்கள் இடம்பெற்றன. அவ்வாறே தமிழர் விடுதலை எனப் போராடிய இயக்கங்களும் இம் மருத்துவமனையைத் தத்தமது சுய தேவைக்கான இடமாகப் பயன்படுத்தினர். இவற்றின் மொத்த விளைவானது பல லட்சம் தமிழ் மக்களின் நோய் தீர்க்கும் ஒரே ஒரு பெரும் பொது மருத்துவமனையாக இருந்து வந்த நிலை சீரழிந்து கொண்டது. இவற்றை ஆண்டு திகதி வாரியாகவும் சம்பவங்களையும் கோர்வைப்படுத்தி விபரிக்க முடியும். அது இக் கட்டுரையின் நோக்கம் அன்று.

தற்போதும் யாழ் பொது மருத்துவமனையானது வளப்பற்றாக்குறைகளுடனும் வைத்தியர்கள் வைத்திய நிபுணர்களின் போதாமைகளுடனும் தனது சக்திக்கு ஏற்ப நோயாளர்களுக்கும் பணியாற்றிவருகின்றது. அத்துடன் மருந்துகள் இல்லாமை உரிய நேரத்தில் கிடைக்காமை தொடர் கதையாகிக்கொண்டே செல்கிறது. நோய்ப் பரிசோதனைகளுக்குரிய நவீன கருவிகள் உபகரணங்கள் தொழில்நுட்பவியலாளர்கள் பற்றாக்குறை அல்லது இல்லை என்ற நிலை தான் இன்றும் அங்கு இருந்து வருகின்றது. முக்கியமாக வைத்தியர் கள் போதாமை தொடர்கின்றது. வடபுலத்தில் வைத்தியத் தொழிலில் ஈடுபடுவது ஆபத்தானது என்ற நிலையில் வடக்கு கிழக்கிற்கு அப்பாலும் அதையும் விட கடல் கடந்து வெளிநாடுகளுக்கும் சென்று விடும் போக்கு கடந்த காலத்தில் அதிகரித்தே வந்துள்ளது. எமது மண்ணும் மக்களும் என்ற சேவை மனப்பான்மையுடன் பல வைத்தியர்களும் வைத்திய நிபுணர்களும் தொடர்ந்து இங்கு இருந்து பணியாற்றுவதை நன்றியுணர்வுடன் குறிப்பிட்டேயாக வேண்டும். அதன் மத்தியிலும் சுய நலம் பாரா முகம் பணம் நாட்டம் பதவி துஷ்பிரயோகம் முறைகேடுகள் என்பனவும் இங்கு இல்லை எனவும் கூறிவிட முடியாது

அதே வேளை யாழ் பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடம் தொடர்ந்து இயங்கி வருகின்றது. அதுவும் யுத்த சூழலால் வளங்களின் போதாமை இல்லாமை என்பனவற்றுடன் தான் செயல்பட்டு வருகிறது. மிகப்பெரிய குறைபாடு யாதெனில் மருத்துவ பீடத்திற்கான போதிய விரிவுரையாளர்கள் பேராசிரியர்கள் இல்லாமையாகும். இதனால் மாணவர்கள் கற்கை நெறிகளை உரிய நேர காலத்தில் மேற்கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

இருந்தும் இங்குள்ள விரிவுரையாளர்கள் பேராசிரியர்கள் வைத்திய நிபுணர்கள் பல்வேறு சிரமங்கள் வேளைப்பளு என்பனவற்றின் மத்தியிலும் மாணவர்களுக்கான கற்பித்தலுக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர் சிலர் எப்போது வடபுலத்தை விட்டு அகன்று விடலாம் என்ற சுயநல நிலையிலும் இருந்து வருவதையும் காண முடிகிறது. உதாரணமாக வைத்தியக் கல்வி முடித்த மாணவர்கள் தமது மருத்துவமனைகளிலான உள்ளகப் பயிற்சியை வடபுலத்திற்கு அப்பால் வெளிமாவட்டங்களில் கோரி நின்ற விடயம் கடந்த வருடம் இடம் பெற்றது. சுகாதார அமைச்சு அவர்களுக்கு யாழ் போதனா மருத்துவமனையில் பயிற் சியை தொடருமாறு நியமனம் வழங்கப்பட்டமையை பல மாணவர்கள் எதிர்த்தனர். அது பலதரப்பினராலும் கண்டிக்கப்பட்டது. அமுதவேளை தென்னிலங்கையில் இருந்து சிங்கள வைத்தியர்களும் உள்ளகப் பயிற்சி மாணவர்களும் யாழ் போதனா மருத்துவமனையில் இன மொழிச் சிக்கல்கள் மத்தியிலும் பணிபுரிவது சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகும். தொடரும் யுத்த சூழலில் நமது மக்கள் படும் வேதனைகளைக் கண்டும் அனுபவித்தும் வரும் நமது வைத்தியத் துறை மாணவர்கள் மண்ணையும் மக்களையும் விட்டு ஓடிவிட முயற்சிப்பது எந்த உணர்வின் பாற்பட்டது என்ற கேள்வி எழுவது இயல்பானதாகும். இதனை உணர்ந்ததன் விளைவே இம் முறை நாற்பது வைத்திய மாணவர்கள் தமது உள்ளாகப் பயிற்சியை யாழ் போதனா மருத்துவமனையில் மேற்கொள்ள முன் வந்திருக் கின்றனர் என்ற முடிவு வரவேற்கப்பட வேண்டியதாகும்.

யாழ் போதனா மருத்துவமனை தவிர்த்து வடபுலத்தில் நடுத்தர மருத்துவமனைகளும் கிராமிய மட்ட மருத்துவமனைகளும் இயங்கி வருகின்றன. அவை கூட ஒரு கால கட்டத்தில் மக்களுக்கு முடிந்தளவு சிறப்பான சிகிச்சையளித்து வந்தன. ஆனால் இன்று வளங்களும் போதிய வைத்தியமும் இன்றி பெயரளவில் அரை குறையாக இயங்கி வருகின்றன. அரசாங்கம் பேரினவாத நிலைப்பாட்டுடன் ஏனோ தானோ என்ற நிலையிலேயே அவற்றை பராமரித்து வருகின்ற. போதிய மருந்துகள் உபகரணங்கள் பரிசோதனைக் கருவிகள் இன்றி அறை குறை வைத்தியம் செய்யப்படும் அவல நிலை நீடிக்கிறது.

முன்பு மனநோயாளர்களுக்காக மந்திகையிலும் தெல்லிப்பளையிலும் தனி மருத்துவப் பிரிவுகளும் வார்டுகளும் இயங்கி வந்தன. யுத்தம் அவற்றின் செயற்பாடுகளை முடங்கச் செய்ததுடன் மனஅழுத்த மன நோயாளர்களின் எண்ணிக்கையினை அதிகரிக்கவும் செய்துள்ளது மந்திகை மருத்துவமனையில் மனநோயாளர்களைக் கொள்ள முடியாதுள்ளது. தெல்லிப்பளை மருத்துவமனை உயர் பாதுகாப்பு வலத்தினுள் இருப்பதால் அங்கு செலல முடியாது இதனால் அதிகரித்து வரும் மன அழுத்தம் மன நோய் கண்டவர்களுக்கு வைத்தியம் செய்வதும் பராமரிப்பதும் பெரும் பிரச்சினையாகவே உள்ளது.

புற்று நோய்க்கு தெல்லிப்பளையில் ஒரு சிகிச்சைப் பிரிவும் யாழ் பொது மருத்துவமனையில் ஒரு வார்டும் இருந்து வருகின்றது. அதே வேளை புற்று நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணம் உள்ளன. கடுமையான நோயாளர்கள் கொழும்பிற்கே அனுப்பிவைக்கப்படுகின்றனர். அவர்கள் நோயின் கொடுமையையும் போக்குவரத்தின் வேதனையையும் அனுபவிக்க வேண்டியுள்ளது. அண்மையில் யாழ் போதனா மருத்துவமனை நிர்வாகம் எடுத்த முன் முயற்சியால் பண்ணைப் பகுதியில் தனிப் புற்று நோயாளர்களுக்கான மருத்துவமனை ஒன்றை நிர்மாணிக்க முடிவு செய்யப்பட்டமை வரவேற்கக் கூடியதாகும். இதற்கு அரசாங்கத்திடமும் வெளிநாட்டிடமும் நிதி கேட்கப்பட்டுள்ளது. இன்று புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் வடபுலத்தைச் சேர்ந்த ஒரு சிலர் முன்வந்தாலே அத்தகைய ஒரு புற்று நோய் மருத்துவமனையை கட்டியெழுப்பி

தொடர்ச்சி 15ம் பக்கம்

## கண்டதும் கேட்டதும்

செய்திக் கோப்பு

ஏசெந்குருவி

### மனிதரையும் கடவுளையும் ஏமாற்றுவோர்.

இரண்டு வாரங்களுக்கு முன்பு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது செயலாளருடன் திடீரென இந்தியாவிற்குப் பயணமானார். ஏதோ முக்கிய சந்திப்பும் முடிவும். வரப்போவதாகப் பலதரப்பிலும் பரபரப்பு ஏற்பட்டது. விடயம் என்னவென்றால் ஜனாதிபதி திருப்பதி வெங்கடேஷ்வர கோவிலுக்குச் சென்று வழிபட்டு அருள் வாங்கி நாடு திரும்பினார். தனது ஆட்சி அதிகாரம் நிலைத்து நீடிக்கவும் "பயங்கரவாதத்தை" ஒழிக்கவுமே வரவேண்டிக் கொண்டார். இவ்வாறு தான் இரண்டு மாதங்களுக்கு முன்பு ரணில் விக்கிரமசிங்க குருவாயூர் கோவிலுக்குச் சென்றுதான் மீண்டும் ஆட்சிக்கு வர அருள் வேண்டிக் கொண்டார். இந்த இரண்டு பௌத்த சிங்களப் பேரினவாதத் தலைவர்களும் சிங்கள மக்களை மட்டுமன்றி புத்தரையும் இந்துக் கடவுள்கள் எனப்பட்டவர்களையும் ஒரே நேரத்தில் ஏமாற்றுவது தான் சிரிப்புக்கு உரியதாகும்.

### சம்மந்தனிடம் ஒரு கேள்வி ?

மன்னார்ப் பிரதேசத்தில் எண்ணெய் வள ஆய்வை சீனா மேற்கொள்வதைத் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்று தமது இந்திய எசமானர்களிடம் எடுத்துரைத்தவர் தமிழ்க் கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன். அண்மையில் வடபுலத்தில் நிலவும் மின்சாரத்தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யவென சீனத் தயாரிப்பிலான ஆறு மின் பிறப்பாக்கிகள் கப்பல் மூலம் எடுத்துச் செல்லப்பட்டன. அவை தற்போது அங்கு இயங்கத் தொடங்கியும் உள்ளன. 35 மெகவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் அச் சீன மின்பிறப்பாக்கிகளை வடபுலத்து தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடாது. என ஏன் சம்பந்தன் அறிக்கை விடவில்லை. தமிழ் மக்களின் நலன்கள் தேவைகள் வேறானவை. தமிழ்த் தலைமைகளின் தேவைகள் நலன்கள் வெவ்வேறானவை . என்பதே உண்மையாகும்.

### ஆண்ட பரம்பரையின் குடும்ப ஆட்சி

தெற்கிலிருந்து அதிகாரக் கதிரைக்கு வந்தவர் மகிந்த. அவரது மூன்று சகோதரர்களும் இணைந்தே இன்றைய ஆட்சியை வழிநடத்தி வருகிறார்கள். மகிந்தவானவரின் ஆழ்ந்த விருப்பம் அடுத்த பதவிக் காலத்தையும் தனதாக்கிக் கொள்வதேயாகும். அத்துடன் முடியப் போவதில்லை. மகன் நாமல் வளரவேண்டும் பதவிபெற வேண்டும். ஆண்ட பரம்பரையாய் நீடித்து நிற்க வேண்டும் என்பதாகும். அதற்கான ஆரம்பப் பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன என்றே பேசிக் கொள்ளப்படுகிறது. குடும்ப ஆட்சி என்று ஊடகங்களில் எழுதப்படுகிறதே என்று யாரோ கேட்டதிற்கு நான் மட்டுமா குடும்ப ஆட்சி நடத்துகிறேன். கடந்துபோன ஆட்சிகள் யாவும் குடும்ப ஆட்சிகள் தானே என்ற வரலாற்றைக் கூறினாராம் ஜனாதிபதி. அதேவேளை இந்த அண்ணண் தம்பிகளுக்கிடையில் ஆட்சி அதிகாரப் பதவிகள் பற்றிய கருத்து முரண்பாடுகள் உரசல்கள் உருவாகி இருப்பதாகவும் செய்திகள் கசிந்துள்ளன. அவையும் ஆண்டபரம்பரையினரிடம் இருந்துவந்தமையும் வரலாறு தானே.

### தமிழகத்தின் அரசியல் நரி

தமிழக முதல்வர் கருணாநிதியை சிங்கம் என்பதா? புலி என்பதா? அல்லது உலகத் தமிழர்களின் ஏகத்தலைவன் என்பதா? இவை ஒன்றும் அவருக்குப் பொருத்தமானவைகள் அல்ல. நரி என்பதே பொருத்தமானதாகும். இப்போது இந்த வயதான நரி தனது இறுதிக் காலத்திலும் கூட எப்படி தமிழகத்தையும் தமிழர்களையும் வாழ வைப்பது என்பதில் எவ்வித அக்கறையும் காட்டுவதாக இல்லை. எப்படி தான் சேர்த்து வைத்த சொத்துகளை இரண்டு மனைவி பிள்ளைகளுக்குப் பகிர்வது என்றும் தனக்குப் பின் எந்தப் பிள்ளை பதவிக்கு வர வேண்டும் என்பதிலும் ஒரே யோசனையாக உள்ளார். அமெரிக்க விசுவாசியும் மத்தியில் ஆட்சி எது வந்தாலும் பாதம் தாங்கியும் தமிழகத்தைப் பல்தேசியக் கம்பனிகளுக்குத் தாரை வார்த்து பணம் பண்ணியவருமான கருணாநிதியின் தற்போதைய கவலை யாவும் தி.மு.க. வைத் தனக்குப் பின்பும் தனது குடும்பம் இறுக்கிப் பிடித்து வைத்து ஆளவேண்டும் என்பதேயாகும். ஸ்டாலின் அழகிரி, கனிமொழி வரிசையில் இப்போ பேத்தி கயல் விழியும் சேர்க்கப்பட்டுளார். தமிழே நீ வாழ்க. உன் பெயரால் கருணாநிதி குடும்பம் வளர்க.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# நவ தாராள உலகமயமாதல்

## தோழர் ஃபிடல் காஸ்ரோ பேசுகிறார்.........

[redacted]

நவீன தாராளவாதம் அனைத்து நாடுகளையும், குறிப்பாக நமது நாடுகள் அனைத்தையும் தனிச் சொத்தாக்கவே விரும்புகிறது. தாராளமயம் குறித்து இப்படி சொல்வதுதான் சரியாக இருக்குமென்று நினைக்கிறேன்.

இதன்பின்னர் நமது வளங்களில் என்னதான் மிச்சமாக இருக்கப் போகிறது? ஏனெனில் அவர்கள் கொள்ளையடிப்பதோடு உலகையே சுரண்டி, பெரும் செல்வத்தை குவித்து வருகிறார்கள். அது மட்டுமின்றி காகிதத்தைப் பொன்னாக்கும் முயற்சிகள் முன்னாளில் நடைபெற்றதைப் போல், பல்வேறு தகிடு தத்தங்களையும் செய்து வருகிறார்கள். தற்பொழுது இவர்கள் தங்கத்தை காகிதமாக்கி வருகின்றனர். இந்த காகிதத்தைக் கொண்டு எதை வேண்டுமானாலும் விலைக்கு வாங்க முயற்சிக்கின்றனர். இதில் மனிதனின் ஆன்மா மட்டுமே விலக்காக உள்ளது. இன்னும் துல்லியமாக சொல்ல வேண்டுமென்றால் பெரும்பான்மை மக்களின் ஆன்மாவைத் தவிர அனைத்தையும் அவர்கள் விலைக்கு வாங்குகிறார்கள்.

அவர்கள் இயற்கை வளங்களை, ஆலைகளை, ஒட்டுமொத்த தகவல் தொடர்பு சாதனங்களை, சேவைப் பிரிவுகளை இன்னும் பலவற்றை விலை கொடுத்து வாங்குகிறார்கள். இந்த வியாபாரத்தை உலகெங்கிலும் நடாத்தி வருகிறார்கள். தங்கள் நாடுகளைக் காட்டிலும் பிற நாடுகளில் மிகவும் மலிவாக இவை கிடைப்பதால், வேகத்துடன் விலை பேசுகிறார்கள். எதிர் வருங்காலங்களில் சிறப்பு வாய்ந்த முதலீடாகத் திகழும் என்ற நம்பிக்கையின் பேரில் இந்த வர்த்தக முயற்சிகள் நடைபெறுகின்றன.

இதன் இறுதி விளைவுகள் என்னவாகத்தான் இருக்கும்? நமக்கென்று என்னதான் மிஞ்சப் போகிறது? நாம் நடைமுறையில் இரண்டாந்தர குடிமக்களாகி விடுவோமா? குறிப்பாக ஒதுக்கி வைக்கப்பட்ட மக்களாக சொந்த நாட்டிலேயே இருக்கும் நிலை உருவாகிவிடுமோ? அவர்கள் உலகை மாபெரும் சுதந்திர வர்த்தக வலயமாக்க முயற்சி செய்து வருகிறார்கள். அதை இன்னும் சரிவர புரிந்து கொள்ள வேண்டுமெனில் கட்டற்ற வர்த்தக வலயம் குறித்து நாம் அறிதல் வேண்டும். இது ஒரு வித்தியாசமான தன்மைகளைக் கொண்ட பிரதேசம். இங்கு வரியேதும் செலுத்தத் தேவையில்லை. மூலப் பொருட்களையோ, உதிரிப் பாகங்களையோ சந்தையில் வாங்கி இணைக்கவோ அல்லது வேறு பொருட்களையோ உற்பத்தி செய்து கொள்ள முடியும். இங்கே மனித உழைப்புதான் பிரதான அம்சமாகத் திகழுகிறது. ஒரு சில துறைகளில் தங்கள் நாட்டில் அதே விலைக்கு கொடுக்கப்படும் கூலியில் 5% அளவே இந்த சுதந்திர வர்த்தக வலயங்களில் கூலியாக கொடுக்கப்படுகிறது. அவர்கள் நமக்கு அளிப்பது அல்லது நம்மிடம் விட்டுச் செல்வது மிகவும் குறைந்த கூலியையே.

இதில் கவலையளிக்கக்கூடிய விடயம் என்னவென்றால் நமக்கிடையே மோதலை உருவாக்கும் போட்டி நிலைகளே. நாம் ஒருவருக்கொருவர் போட்டியிடும் நிலை அதிகரிக்கிறது. பல்வேறு வரிச் சலுகைகள், முதலீட்டுச் சலுகைகள் ஆகியவற்றை வழங்குவதன் மூலம் அவர்களுக்குச் சாதகமான நிலையை உருவாக்குகிறோம். முதலீடுகளுக்காகவும், சுதந்திர வர்த்தக வலயங்களை



உருவாக்கும் பொருட்டும், மூன்றாவது உலக நாடுகள் ஒருவருக்கொருவர் போட்டி போடும் நிலையை அவர்கள் உருவாக்குகிறார்கள்.

நான் அறிந்த பல்வேறு நாடுகளில் வறுமையும், வேலையின்மையும் தலை விரித்தாடுகிறது. ஆயினும் இந்நாடுகள் உலகில் அனைவராலும், ஏற்கப்பட்ட நிலைக்கு ஆளாவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நினைப்பில், சுதந்திர வர்த்தக வலயங்களை உருவாக்க வேண்டியிருக்கிறது. இந்நாடுகளின் இந்நிலை இல்லையேல் இந்த வலயங்கள் உருவாக முடியாது. மேலும் இந்த வலயங்களிலுள்ள தொழிற்சாலைகளை உருவாக்கியவர்கள், தங்கள் நாட்டு சம்பளத்தின் 5% முதல் 7% அளவோ அல்லது அதைக்காட்டிலும குறைவாகவோ இந்த கட்டற்ற வர்த்தக வலையங்களில் கூலியாக வழங்குகிறார்கள்.

அவர்கள் நமது நாட்டையே மாபெரும் சுதந்திர வர்த்தக வலயமாக மாற்ற முயற்சிக்கின்றனர். பின்னர் அவர்களிடம் உள்ள பணபலம் மற்றும் தொழில்நுட்பத்தின் துணைகொண்டு அனைத்தையும் வாங்கத் தொடங்குவர். இதுதான் நிகழப்போகிறது. இதன் பின்னர் எத்தனை விமான நிலையங்கள் தேசிய சொத்தாக நீடிக்கும் என்பது தெரியவில்லை. எத்தனை துறைமுகங்கள், எத்தனை வகை சேவைப் பிரிவுகள் மக்களின் சொத்தாக நாட்டின் உரிமைப் பொருளாக இருக்கும் என்பதும் தெரியாது.

இவ்வகையான எதிர்காலத்தைத்தான் நவீன தாராள்வாத உலகமயமாக்கல் நமக்கு அளிக்கிறது. இது உலகெங்கிலுள்ள தொழிலாளர்களுக்கு மட்டுமே வழங்கப்படுவதாக கருத வேண்டாம். தேசிய வர்த்தகர்கள், சிறு மற்றும் இடைநிலை முதலாளிகள் ஆகியோருக்கும் இதே கதிதான். உள்நாட்டு முதலாளிகள் பன்னாட்டு நிறுவனங்களுடன் போட்டியிடும் நிலைமைக்கு தள்ளப்படுகிறார்கள். பன்னாட்டு நிறுவனங்கள் நவீன நுட்பமான சாதனங்களை கொண்டிருப்பதோடு, உலகளாவிய விநியோக அமைப்பையும் கொண்டிருக்கிறது. இத்தகைய நிலையில்தான் நாம் அவர்களுடன் போட்டியிட வேண்டியுள்ளது. இவர்களது போட்டியாளர்களாக திகழும் பன்னாட்டு நிறுவனங்கள் இது போன்ற பாதகமான அம்சங்கள் இல்லாமல், தங்கள் பொருட்களை விற்பதற்கு சந்தையை பயன் படுத்திக் கொள்கிறார்கள்.


இனி தேசிய தொழிற்றுறைக்கு என்னநிலை ஏற்படும்? அவர்கள் எதை யாருக்கு ஏற்றுமதி செய்வது? உலகின் பெரும் பகுதியில் கோடிக்கணக்கான மக்கள் வறுமை, பசி, வேலையின்மையில் வாடிக் கொண்டிருக்கையில் இத்தகைய நுகர்வு சாதனங்களை வாங்கப் போவது யார்? அனைவரும் தொலைக்காட்சி, தொலைபேசி, குளிர் சாதனப்பெட்டி, கார், கணினி, வீடு, என இப்படி அனைவரும் ஒவ்வொன்றையும் வாங்கும் வரை காத்திருப்பதா? அல்லது வேலை

> **ஐ.நா. வின் பொன்விழா கொண்டாடப்பட்டபோது, மேற்குலகினதும் குறிப்பாக அமெரிக்காவினதும் எதிர்ப்பையும் மீறி ஏழு நிமிட உரையை நிகழ்த்திய ஃபிடல் காஸ்ட்ரோ உலகமயமாக்கலையும் நவீன தாராளவாத பொருளாதாரக் கொள்கையையும் 'சத்தமில்லாத அணுகுண்டு" என விமர்சித்தார். அந்த உண்மையை இலங்கை போன்ற மூன்றாமுலக நாடுகளின் மக்கள் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.**
>
> **நவீன தாராளவாதம் பற்றியும், அதன் எதிர்விளைவுகள் பற்றியும் அவர் ஆற்றிய உரையொன்றின் சுருக்கிய தமிழாக்கம்.**
>
> **-ஏகலைவா -**

யின்மைக்கான நிவாரணம் பெறுவதற்காக காத்திருப்பதா? பங்குச் சந்தையில் ஊக பேரத்தில் ஈடுபடுவதா? அல்லது ஓய்வூதியத்தை பத்திரப்படுத்துவதா? இதுதான் வளர்ச்சிப் பாதை என்று அவர்கள் பல்லாயிரம் முறை கூறி வந்திருக்கிறார்கள். உண்மையிலயே இந்தப் பாதை வளர்ச்சிக்கு வழி வகுக்குமா? சுங்க வரி பெருமளவில் குறைக்கப்பட்ட நிலையில் உள்நாட்டு சந்தை என்னவாகும்? பெரும்பாலான மூன்றாவது உலக நாடுகளின் வரவு செலவுத்திட்டத்தின் ஆதாரமாக சுங்க வரிதான் இருந்து வருகிறது. இப்போது சுங்க வரி குறைப்பு நிர்ப்பந்தமாய் அந்நாடுகள் மீது திணிக்கப்பட்டால் அவர்களின் கதி என்னவாகும்?

நவீன தாராளமயவாதிகளால் இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியவில்லை. இன்றைய தினம் வளர்ந்து வரும் நாடுகளில் மட்டுமின்றி பணக்கார நாடுகளிலும் வேலையின்மை என்பது பாரிய பிரச்சனையாக உருவெடுத்து வருகிறது. இந்த நிலையில் அவர்களால் என்றைக்குமே இந்தப் பிரச்சனைகசு தீர்வு காண முடியாது. ஒரு பக்கம் முதலீடுகளை அதிகரித்து தொழில் நுட்பத்தை மேம்படுத்தி வருகையில், மறுபுறம் அதிக அளவில் மக்கள் வேலையின்மைக்கு ஆளாகிறார்கள். இத்தகைய முரண்பாட்டை உள்ளடக்கியதாகவே இந்த அமைப்பு இருக்கிறது. மனிதனின் பேராற்றலிலிருந்துதான் உற்பத்தி திறனும், அதி நவீன கருவிகளும் பிறக்கின்றன. இது செல்வங்களை மட்டுமின்றி, வறுமையையும், தொழிற்சாலைகள் மூடப்படுவதையும் பன்மடங்காக பெருக்குகிறது. மனித சமூகத்திற்கு இதனால் விளையும் பயன் என்ன? வேலை நேரத்தை குறைத்து ஓய்வு, பொழுது போக்கு, விளையாட்டு, பண்பாடு, அறிவியல் மேம்பாடு ஆகியவற்றிற்கு அதிக நேரத்தை செலவிடும் பொருட்டு இந்நிலை உருவாக்கப்படுகிறதா? இது நிச்சயமாக நடக்க முடியாது. ஏனெனில் நாளுக்கு நாள் புதிய சந்தை விதிகளும் போட்டி முறைகளும், யதார்த்த நிலைகளைக் காட்டிலும் கற்பனையான அம்சங்களையே கொண்டுள்ளன.

பன்னாட்டு நிறுவனங்கள் உலகில் ஆதிக்கம் பெற்ற இந்நாளில்,



**கடந்த 49 ஆண்டுகளாக அமெரிக்காவிற்கு சிம்மசொப்பனமாக விளங்குவது கியூ பா. உலகில் உள்ள பல முதலாளித்துவ நாடுகளை விட எழுத்தறிவு, கல்வி, சுகாதாரம் எனப் பல தளங்களிலும் வியக்கத்தக்க வளர்ச்சிகளை எட்டி நிற்கிறது கியூ ப மக்களின் வாழ்க்கை. இவ்வளவு வெற்றிகளுக்கும் கியூ ப மக்களை வழிநடத்தியவர் ஃபிடல் காஸ்ட்ரோ.**

பெரும் நிறுவனங்களுக்கிடையிலான இணைப்புகளும் ஏகபோகங்களும் இவற்றை அனுமதிப்பதே இல்லை. இந்த உலகில் மற்ற போட்டியாளர்களுக்கு ஒரு சிறு இடமோ அல்லது மூலையோ கூட கிடையாது. பணக்கார நாடுகளின் அதி நவீன தொழில் நுட்பம் கொண்ட நிறுவனங்கள், மூன்றாவது உலக நாடுகளில் தொழி லாளர்களைக் கொண்டு ஜீன்ஸ், அதற்கான சட்டைகள், ஆடைகள், காலணிகள், பூச்செடிகள், என பல்வேறு பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவை அனைத்துமே பணக்கார நாடுகளின் தேவைகளுக்காக உற்பத்தி செய்யப்படுபவையே.

நாம் அனைவருமே அமெரிக்காவில் கஞ்சா பயிர் செய்யப்படுவதை அறிவோம். அங்கே பண்ணைகளிலும் வீட்டுத் தோட்டங்களிலும் தாராளமாக கஞ்சா பயிரிடப்படுகிறது. அங்கே விளைவிக்கப்படும் சோளத்தைக் காட்டிலும் கஞ்சாவின் மதிப்புதான் பலமடங்கு கூடுதலாக உள்ளது. இத்தனைக்கும் உலகிலேயே அதிக அளவிலான சோளத்தை அவர்கள்தான் விளைவிக்கிறார்கள். உலகின் போதைப் பொருட்களின் மாபெரும் உற்பத்தியாளராக திகழும் அந்நாட்டில், எதிர்வருங்காலங்களில் தற்காலிகமாவது அவர்களது ஆய்வுக்கூடங்கள் மூடப்பட்டுவிடும். பதட்டத்தை தனிக்கக்கூடிய மருந்து, ஊக்க மருந்து, இன்னும் பல மருந்துகளின் பெயரால் கலவைகள் தயாரிக்கப்படக்கூடும். ஏற்கனவே அந் நாட்டிலுள்ள இளைஞர்கள் இந்த போதைப் பொருட்களை பல்வேறு முறைகளில் கலப்பது பயன்படுத்துவது பற்றி நிறையவே அறிந்து வைத்துள்ளார்கள்.

வளர்முக நாடுகளில் விவசாயப் பணிகள் இன்னும் இயந்திரமயமாக்கப்படவில்லை என்பது குறித்து மகிழ்ச்சியே. தக்காளி பறிப்பது போன்ற விவசாயப் பணிகளுக்காக இதுவரை எந்த ஒரு இயந்திரமும் உருவாக்கப்படவில்லை. காயா பழமா என்று பாத்து, அளவு வாரியாக, மற்றைய தன்மைகளை கண்டறிந்து, பிரித்து போடக்கூடிய ரோபோக்களும் இன்னும் உருவாக்கப்படவி ல்லை. அதேபோன்று நுகர்வு கலாச்சார சமூகத்தில் சாலைகளை சுத்தம் செய்வது போன்ற விரும்பத்தகாத பணிகளை யாருமே செய்ய முன்வருவதில்லை. அப்படியானால் எப்படி இந்தப் பிரச் சினையை தீர்க்கப் போகின்றார்கள்? கவலையே வேண்டாம். இதற்காகத்தான் மூன்றாவது உலக நாடுகளிலிருந்து குடியேறியவ ர்கள் இருக்கின்றார்களே. இதுபோன்ற வேலையை தொழில் முறையில் வளர்ச்சி பெற்ற நாடுகளைச் சார்ந்தவர்கள் செய்வ தில்லை.

நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி நமது எல்லைகளுக்குள்ளேயே அந்நியராகிப் போனவர்கள் இந்த தொழிலாளர்கள்தான். மேலும் இவர்கள் கண்டதெல்லாம் நீல ஜீன்ஸ் மற்றும் இது போன்றவற்றை உற்பத்தி செய்யும் முறைகள்தான். அவர்களது வினோதமான பொருளாதார விதிகளின்படி அவர்கள் நம்மை ஜீன்ஸ் உற்பத்தியில் ஈடுபடுத்தியுள்ளார்கள். ஏற்கனவே உலக மக்கள் தொகை நாலாயிரம் கோடியைத் தாண்டி விட்டதாகவும் ஒவ்வொரு மனிதருக்கும் ஒரு ஜோடி நீல ஜீன்ஸ் வாங்கும் அளவிற்கு காசு இருப்பதாகவும் கருதி இந்த நீல ஜீன்ஸ் உற்பத்தி நடைபெற்று வருகிறது. நான் ஜீன்ஸ் கால் சட்டையை கிண்டல் செய்யவில்லை. இளையோருக்கு குறிப்பாக இளம் பெண்களுக்கு பிடித்த ஆடையாக அது மாறி வருகிறது. அவர்கள் எம்மாதிரியான பணியை நம்மிடம் விட்டு வைத்துள்ளார்கள் என்பதையும், அதி நவீன தொழில் நுட்பத்திற்கும் இதற்கும் கிஞ்சித்தும் தொடர்பில்லை என்பதற்காகவே இதை விமரிசனம் செய்கிறேன். இனி நமது பல்கலைக்கழகங்களுக்கு வேலையிருக்காது, பணக்கார நாடுகளின் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய அதே நேரத்தில் குறைந்த ஊதியத்தில் பணியாற்றக்கூடிய தொழில் நுட்ப பணியாளர்களுக்கு பயிற்சி அளித்து உருவாக்குவதே இனி

தொடர்ச்சி 13 ம் பக்கம்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# இந்திய அரசியல் கட்சிகளும் நம்பிக்கை வாக்கெடுப்புக் காட்சிகளும்

## இடதுசாரிகளின் எதிர்காலம் என்ன?

22-07-2008 அன்று இந்திய ஆட்சி கவிழும் என்று யாரும் உண்மையாகவே நம்பியிருந்தால் அந்த எதிர்பார்ப்பு யூலை மாத நடுப்பகுதியின் பின்பு கலைந்திருக்க வேண்டும். இலங்கையில் 2007 வரவு செலவுத் திட்ட வாக்கெடுப்பில் ஆட்சி கவிழும் என்று சிலர் நினைத்தது போல நடக்கவில்லை. அது போலவே தான் இது. 1964ல் ஸ்ரீ.ல.சு. கட்சி ஆட்சியை பாராளுமன்ற வாக்கெடுப்பிற் கவிழ்த்தது போல பிறகு என்றுமே நடக்காத விதமாகக் கவனித்துக் கொள்ள இங்கே அதிகாரத்திலிருப்பவர்களிடம் இப்போது பல வேறு உத்திகள் உள்ளன. இந்தியாவில் ஆட்சிக் கவிழ்ப்புக் கலையிற் தேர்ச்சிமிக்க கட்சி காங்கிரஸ். எதிர்க்கட்சிக் கூட்டணி ஆட்சிகளை அது பலமுறை கவிழ்த்துள்ளது. ஆட்களை விலைக்கு வாங்குவதிலும் தேர்ந்த கட்சி அது. எனவே அதைக் கவிழ்ப் பதனால் பொதுத் தேர்தல் மூலம் மட்டுமே இயலும். அதுவும் எளிதல்ல. இந்திரா காந்தியின் அராஜகமும் அதிகார துஸ்பிர யோகமும் இல்லாது 1977 தேர்தலில் காங்கிரஸ் விழுந்திருக்குமா என்பது நிச்சயமற்றது. இரண்டே ஆண்டுகளில் இந்திரா காந்தியால் ஆட்சிக்கு மீள முடிந்தது. எனினும் என்றுமே தனித்து டில்லியில் ஆட்சி அமைக்க இயலாத நிலைக்குக் காங்கிரஸ் வலுவிழந்து ள்ளது. சில மாநிலங்களில் அது மூன்றாம் நான்காம் நிலையில் உள்ளது. பிரதேசக் கட்சிகளின் துணையின்றி அங்கெல்லாம் காங்கிரஸ் வேட்பாளர்கள் எவரும் தேர்தலில் வெல்ல இயலாத நிலை உள்ளது.

காங்கிரஸின் வீழ்ச்சி முற்போக்குச் சக்திகளின் எழுச்சியாக வில்லை. மாறாக மிக மோசமாக இந்துத்துவ ஃபாஸிஸக் கட்சியொன்றின் எழுச்சிக்கே அது உதவியுள்ளது. இந்தியாவில் இடதுசாரி இயக்கத்தின் வளர்ச்சி மாநிலத்துக்கு மாநிலம் வேறுபட்டுள்ளது. தொழிலாளர் விவசாயிகளின் போர்க்குணமிக்க எழுச்சிகளை முன்னின்று வழிநடத்தியதன் மூலமே அது வளர்ந்தது. சாதியத்திற்கு எதிரான போராட்டங்களையும் நிலவுடைமைக்கொடுமைகட்கு எதிரான போராட்டங்களிலும் அதன் பங்கு முக்கியமானதாக இருந்தது. எனினும் 1950களில் நடந்த தெலுங்கனா விவசாயிகளின் போராட்டம் காங்கிரஸ் ஆட்சியால் கொடுமையாக அடக்கப்பட்ட பின்பும் அதை வழி நடத்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் தொடர்ந்தும் அரச இயந்திரத்தால் தேடப்பட்டுத் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்தனர். அதன் பின்பு ஆனால் 1964க்கு முன்பே கம்யூனிஸ்ட் கட்சிக்குள் சந்தர்ப்பவாதப் போக்குக்கள் வளரத் தொடங்கி விட்டன. இதற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மீது பிரித்தானிய கம்யூனிஸ்ட் கட்சியின் செல்வாக்கும் பங்களித்தது. கம்யூனிஸ்ட் கட்சிக்குள் புரட்சிக்கான பாதை பற்றிய விவாதம் விரிவாக நடந்திருந்தால் 1964ல் அங்கே ஏற்பட்ட பிளவு இரண்டு பாராளுமன்ற வாதக் கட்சிகளின் தோற்றத்துக்கு வழி செய்திராது. 1967ல் தான் அங்கே ஒரு புரட்சிகரக்கட்சி உருவானது. எனினும் இன்று பெரிய கட்சிகளாக உள்ள சி.பி.எம், சி.பி.ஐ. அவை தொழிலாளர் உரிமை பற்றி, விவசாயிகளின் உரிமை பற்றி, சாதி ஒடுக்குமுறை பற்றி எல்லாம் பேசினாலும் போராட்டங்களில் ஈடுபட்டாலும் பாராளுமன்றத் தேர்தல் அரசியல் நிர்ப்பந்தங்கள் அவற்றை மாநிலக் கட்சிகளுடனும் காங்கிரஸ்டனும் பலவாறான சமரசங்களில் ஈடுபடவைக்கின்றன.

இந்திரா காந்தியின் அவசரகாலச் சட்டக் காலத்தில் சோவியத் யூனியனின் தூண்டுதலாலும் கட்சி தலைமையின் சந்தர்ப்பவாதத்தினாலும் சி.பி.ஐ இந்திரா காந்தியின் அடக்குமுறைக்குத் துனை நின்ற கட்சியாகத் தன்னைச் சீரழித்துக் கொண்டது. அதன் பின்னரே இடதுசாரிக் கட்சிகள் ஒரே அணியாகப் பாராளுமன்ற மாநில சட்டசபைத் தேர்தல்களில் போட்டியிடும் உடன்பாடு உருவானது. இது கூட மாநில மட்டத்தில் யாருடன் கூட்டு என்பதில் உடன்பாட்டின்மையால் வெவ்வேறாகப் போட்டியிட வேண்டிய நிலையை




1990களில் உருவாக்கியுள்ளது. இந்துத்துவம் ஒரு வலிய பாராளுமன்ற அரசியல் சக்தியாக உருவெடுத்த பின்பு மதச்சார்பற்ற சீரத்திருத்த அரசியலின் பேரில் ஒரு தேர்தல் கூட்டணி உருவானது. அதில் இடதுசாரிகள் முக்கியமான பங்கு வகித்தாலும் காங்கிரஸ் வெளியிலிருந்து ஆதரவு தரும் என்ற உடன்பாட்டின் பேரில் உருவான ஜனதா தளத்தின் ஆட்சியைத் தருணம் பார்த்துக் காங்கிரஸ் கவிழ்த்து விட்டது. அதன் விளைவாக ஒடு. வலுவான மூன்றாவது அணிக்கான வாய்ப்பே இல்லாமல் அந்தக் கூட்டணி மட்டுமன்றி ஜனதா தளமும் சிதறியது. இத்தகைய பின்னணியிலேயே பாரதிய ஜனதாவின் இந்துத்துவ ஆட்சி ஏற்பட முடிந்தது. அத்துடன் சாதிக் கட்சிகளும் உருவாயின. தலித்தியம் கட்சி அரசியலாக உருவானது. எனினும் அதனால் ஒடுக்கப்பட்ட சாதியினரை ஒரு அமைப்பாக இணைக்க இயலவில்லை. அதற்குரிய சமூகப் பார்வை தலித்திய வாதிகளிடம் இல்லாததால் அது ஒடுக்கப்பட்ட சாதியினரை ஒன்றுபடுத்துவதற்கு மாறாகச் சாதிக் கட்சிகளாகப் பிளவு படுத்தியது.

இன்று யாருடன் யார் கூட்டணி அமைப்பது என்பதில் எந்த விதமான கொள்கை வழிகாட்டலும் இல்லை. இடதுசாரிக் கட்சிகள் மதச் சார்பின்மை என்ற பேரில் பாரதிய ஜனதாவுடன் கடுமையாக முரண்பட்டு நிற்பதும் காங்கிரஸ் பாரதிய ஜனதா முதலாளியக் கட்சிகளின் அரசியல் ஆதிக்க மோதலும் இப்போதைக்கு பாரதிய ஜனதாவுடன் கூட்டணி அமைக்க இயலாத பெரிய பிளவுகளாயுள்ளன. இந்துத்துவம் ஒரு மதவாத ஃபாஸிமாக வளருவது உண்மை. ஆனால் காங்கிரஸ் மதச்சார்பற்ற அரசியலுக்குத் தலைமை தாங்கக் கூடிய கட்சி அல்ல என்றே அதன் கடந்த காலம் (பாபர் மசூதி இடிப்பின் போதும் பம்பாய்க கலவரங்களின் போதும் குஜராத் வன்முறைகளின் போதும் பின்பும் அதன் இயலாமை) காட்டுகிறது

இந்திய மேலதிக்க அரசியலை முன்னெடுப்பதில் காங்கிரசுக்கும் இந்துத்துவ பா.ஜ.கவுக்கும் வேறுபாடு இல்லை. சோவியத் யூனியனை சார்ந்து இந்தியப் பிராந்திய மேலாதிக்க வலிமையைப் பெற முயன்ற காலம் 1970களிலேயே தொடங்கிவிட்டது. இந்திய அமெரிக்க நெருக்கம் இந்தியாவின் திறந்த பொருளாதாரக் கொள்கையுடன் வலுப்பெற்று வந்துள்ளது. இதில் ஆளுங்கட்சி யாரென்பது ஒருபோதும் முக்கியமாக இருந்ததில்லை

இந்தப் பின்னணியிலேயே அண்மைய இந்திய -அமெரிக்க அணு சக்தி உடன்படிக்கையை நோக்க வேண்டும். அது அமெரிக்கா இந்தியா மீது செலுத்துகிற செல்வாக்கை ஒரு ஆதிக்கமாக மாற்றும் நோக்குடையது. இந்தியா அமெரிக்க ஆதரவுடன் தனது பிராந்திய மேலாதிக்க வலிமையைக் கூட்டுவதற்கு முயல்கிறது. அதே வேளை அமெரிக்கா தனக்குப் பூரணமான பணிவில்லாத இந்தியா ஒரு எல்லைக்கு மேல் வலுவடைவதை ஏற்க ஆயத்தமாக இல்லை. எனவே தென்னாசியாவைப் பொறுத்தவரை ஆதிக்கத்தை எப்படிப் பகிருவது என்பதிலே போட்டி தொடர்ந்தும் இருக்கும். உண்மையில் பாரதிய ஜனதாவோ கம்யூனிஸ்ற் கட்சிகள் போக அணுசக்தி உடன்படிக்கையை விமர்சிக்கும் எந்தப் பெரிய கட்சியுமோ அமெரிக்காவுடனான நெருக்கத்தையோ உலகமயமாக்கலையோ அமெரிக்காவுடனான ராணுவ உடன்படிக்கைகளையோ விரும்பாதவையல்ல. இதே உடன்படிக்கையைத் தாங்களே முன்னின்று செய்வதற்குத் தயங்காதவை. அண்மையில் நடந்த கூத்து கம்யூனிஸ்ற் கட்சிகள் இரண்டும் தமது ஆதரவை விலக்கிக் கொண்டதால் காங்கிரஸ் ஆட்சியைக் கவிழ்க்கும் வாய்ப்பு உண்டு என்ற எதிர்ப்பார்ப்பில் அமைந்ததல்ல. ஏற்கனவே மக்களிடம் காங்கிரஸ் தலைமையிலான ஆட்சிக்குச் செல்வாக்கு இல்லாமற் போனதன் பின்னனியில் காங்கிரஸ் ஆட்சியைக் கலங்க வைப்பதில் எதிர்க் கட்சிகள் வெற்றிப் பெற்றுள்ளன. அணு

தொடர்ச்சி 15ம் பக்கம்

---

12ம் பக்கக தொடர்ச்சி

## கஸ்ட்ரோ பேசுகிறார்

இந்தப் பல்கலைக் கழகங்களின் பணியாக இருக்க முடியும். சமீபத்தில் அமெரிக்காவில் கணினி மின்ணணுவியல் போன்ற துறைகளில் வளர்ந்து வரும் தேவைக்கேற்ப மனித உழைப்பு தேவைப்படுவதால் சர்வதேச அளவில் இரண்டு லட்சம் பேருக்கு அவர்கள் 'வேலை வாய்ப்பு அனுமதி" வழங்கப் போவதாகப் பத்திரி கைகளில் செய்தி வெளியாகிறது. உங்களில் பலரும் இதை படித்திருக்கக்கூடும்.

அவர்களைப் பொறுத்தமட்டில் சர்வதேச சந்தையென்பது மூன்றாவது உலக நாடுகள் தான். இந்த இரண்டு லட்சம் பேரும் அதிநவீன தொழில் நுட்பக் கூடங்களில் பணியாற்ற வேணடியிருக்கும். நீங்கள் மிகுந்த எச்சரிக்கையாக இருக்க வேண்டியிருக்கும். ஏனெனில் அவர்களுக்கு தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களே தேவைப்படுகிறார்கள். இப்பொழுது தக்காளி பறிப்பதற்கு ஆட்களை எடுக்கப் போவதில்லை. அவர்கள் மெத்தப் படித்தவர்களாக இல்லை. இதை நீங்களே நேரில் பார்க்க முடியும். அமெரிக்காவில் பலருக்கு பிரேசிலுக்கும் பொலிவியாவிற்கும் வித்தியாசம் தெரியாது குழம்பிப் போயிருப்பார்கள். பலருக்கு அவர்கள் நாட்டைப் பற்றிய பல்வேறு விஷயங்களே தெரியாது என்று ஆய்வறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இன்னும் சொல்லப் போனால் இலத்தீன் அமெரிக்க நாடுகளைப் பற்றி கூட ஏதும் அவர்கள் அறிந்து வைத்திருக்கவில்லை. அது ஆப்பிரிக்காவில் இருக்கிறதா ஐரோப்பாவில் இருக்கிறதா என்பது கூட அவர்களுக்கு தெரியாது. இவற்றையெல்லாம் நான் மிகைப்படுத்திக் கூறுவதாக நீங்கள் கருத வேண்டாம். அதி நவீன இயந்திரங்களை கையாள்வதற்கு தேவைப்படுகிற புத்திசாலியான தொழில் நுட்பப் பணியாளர்கள் அவர்களிடம் கிடையாது. எனவே தான் அவர்கள் மூன்றாவது உலக நாடுகளுக்கு வருகிறார்கள். அப்படிப்பட்ட வேலைகளுக்காக ஆட்களை தேர்வு செய்கிறார்கள். நம்மிடம் இருக்கக்கூடிய நாம் உருவாக்கிய தேர்ச்சி பெற்ற ஒரு சிலரையும் அவர்களிடம் ஒட்டு மொத்தமாக இழந்து விடுகிறோம். நம்மிடமிருந்த சிறப்பு வாய்ந்த அறிவியலாளர்கள் இப்போது எங்கே? அவர்கள் எந்த ஆய்வுக் கூடங்களில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்? நம்மிடையில் எந்த நாடு இது போன்ற அறிவியலாளர்களுக்கு பயிற்சி அளித்து சோதனைகளை மேற்கொள்ளும் திறன் பெற்றதாக இருக்கிறது? நம்மால் இவர்களுக்கு ஊதியமாக வழங்கப்படுவது எவ்வளவு?

அவர்கள் அளிப்பது என்ன? அந்த அறிவியலாளர்கள் எங்கே போனார்கள்? அங்கேயுள்ள சிறப்பு வாய்ந்த கீர்த்தி பெற்ற பல்வேறு லத்தீன் அமெரிக்கர்களை நான் அறிந்திருக்கிறேன். யார் அவர்களுக்கு பயிற்சி அளித்தது? ஏதோ ஒரு மூன்றாமுலக நாடுதானே அவர்களுக்கு அனைத்து வகையான பயிற்சிகளையும் அளித்து அதன்பின்னர் அந்நாடுகளின் உயர்நிலையில் வாய்ப்புகள் இல்லை என்பதனால் அவர்கள் ஏழை நாடுகளில் உள்ளவர்களை வேலைக்கு எடுத்து, அந்நாட்டிற்கு அழைத்துச் செல்கிறார்கள். சந்தைகளில் அடிமைகளை விலைக்கு வாங்குவதைப் போல், நமது பேஸ்பால் விளையாட்டு வீரர்களை வாங்கிக் கொள்கின்றனர்.

அவர்கள் நம்பிக்கை துரோகிகள், எப்போதாகிலும் ஒரு ஆன்மா விலை பேசப்படும் என்றுதான் புதிய வேதாகமம் உரைக்கிறது. முதலில் உருவான மனிதனைத்தான் அது அவ்வாறு குறிப்பிடுகிறது. ஆனால் பின்னர் வருபவர்கள் சற்று மாறுதலாக இருக்க வேண்டாமா? நுகர்வுக் கலாசார சமூகம் பற்றி உணராதவர்கள் அதற்காக இப்படி பித்துப் பிடித்து அலைவதா? அந்நாளில் டொலர் என்பதே கிடையாது. இப்பொழுது திடீரென்று சிறகு விரித்து பறக்கத் தொடங்கிவிட்டது. கியூபாவிலுள்ள பேஸ் பால் ஆட்டக்காரர்களை நாம் ஏலத்தில் கூவி விற்கும் பட்சத்தில் நாம் பெரும் செல்வந்தர்களாகி விடுவோம்.

இதற்கு அடுத்தபடியாக குறிப்பிடப்பட வேண்டியது தொலைக்காட்சி விளம்பரங்கள். பல்வேறு தேசிய இனங்களைச் சார்ந்த அழகிய பெண்கள் கார் விளம்பரங்களில் பயன்படுத்தப்படுவதை நீங்கள் பார்த்திருக்கக்கூடும். இதில் மட்டுமின்றி வேறும்பல வர்த்தக விளம்பரங்களும் மற்றவைகளும் நாம் காணும் சாதாரண பத்திரிகைகளிலும் வெளியாகிறது. இந்த விளம்பரங்கள் நம்மில் பலருக்கு ஆசையை தூண்டுகிறது.

கியூபாவில் இது போன்ற பகட்டான விளம்பரங்களுக்காக, அச்சிடக்கூடிய காகிதத்தை விரயமாக்குவதில்லை. அல்லது மற்ற வளங்களை இதற்காக பயன்படுத்துவதில்லை. ஒரு சில நேரங்களில் அமெரிக்க தொலைக்காட்சி ஒளிபரப்புகளை நான் காண்பதுண்டு. என்னால் அவற்றை நீண்ட நேரம் பார்க்க முடிவதில்லை. காரணம் ஒவ்வொரு மூன்று நிமிடங்களுக்கு ஒரு முறை ஒரு வர்த்தக விளம்பரம் காட்டப்படுகிறது. ஒரு சில நேரங்களில் மனிதன் ஒருவன் உடற்பயிற்சிக்கான சைக்கிளை ஓட்டுவதையும் விளம்பரத்தில் கண்டிருக்கிறேன். இதைவிட கன்றாவியான விளம்பரம் உலகில் வேறெதும் இருக்க முடியாது. இந்த விளம்பரங்களை தவறு என்று நான் சொல்லவில்லை. பார்க்க சகிக்கவில்லை என்றுதான் கூறுகிறேன். எந்த நிகழ்ச்சியாக இருப்பினும் அல்லது குடும்பத்திற்கானது என்ற பெயரில் சுவிங்கமாக நீடித்த தொடர்களுக்கு இடையில் மட்டும்தான் விளம்பரக் குறுக்கீடுகள் இருக்கிறது என்பதில்லை. ஒரு அற்புதமான காதல் காட்சிக்கு இடையேயும் தான்.

எங்கள் நாட்டில் இருக்கும் சிறிதளவு காகிதத்தைக்கூட உண்மையிலேயே கவனமாக பயன்படுத்தி வருகிறோம். அவை பாடப் புத்தகங்களுக்கு பயன்படுத்தப்படுகிறது. இது தவிர குறைவான பக்கங்களைக் கொண்ட ஒரு சில பத்திரிகைகளுக்கும் பயன்படுகிறது. எங்களிடம் இருக்கும் ஆதாரங்களைக் கொண்டு அங்கிருப்பதைப் போல் பகட்டான பத்திரிகைகளை அச்சிட முடியாது. அவற்றையெல்லாம் என்னவென்று அழைக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியாது. பல்வேறு படங்கள் நிறைந்த இந்த பத்திரிக்கைகளை பிச்சை எடுப்பவர்கள் கூட நமது நகரத் தெருக்களின் மூலைகளில் படித்துக் கொண்டிருப்பதை பார்க்க முடியும்.

பல்வேறு ஆடம்பரக் கார்களின் விளம்பரங்கள் கூடவே பாதுகாப்பிற்கு அழகு மிக்க பெண்கள். இன்னும் உல்லாசப் படகுகள் மற்றும் இதர பொருட்களுக்கான விளம்பரங்களின் ஊடான கருத்துப் பிரச்சாரம் மூலம் மக்கள் மனதில் விஷவித்தை விதைக்கிறார்கள். இதுபோன்ற விளம்பரங்களின் தாக்கத்தால் பிச்சை எடுப்பவர்கள்கூட யதார்த்த வாழ்வில் பெற முடியாத சொர்க்கத்தைப் பற்றிய கனவுகளில் மூழ்கியிருக்கிறார்கள். முதலாளித்துவத்தால் இதைத்தான் வழங்க முடியும்.

நுகர்வோரின் வாழ்நிலை பற்றித் தெளிவுபடுத்த சில எடுத்துக் காட்டுகளை உங்களிடம் தெரிவிக்க விரும்புகிறேன். பங்களாதேஷ் இந்தியா, இந்தோனேஷியா, பாகிஸ்தான் அல்லது சீனா இங்கெல்லாம் ஒவ்வொரு வீட்டிலும் கார் ஒன்று இருப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். உங்களிடமும் கார் இருப்பின் என்னை மன்னியுங்கள். இந்த போக்கு சரியல்ல. இதற்கு மாற்றான பல்வேறு வழிகளைத்தான் நாம் பின்பற்றியாக வேண்டும். நான் விமரிசனம் செய்யவில்லை. எச்சரிக்கவே விரும்புகிறேன். வளராத நிலையில் வளர்ந்து வரும் சூழலில் ஒவ்வோர் வீடடிற்கும், ஒரு கார் என்ற ஏற்க முடியாத முன்மாதிரிகளை நாம் கொள்ளலாகாது. இதே போன்று சீனாவில். நடைபெறுவதாக வைத்துக் கொள்வோம். பத்து க்கோடி ஹெ-க்டேர் விளை நிலங்கள் தேசிய நெடுஞ்சாலைகளாக மாற்றப்பட வேண்டும். இது தவிர பெட்ரோல் நிலையங்கள் வாகனங்கள் நிறுத்துமிடங்கள் போன்றவற்றையும் உருவாக்க வேண்யிருக்கும். அப்போது ஒரு நெல்மணியை விளை விக்கக் கூடிய ஒரு சாண் இடம் கூட மிஞ்சி இராது.

உலகெங்கிலும் அவர்கள் திணிக்கக்கூடிய நுகர்வு கலாசார வடிவம் மிகவும் பைத்தியக்காரத்தனமானது. அது குழப்பமானது மட்டுமின்றி அபத்தமானதும் கூட.அதற்காக உலகமே துறவியர் மடமாக மாற வேணடும் என்று நான் கூறவில்லை. ஆனால் நமக்கு உலகில் வேறு வழியில்லை. நுகர்வு வடிவங்கள் குறித்து சரியான வரைமுறைகளை உண்டாக்கித்தான் தீர வேண்டும். எது நுகர்வுக்கேற்றது, அதற்கான முறை, அவற்றை பெற முடியுமா முடியாத போன்ற அம்சங்கள் குறித்து, மனித சமூகத்திற்கு கற்பிக்கப்பட வேண்டும். நாம் விழிப்பாகவும் எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டிய தருணம் இது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# உலக அரங்கின் நாட்குறிப்பு

உலகோன்

## சுதந்திரப் போராட்டத்தை ஆதரிப்பவர்கள்

திபேத் தொடர்பில் அண்மையில் கருத்தொன்றை வெளியிட்ட அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அமெரிக்கா எப்போதுமே சுதந்திரப் போராட்டத்தை ஆதரிப்பதாகவும் அவற்றின் வெற்றிக்காக கடுமையாக உழைப்பதாகவும் கூறியிருந்தார். மேலும் திபேத் சுதந்திரத் தனிநாடக அங்கீகரிக்கப்படவேண்டியது எனவும் அதற்கான அனைத்து உரிமைகளும் நியாயங்களும் திபேத்திற்கு இருப்பதாகவும் சீனா, திபேத்தில் ஒரு அந்நிய ஆக்கிரமிப்பைச் செய்துள்ளதாகவும் குற்றஞ் சாட்டினார். இதன் வாயிலாக சீனா பல மனித உரிமை மீறல்களை திபேத்தில் மேற்கொள்வதும் இன்னொரு நாட்டை ஆக்கிரமிப்பது சர்வதேச சட்டங்களுக்கு அமைய ஏற்க முடியாது என்றும் சொன்னார். அடடே, இதையே இவர் கண்ணாடி முன்னின்று அல்லவா சொல்லிப்பார்த்திருக்க வேண்டும்.

*"தெரிவிப்பதும் தீர்மானிப்பதும் நாங்களாதலால் அவற்றை நாங்கள் பின்பற்ற வேண்டியதில்லை"* என்று புஷ் சொல்வாராக்கும்.

புஷ்ஷின் வரைவிலக்கணத்தின்படி திபேத்தினுடையது சுதந்திரப் போராட்டம், பாலஸ்தீன மக்களுடையது பயங்கரவாதச் செயற்பாடு, ஏனைய சுதந்திரப் போராட்ட இயக்கங்கள் பயங்கரவாத அமைப்புக்கள். சீனா தனது நாட்டின் ஒரு பகுதியை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது ஆக்கிரமிப்பு. அமெரிக்கா ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் செய்து கொண்டிருப்பது பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம். அமெரிக்கா செய்வ தெல்லாம் சர்வதேச சட்டங்களுக்கு உட்பட்டதும் ஏற்புடையதும். அமெரிக்க நலன்களுக்கு எதிரான செயற்பாடுகளெல்லாம் சர்வதேச சட்டங்களுக்கு முரணணாதும் ஏற்புடையதுமாகும்.

## மனிதாபிமானத்தைக் கொல்பவர்கள்

அண்மையில் கொலம்பிய FARC போராளிகளிடமிருந்த பணயக் கைதிகளை கொலம்பிய அரசு ஒரு இராணுவ நடவடிக்கை மூலம் மீட்டது சர்வதேச அளவில் கவனத்தை ஈர்த்தது. எந்தவொரு உயிரிழப்பும் இல்லாமல் வெற்றிகரமாக நிகழ்த்தப்பட்ட ஒரு நடவடிக்கையாக உலக நாடுகளிலும் சர்வதேச ஊடகங்களிலும் இது குறித்துப் பேசப்பட்டது.

சில தினங்களின் பின்னர் இந்த நடவடிக்கையில் ஈடுபட்ட கொலம்பிய இராணுவத்தினர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அம்புலன்ஸ் வண்டியையும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊழியர்கள் பயன்படுத்தும் உடைகளையும் பயன்படுத்தியதாக செய்திகள் வெளியாகியிருந்தன. இது குறித்து கருத்துத் தெரிவித்த கொலம்பிய ஜனாதிபதி உரிபே (URIBE) "நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படைவீரர் ஒருவர் பயத்தின் காரணமாக தன்னிடமிருந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உடையை அணிந்திருக்கிறார், அவ்வளவுதான்" என்று முழுப் பூசணியை சோற்றில் மறைக்க முயன்றார். பூசி மெழுகும் முயற்சியில் கொலம்பிய ஜனாதிபதி படைவீரர் தன்வசம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உடையை வைத்திருந்ததை ஒப்புக் கொண்டார்.

இது குறித்து கருத்து தெரிவித்த நடவடிக்கையில் ஈடுபட்ட கொலம்பிய படையினர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அம்புலன்ஸ் வண்டியை பயன்படுத்தியை உறுதிப்படுத்தியுள்ளதோடு தாங்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உடையை அணிந்தபடியே முழு நடவடிக்கையிலும் ஈடுபட்டதாகவும் ஒத்துக் கொண்டுள்ளனர். இதைத் தொடர்ந்து கருத்து வெளியிட்ட கொலம்பிய அரசு "மனிதாபிமான நடவடிக்கைகளில் இவ்வாறான சில செயற்பாடுகள் தவிர்க்கப்பட முடியாதவை" என்று பதிலளித்தது.

கொலம்பிய அரசின் இந்நடவடிக்கைக்கு கண்டனம் தெரிவித்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அதற்கு மேலாக எதையும் செய்யவில்லை. வழமையில் தனது ஊழியர்களுக்கோ, சங்கத்திற்கு தீங்கு நேரும் என எதிர்பார்க்கும் போதோ அல்லது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பெயருக்கு அபகீர்த்தி ஏற்படும் போதெல்லாம் மூட்டை முடிச்சுக்களைக் கட்டிக் கொண்டு கிளம்பும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இம்முறை அப்படி எதையுமே செய்யவில்லை.

இந்நடவடிக்கையில் பயன்படுத்தப்பட்ட அம்புலன்ஸ் வாகனம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கொலம்பியாவில் பயன்படுத்தி வருகின்ற ஒன்று என்பது, இப்போது கொலம்பியாவிலிருந்து கிடைக்கின்ற புதிய தகவல். இதை நாம் மனிதாபிமானத்தின் பெயரால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கொலம்பிய அரசுக்கு வழங்கியது என்று கொள்ள முடியுமா? இப்போது மனிதாபிமான அடிப்படையில் எல்லாவற்றையும் எல்லாவகையிலும் செய்ய முடிகிறது.

மனிதாபிமானத்தின் பெயரால் மனிதாபிமானத்தைக் கொல்வதற்கு இவர்கள் தயாராகிவிட்டபடியால் மனிதாபிமானத்தின் பெயரால் நடைபெறுவன பற்றி எச்சரிக்கையாக இருப்பது மனிதாபிமானது.

# ஸிம்பாப்வே: குளத்தை கலக்கி மீன் பிடித்தல்

ஆபிரிக்காவில் மேற்கை விட வித்தியாசமான முறையில் பிரித்தானிய கொலனியம் கிழக்கிலும் தெற்கிலும் அமைந்து இருந்தது. அங்கே தென்னாபிரிக்காவுக்கு அடுத்தபடியாக ஸிம்பாப்வேயில் பிரித்தானியர் கணிசமாக குடியேறிய ஒரு சமுகமாக இருந்தனர்.

தென் ஆபிரிக்காவில் பிரித்தானியருக்கு முதலே டச்சுக்காரர் குடியேறிவிட்டனர்.தென்னாபிரிக்காவில் ஐரோப்பிய குடியேறிகளில் ஆப்பிரிக்கானர் என்று அழைக்கப்பட்ட டச்சு பரம்பரையினரே தொகையில் அதிகமானோராயிருந்தனர். அங்கே ஆபிரிக்கானர்கட்கும் பிரித்தானியக் கொலனிய எசமானர்கட்குமிடையிலான மோதலே தென்னாபிரிக்காவின் முதலாவது விடுதலைப் போராயிருந்தது. எனினும் தென்னாபிரிக்காவின் சுதந்திரம் பிரித்தானியச் செல்வாக்கிற்குட்பட்ட வெள்ளை நிறவெறி ஆதிக்க ஆட்சியாகவே சென்ற நுற்றாண்டில் இறுதி தசாப்தம் வரை தொடர்ந்தது.ஆபிரிக்கானர் பிரித்தானியர் மோதல் தணிந்தாலும் இன முரண்பாடுகள் தொடர்ந்தன. அதேவேளை தென்னாபிரிக்கா ஆபிரிக்க கண்டத்தின் தென்பகுதியில் கொலனிய ஆட்சியின் தொடர்ச்சிக்கும் ஏகாதிபத்திய ஆதிக்கத்தின் தொடர்ச்சிக்குமான பாலமாக இயங்கி வந்தது .

ஆபிரிக்காவில் விடுதலைக்கான எழுச்சிகள் 1950 களில் தீவிரமாயின. மேற்கு ஆபிரிக்காவிலிருந்த பிரித்தானியக் கொலனிகளில் ஆயுதப் போராட்டங்களாக அவை தீவிரமாகும் முன்னரே பிரித்தானிய நிர்வாகம் சுதந்திரத்திற்கு உடன்பட்டது. மேற்கு கானாவில் மட்டுமே கொலனிய எதிர்ப்பில் தீவிரமான இடதுசாரிச் சிந்தனையாளரான க்வாமேற்க்குமா ஆட்சியில் அமர்ந்தார். அவரது ஆட்சி வெகு விரைவிலேயே ராணுவச் சதி மூலங் கவிழ்க்கப்பட்டது.

கிழக்கு ஆபிரிக்காவிலும் தெற்கிலும் பிரித்தானியக் கொலனிய நிர்வாகம் மிகவும் கடுமையானதாக இருந்தது. குறிப்பாக கென்யாவில் அது வெள்ளையருக்கு எதிரான இன மோதலாக உருவெடுத்தது. போர்த்துக்கேயக் கொலனிகளான மொசம்பிக், அங்கோல, கினி பிஸோ ஆகிய மூன்று நாடுகளிலும் ஆயுதப் போராட்டம் கூர்மை பெற்று வந்தது. தென்னாபிரிக்காவில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் ஆயுதப்போராட்ட மார்க்கத்தை தெரிவு செய்தது .

இந்தப் பிண்ணணியிலே தென்னாபிரிக்காவுக்கு அடுத்தபடியாக வெள்ளை இனத்தவர்கள் கணிசமான தொகையில் குடியேறி இருந்த தென் றொடிசியா என அழைக்கப்பட்ட ஸிம்பாப்வேயில் இருந்த கொலனி ஆட்சிக்குட்பட்ட இயன் ஸ்மித் தலைமையிலான வெள்ளை இனவாத அரசாங்கம் ஒருதலைப் பட்சமாக 1965ல் றொடிசியாவைச் சுதந்திர நாடாகப் பிரகடனஞ் செய்தது. நாட்டின் இரண்டு சதவீதமான தொகையினரேயாயினும் தமது அதிகாரத்தைக் கறுப்பின மக்களுடன் பகிரத் துளியும் ஆயத்தமாக இல்லாத வெள்ளைக் குடியேற்ற வாதிகளே இதன் பின்னாலிருந்தனர். அவர்களுக்கு ஆதரவாகத் தென்னாபிரிக்காவில் இருந்த 18 சதவீத வெள்ளை இனத்தவரின் நிறவாத அதிகாரமும் பிரித்தானிய வலதுசாரி அரசியல்வாதிகளும் இருந்தனர். அமெரிக்க பிரித்தானிய ஏகாதிபத்தியங்களும் ஆதரவாக இருந்தன.

றொடிஷியா "சுதந்திரப் பிரகடனம்" நடந்தபோது பிரித்தானியாவில் ஆட்சியில் இருந்தது தொழிற்கட்சி. எவ்வாறு வியட்நாம் போரில் தொழிற்கட்சி அரசாங்கம் நயவஞ்சகமாக நடந்து கொண்டதோ அவ்வாறே றொடிசியாவிலும் நடந்து கொண்டது. உறுதியான இராணுவ நடவடிக்கை மூலம் சட்டவிரோதமான வெள்ளைச் சிறுபான்மை ஆட்சியைக் கவிழ்த்து கறுப்பு இனத்தவர்களுக்கு கூடிய அதிகாரமுள்ள ஒரு ஆட்சியைக் நிருவியிருக்கலாம் ஆனால் பிரித்தானிய ஆட்சி வெறுமனே பொருளாதா ரத்தடை விதிப்பதுடன் நிறுத்திக் கொண்டது. அந்தத் தடை கூட மூன்றா முலகின் அதிருப்திக்கு ஒரு கண்துடைப்பாக மேற்கொள்ளப் பட்டது. எனினும் தென்னாபிரிக்காவோடு தடையின்றி வணிகம் நடைபெற்றது.

இந்தப் பின்னனியிலேயே ஸிம்பாப்வே விடுதலை இயக்கங்கள் இரண்டு எழுச்சிபெற்றன. இரண்டுமே இடதுசாரித் தன்மையுடையனவாயினும் றொபேட் முகாபேயின் தலைமையிலான ஸிம்பாப்வே ஆபிரிக்க தேசிய ஒன்றியம் (ஸானு) வலியதாயும் வெகுசனப் போராட்டத் தன்மையுடையதாயும் இருந்தது. கொலனிய வாதிகட்கு எதிராக இரண்டு அமைப்புக்களும் ஒத்துழைத்தன. விடுதலை எழுச்சிக்கு எதிராக அண்டை நாடுகளான தென்னாபிரிக்காவும் போர்த்துக்கேய கொலனியாக இருந்த மொஸாம்பிக்கும் பயன்பட்ட போதும் 1974ல் போர்த்துக்கேய கொலனித்துவமும் போர்த்துக்கல் சர்வாதிகார ஆட்சியும் கவிழ்ந்ததோடு நிலமைகள் வேகமாக மாறின.

இயன் ஸ்மித் ஆட்சியால் நாட்டைத் தொடர்ந்தும் வெள்ளை அதிகாரத்தின் கீழ் வைத்திருக்க இயலாததால் ஸாணு ஸாபு விடுதலை அமைப்புக்களிடம் அதிகாரம் கை மாறாமல் 1978ல் வெள்ளை ஆட்சியின் எடுபிடியாக இருந்த கிறிஸ்தவ பிஷப் முஸரோவாவிடம் ஆட்சி பொறுப்பு கையளிக்கப்பட்டது. ஆனால் உண்மையான அதிகாரம் ஸ்மித் தலைமையிலான வெள்ளை நிறவெறியர்களிடமே இருந்தது.

போலியான ஆட்சிமாற்றத்தின் மூலம் மக்கள் எழுச்சியைத் தடுக்க இயலாத நிலையிலேயே 1980ம் ஆண்டு ஸிம்பாப்வேயின் சுதந்திரமும் சர்வசன வாக்குரிமை அடிப்படையிலான பாராளுமன்ற ஆட்சி முறையும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. எனினும் இதற்கு முன்நிபந்தனையாக வெள்ளையர்களின் வசம் இருந்த வளமான விவசாய நிலங்களை கறுப்பின அரசாங்கத்தினர் பறித்தெடுக்க மாட்டார்கள் என்று உத்தரவாதமும் பெறப்பட்டது. இதன்மூலம் ஒரு தேசிய பொருளாதாரம் தோன்றாமல் ஆப்பு வைக்கப்பட்டது.

1980கள் நவ கொலனியம் தன்னை வலுப்படுத்திக்கொண்ட காலம். 1950 களிலும் 60 களிலும் வீறு கொண்டு எழுந்த விடுத லை போராட்டங்கள் போல எதுவுமே இல்லாத காலம். 1960 களில் உச்ச நிலையில் இருந்த தேசிய முதலாளிய ஆட்சிகள் பல 1970 களில் பணிந்து போய் 1980 களில் நவகொலனித்துடன் சமரசம் செய்யத் தொடங்கிவிட்டன. சோவியத் யூனியனும் 1980 களில் சர்வதேச ரீதியாகச் செல்வாக்கு இழக்கத் தொடங்கிவிட்டது. எனவே ஸிம்பாப்வேயின் இடதுசாரி அரசியல் பல வகையிலும் முடக்கப்பட்டிருந்தது. போதாததற்கு அந்த நாடு ஏற்றுமதி வணிகத்திலேயே கணிசமான அளவுக்குத் தங்கியிருந்தது. உள்ளூர் ஏற்றுமதிகளில் முக்கியமானவை புகையிலை உட்பட்ட பயிர்களாகவும் அடுத்தபடியானவை கனிவளங்களாகவும் இருந்தன. ஏற்றுமதிகளில் பெரும்பகுதி ஐரோப்பிய நாடுகட்கும் தென்னாபிரிக்காவுக்குமே சென்றது. இந்த நிலைமைகளின் கீழ் ஸிம்பாப்வேயின் எதிர்காலம் நவகொலனிய ஆதிக்கத்திற்குட்பட்ட ஒரு பொருளாதாரத்தினின்று எவ்வாறு விடுபடுவது என்பதிலேயே தங்கியிருந்தது.

வலிமையான ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசியல் உணர்வு ஒரு புறமும் அதை முன்னெடுத்துச் செல்ல இயலாதவிதமான மூலப் பொருள் ஏற்றுமதி சார்ந்த விவசாயமும் புதிதாக உருவாகி வந்



தது. கறுப்பின நடுத்தர வர்க்கத்தினது எதிர்பார்ப்புக்களும் ஸிம்பாப்வேயில் ஒரு தேசிய பொருளாதாரம் விருத்தி பெறாமல் தடுத்து நின்றன. அதே வேளை மூலப்பொருள் ஏற்றுமதிகளின் விலைகளின் சரிவும் இறக்குமதிகளின் விலை ஏற்றமும் பல மூன்றாமுலக நாடுகளின் போல ஸிம்பாப்வேயின் ஒரு தேசிய பொருளாதாரம் விருத்திபெறாமல் தடுத்து நின்றன. அத்துடன் மூலப்பொருள் ஏற்றுமதிகளின் விலைகளிள் சரிவும் உற்பத்தி இறக்குமதிகளின் விலை ஏற்றமும் பல மூன்றாமுலக நாடுகளில் போல
ஸிம்பாப்வேயின் அயல்வணிகப் பற்றாக்குறையையும் அதன் விளைவாக அந்நியக் கடன் சுமையையும் ஏறத் தொடங்கின.

இவற்றின் நடுவே ஸிம்பாப்வே அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கான கிளர்ச்சிகள் மற்றபலே மாநிலத்தில் கிளறிவிடப்பட்டன. இதில் நிறவாத தென்னாபிரிக்க ஆட்சிக்கும் ஒரு பங்கிருந்து. கிளர்ச்சியின் முடிவையடுத்து ஸாணுவும் ஸாபுவும் இணைந்து ஸாணு பி.எவ் என்ற கட்சியாக ஒன்றினைந்தன .

பல விதமான அந்நிய ஏகாதிபத்திய நெருக்குவாரங்களின் நடுவே நகர் சார்ந்த நடுத்தர வர்க்கத்தின் வளர்ச்சி காரணமான பொருளாதார சமமின்மையைச் சமாளிக்க இயலாத சூழ்நிலையில் முகாபேயின் தலைமையிலான ஆட்சி தனது ஆதரவுத்தளத்தை வலுப்படுத்தவும் கிராமிய வறுமைக்கு முகங்கொடுக்கவும் 2000ம் ஆண்டில் வெள்ளையரான நிலச்சொந்தக்காரர்களது காணிகளைப் பகிர்ந்தளிக்க முற்பட்டது.

இதன் பின்பு ஸிம்பாப்வே பொருளாதாரத்தைத் தனிமைப்படுத்தி பலவீனப்படுத்தும் முயற்சிகள் மேலுந் தீவிரமடைந்தன.

வர்க்க அடிப்படையில் ஸிம்பாப்வேயின் சகல உழைக்கும் மக்களையும் ஒன்று திரட்டி ஒரு வெகுசன அரசியல் பாதையை முன்னெடுக்கத் தவறியதாலேயே ஸிம்பாப்வே அரசாங்கம் மேலும் மேலும் எதேச்சதிகரமான முறையில் நடந்து கொள்ளுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டது. எனினும் அமெரிக்க ஆதரவு பெற்ற பல ஆபிரிக்க நாடுகளை விட ஸிம்பாப்வேயில் கருத்துச் சுதந்திரம் இருந்து வந்துள்ளது. அதே வேளை ஊழல்களும் ஒழுங்கீனங்களும் வலுப்பெறவுந் தொடங்கின. ஸிம்பாப்வேயில் சனநாயகமின்மை என்ற குற்றச்சாட்டை முன்வைத்து நேரடியாக ஒரு ஆட்சிக்கவிழ்ப்பை நடத்த இயலாமலேயே சில மாதங்கள் முன்னர் நடந்த பொதுத் தேர்தலில் ஆட்சியை விழுத்தும் நோக்கத்துடன் ஏகாதிபத்தியம் என்.ஜி.ஒக்கள் மூலம் பிரசாரங்களில் ஈடுபட்டது. 1990 களில் உருவான சனநாயக மாற்றத்திற்கான இயக்கம் முகாபேக்கு எதிரான பலவேறு சக்திகளது கூட்டணியாகும். இந்த அமைப்புக்கு நேரடியாகவே பிரித்தானிய ஆட்சியாளர்களின் ஆதரவு இருந்து வந்தது.

கடந்த தேர்தலில் பாராளுமன்ற பெரும்பான்மை ஆசனங்களை இக்கட்சி வென்ற போதும் சனாதிபதி வேட்பாளர் பூரண பெரும்பான்மை பெறாததால் மறு தேர்தல் நடத்த வேண்டி ஏற்பட்டது. வாக்குகளை மீள எண்ணுவதில் ஏற்பட்ட காலதாமதம் அரசாங்கத்தின் மீது சந்தேகங்களை எழுப்பினாலும் எதிர்கட்சியால் அரசாங்கம் மோசடியில் ஈடுபட்டதாக நிறுவ இயலவில்லை. மீண்டும் முதன்மை வேட்பாளர் இருவரும் மறு தேர்தலில் நிற்க வேண்டிய

தொடர்ச்சி 15 பக்கம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# மக்கள் கலை இலக்கியத்தை முன்னெடுக்கும்!

# தேசிய கலை இலக்கியப் பேரவையின் மாநாடும் 35 ஆவது ஆண்டு விழாவும்

**சமத்துவம் பன்மைத்துவம் சமூக மாற்றம்** மானுட விடுதலைக்கான மக்கள் கலை இலக்கியத்தை முன்னெடுப்போம். இக் கலை இலக்கியக் குறிக்கோளை மகுடமாகக் கொண்டு தேசிய கலை இலக்கியப் பேரவையின் மாநாடும் 35 ஆவது ஆண்டு விழாவும் நடைபெற இருக்கிறது. இம்மாதம் ஆகஸ்ட் 23ம் 24ம் திகதிகளில் கொழும்பில் நடைபெற உள்ள இக் கலை இலக்கிய மாநாடும் ஆண்டு விழாவும் இன்றைய சூழலில் முக்கியத்துவம் பெறுகின்றது.

தேசிய கலை இலக்கியப் பேரவை 1973ம் ஆண்டின் பிற்கூறிலே உருவாக்கப்பட்ட கலை இலக்கிய அமைப்பாகும். அதன் நிலையிலும் கொள்கை நடைமுறை வழியாகவும் முன்னெடுக்கும் பாதையிலேயே தேசிய கலை இலக்கியப் பேரவை 1973 ம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது. அதன் பிரதான திசை காட்டியாக பேராசிரியர் கைலாசபதி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்க தாகும். தேசிய கலை இலக்கியப் பேரவை தனது செயற்பாட்டு வழியில் 1974ல் தாயகம் சஞ்சிகையை ஆரம்பித்தது. இன்றுவரை பல்வேறு நெருக்கடிகள் போர்ச் சூழல் என்பன மத்தியிலும் தேசிய கலை இலக்கியப் பேரவையும் தாயகம் சஞ்சிகையும் மக்கள் கலை இலக்கியக் கோட்பாட்டை முன்னிறுத்தி தமது கலை இலக்கியப் பணிகளை முன்னெடுத்து வந்துள்ளது. அதன் 35 வருடகாலப் பணிகளை விபரிப்பதற்கு நீண்டபக்கங்கள் தேவை. அவ்வாறே அவ் கலை இலக்கிய இயக்கத்திற்கு குறிக்கோள் மக்களுக்கான கலை இலக்கிய செயற்பாட்டை வளர்த்தெடுத்துச் செல்வதாகும். சமகாலச் சமூக அமைப்புச் சூழலில் உழைக்கும் மக்களே தொண்ணூறு வீதமானவர்களாவர். அவர்கள் தொழிலாளர்கள் விவசாயிகள் அரசாங்க தனியார் துறை ஊழியர்கள் புத்திஜீவிகள் ஆசிரியர்கள் மாணவர்கள் ஒடுக்கப்படும் தேசிய இனத்தவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் பெண்கள் எனப் பல தளங்களிலும் இருந்து வருகிறார்கள். இத்தகைய மக்கள் பிரிவினர் ஏகப் பெரும்பான்மையினராக இருந்தும் அவர்களின் பிரச்சினைகளை கலை இலக்கியங்களின் ஊடாக வெளிக்கொணரும் நிலை குறிப்பிடத்தக்கனவாக இல்லை என்ற நிலையே இருந்து வருகின்றது.

பழைமைவாதப் போக்கினை சார்ந்தும் அதன் அடியொற்றியும் கலை இலக்கியங்கள் முன்னெடுக்கப்படுகின்றன இந் நிலையில் சமூக முரண்பாடுகளை இனம்கண்டு அவற்றின் வழியான ஒடுக்குமுறைகளுக்கு எதிராக சமூக யதார்த்தம் மிக்க கலை இலக்கியங்களை உருவாக்குவதும் அவற்றை மக்களிடையே கொண்டு செல்வது அவசியமாகின்றது. இத்தகைய இலக்கியப் பணியானது கடுமையானதும் எதிர்நீச்சல் போன்றதுமாகும். இதனை ஒரு சமுகக் கடமையாகவும் குறிக்கோளாகவும் கொண்டே மக்கள் கலை இலக்கியத்தை முன்னெடுக்கும் நோக்கில் தேசிய கலை இலக்கியப் பேரவை தோற்றுவிக்கப்பட்டது.

ஈழத்தின் கலை இலக்கிய வளர்ச்சித் தடத்தில் உழைக்கும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய இயக்கமாகவும் செயற்பாட்டிற்குரிய தளமாகவும் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் இருந்து வந்தது. இது நாற்பதுகளின் பிற் கூறில் இருந்து அறுபதுகளின் நடுக்கூறுவரை ஈழத்து கலை இலக்கிய வளர்ச்சிக்குப் பாரிய பங்களிப்பை வழங்கி நின்றது. ஆனால் எழுபதுகளுக்கு முன்பாகவே அவ் இயக்கத்தில் உருவாகிய அரசியல் தத்துவார்த்த முரண்பாடுகளால் சிதைவுக்கு உள்ளாகிக் கொண்டது. முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் திசைமாறிய கலை இலக்கியப் போக்கினை நிராகரித்து மக்கள் கலை இலக்கியத்தை கோட்பாட்டு தம்மை முழுமையாக ஈடுபடுத்தி அர்ப்பணிப்புடன் செயல்பட்டவர்களின் பட்டியலும் கணிசமானவை யாகும். அத்தகையவர்களில் பலர் மறைந்தும் விட்டார்கள். சிலர் தொடர்ந்தும் தம் பணியாற்றி வருகிறார்கள் புதிய தலைமுறையினர் அப்பணிக்குத் தோள் கொடுத்தும் வருகின்றனர்.

இன்றைய உலகமயமாதலின் கீழான கலை இலக்கிய பண்பாட்டு ஊடுருவல்களும் அதன் காரணமாண சீரழிவுகளும் பெருகி வருகின்றன. இதனால் இளந்தலைமுறையின் செயல் சிந்தனை நடைமுறைகள் யாவும் சமூகத் தளங்களில் இருந்து அந்நியமாகி வருகின்ற போக்கு அதிகரித்து வருகிறது பன்முகச் சீரழிவுகளையும் உள்வாங்கி வரும் இன்றைய சமூகத்தில் அவற்றுக்கு எதிரான மக்கள் சார்பு சமூகச் சார்பு வேண்டிய கலை இலக்கியங்களை முன்நிறுத்த வேண்டிய தேவை அதிகமாகி உள்ளது. சுயநலம் புகழ்நாட்டம் பெயர் பிரபல்யம் பணம் சேகரித்தால் விழாவெடுத்து திருப்தி காணல் போன்றவை கலை இலக்கியத்தின் பேரால் மலிந்து காணப்படுகின்றன. கலை இலக்கிய நூல்களின் வெளியீடுகளும் விழாக்களும் நாளாந்தம் இடம் பெறுகின்றன. நூல்கள் பெருகுவதும் வாசிப்பு அதிகரிப்பதும் ஆரோக்கியமானதேயாகும.! ஆனால் அவ்வாறான நூல்களின் ஊடாக வெளிவரும் ஆக்கங்கள் எத்தகைய சமூகப்பார்வையை வெளிப்படுத்துகின்றன என்பதே முக்கியமானதாகும். நடப்பில் இருக்கும் ஏற்றத்தாழ்வான சமத்துவமற்ற சமூக நீதிமறுப்பைக் கொண்ட பிற்போக்குத்தன தன்னியல்புகளை வெளிப்படுத்துகின்ற எழுத்துகளையே பெரும்பாலான கலை இலக்கிய நூல்களில் காண முடிகிறது. இவற்றுக்கு அப்பால் சமத்துவத்தை பன்மைத்துவத்தை சமூக மாற்றத்தை மனித நேயத்தை மக்கள் சார்பை வெளிப்படுத்தும் படைப்புகளும் நூலாக்கங்களும் குறைந்த நிலையிலேயே வெளிவருகின்றன.

இத்தகையதொரு இன்றைய கலை இலக்கியச் சூழலிலேயே தேசிய கலை இலக்கியப் பேரவை தனது இரண்டு நாட்கள் மாநாட்டையும் ஆண்டு விழாவையும் கொழும்பில் நடாத்துகிறது.

மேற்படி கலை இலக்கியப் பேரவையின் மாநாடு ஆண்டு விழா நிகழ்ச்சிகளில் அதன் உறுப்பினர்கள் எழுத்தாளர்கள் ஆர்வலர்கள் பொது மக்கள் தத்தமது முழு ஒத்துழைப்பை வழங்கி பங்கு பற்ற வேண்டும். தங்களாலான நிதி உதவி செய்ய வேண்டும். மேலும் பலமான மக்கள் கலை இலக்கியப் பணி செழுமையடையச் செய்ய சகலரி னதும் பன்முக ஆதரவும் வேண்டப்படுகிறது.

## இலையுதிர் கால வழியனுப்பல்

பூக்கள் உதிர்வதும்
இலைகள் உதிர்ந்து சருகாவதும்.
பறவைகள் கூடுகளைவிட்டு
வெளியேறுவதும்
வண்ணத்துப் பூச்சிகள்
வழிமாறிச் செல்வதும்
இலையுதிர் காலப் பொழுதுகளில்
இயல்பானதே - எனினும்
மரங்கள் அதற்காய்
மரணிப்பதில்லை
மீண்டும் மரங்கள் தளிர்விடும்
பூக்கள் மலரும்
பறவைகள் மீண்டும் கூடடையும் - ஓர்
வசந்தம் வரும்
நம்பிக்கையோடு நாமும்
முகாரி இசைக்காமல்
வரப்போகும் வசந்தத்திற்காய்
பூபாளங்கள் பாடுவோம்.

ஆர். ஜெ.சீலன்

11ம் பக்க தொடர்ச்சி

### சுகாதாரம் இன்னமை

இயங்கவைப்பதற்கு முடியும். ஆனால் அதற்கான விருப்பும் பொது அக்கறையும் சமூக நோக்கும் நம்மவர்கள் எத்தனை பேரிடம் உண்டு என்பது இன்றைய யுத்தத்தின் மத்தியிலும் கேள்வியாகவே உள்ளது. கோபுரங்கள் எழுப்பவும் கும்பாபிஷேகங்கள் செய்ய பழைமையைப் பேணும் ஆடம்பர வைபவங்கள் நடத்தவும் தாராளமாக ஈரோவிலும் டொலரிலும் செலவு செய்யும் புலம் பெயர்ந்து வடபுலத்து கனவான்களும் கனவாட்டிகளும் மண்ணையும் மொழி பண்பாட்டையும் பாதுகாத்து வரும் வடபுலத்து மக்களின் சுகாதார மருத்துவத் தேவைகளுக்கு உதவுவதற்கு மனம் ஒப்பாது இருந்து வரும் கேவலத்தையே பெரும் ஓட்டமாக காண முடிகிறது. இவ்வாறு கூறுவதால் சமூக அக்கறையும் மக்கள் சார்பும் கொண்டு உதவிகள் புரிந்து வரும் வடபுலத்தின் புலம் பெயர்ந்தவர்களை மனநோகச் செய்வது ஆகிவிடாது. இன்று வடக்கு கிழக்கு மக்களின் இருப்புக்கும் எதிர்காலத்திற்கும் ஆற்றப்படவேண்டிய பணிகளும் பங்கங்களிப்புகளும் ஏராளம் உண்டு. அவை தூர நோக்குடனும் மக்கள் சார்பு சமூக சிந்நனையுடனும் சுயநலம் ஊழல் பெயர் புகழ் நாட்டம் இன்றியும் செய்யப்பட வேண்டும்.

அவ்வாறு செய்யப்பட வேண்டியவற்றில் ஒன்றே வடபுலத்து சுகாதார மருத்துவ துறைகளில் செலுத்தப்பட வேண்டிய அதிகளவிலான அக்கறையாகும். பேரினவாத ஒடுக்கு முறை அரசாங்கத்தை மட்டும் நம்பியிருப்பதால் மக்களுக்கான சுகாதார மருத்துவ சேவைகளைப் பெறுவதில் முழுமை காண முடியாது. அவற்றுக்கு அப்பாலான முன் முயற்சிகள் சமூக மட்டங்களில் முன்னெடுக்கப்படல் வேண்டும். இது பற்றிய பரந்த சிந்தனைகளும் செயற்பாடுகளும் அவசியமான வைகளாகும்.

வடபுலத்தான்.

13ம் பக்க தொடர்ச்சி

### இந்திய அரசியல்

சக்தி உடன்படிக்கை என்பது காங்கிரஸ் ஆட்சிக்கு அதன் ஆளுமை பற்றிய பிரச்சனையாகிவிட்டது. ஆட்சி கவிழாமல் இருப்பதற்காக அது எத்தகைய அரசியல் ஊழலுக்கும் தயார் என்று பாராளுமன்ற வாக்கெடுப்பு நிறுவியுள்ளது

பாராளுமன்றக் கம்யூனிஸ்ற்றுக் கட்சிகள் காங்கிரஸ் கூட்டணியுடன் தம்மை மிக நெருக்கமாக அடையாளப்படுத்தி விட்டன. அதே வேளை காங்கிரஸ் ஆட்சி மீது அவற்றின் தலைவர்கள் பலவேறு நோக்கங்களுக்காகத் தங்கியிருந்தனர். அமெரிக்காவுடனான உடன்படிக்கை பேச்சு வார்த்தை மட்டத்தில் இருந்த போது தமது கடுமையான எதிர்ப்பைத் தெரிவிக்காமல் அதைக் கருத்து வேறுபாடு மட்டத்திலேயே சி.பி எம். மும் சி.பி.ஐ யும் கையாண்டமை ஒப்பந்தத்தின் இறுதி வடிவம் தயாரான நிலையிலேயே இவர்களது எதிர்ப்பு வலிமை பெற்றது. என்ன விலைகொடுத்தும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவது என்று காங்கிரஸ் ஆட்சியாளர்கள் முடிவு செய்த பிறகு இது சிபி.எம் சி.பி.ஐ தலைமைகளின் நம்பகத்தன்மை பற்றிய பிரச்சினையாகிவிட்டது .

இந்திய அமெரிக்க உடன்படிக்கை ஒன்று உருவாவதைப் பாராளுமன்ற அரசியல் மூலம் தடுத்து நிறுத்த இயலாது என்பது முக்கியமான உண்மை. ஏனெனில் அங்கே இடதுசாரிகளையும் ஒரு சில சிறிய கட்சிகளையும் விட்டால் எந்தப் பிரதேசக்கட்சிக்கும் சாதிக்கட்சிக்கும் காங்கிரஸீக்கும் பா.ஜ.க.வுக்கும் உறுதியான ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கை கிடையாது.

24.07.2008 அன்று நடந்த கூத்து பாராளுமன்ற அரசியலின் அசிங்கத்தை வெளிக்காட்டியமை அதன் நல்ல அம்சம். ஆனால் பாராளுமன்ற அரசியலின் வறுமையை இடதுசாரிக்கட்சிகள் உணர்ந்து புரட்சிகர விடுதலை அரசியலில் உள்ள சக்திகளுடன் வெகுசனப் போராட்டங்களில் இணையாது போனால் இந்திய மக்களின் நலன்களைப் பேணுவதற்கும் இந்தியாவின் இறைமையையும் சுயாதீனத்தை காப்பதற்குமான போராட்டம் மேலும் கடுமையானதாக இருக்கும். இந்தியாவின் உண்மையான இடதுசாரி ஜனநாயக முற்போக்குச் சக்திகள் இந்தியாவின் தேசிய நலன்கட்காக ஒரு பரந்துபட்ட வெகுசனப் போராட்டத்தை முன்னெடுக்காது விட்டால் இந்தியா மாறி மாறி இரண்டு ஆளும் வர்க்கத் துரோகக் கும்பல்களால் ஆளப்படும் நிலையே நீடிக்கும்.

14ம் பக்க தொடர்ச்சி

### ஸிம்பாவோ

சூழலில் தேர்தலில் நிற்க உடன்பட்ட எதிர்கட்சித் தலைவர் ஸ்வங்கியரி ஸிம்பாப்வே அரசாங்கம் தனது ஆதரவாளர்களை மிரட்டுவதாகவும் முக்கிய பிரமுகர்களை கைதுசெய்து சிரமங் கொடுப்பதாகவும் கூறித் தேர்தலிலிருந்து விலகுவதாக அறிவித்தார்.எனினுங் காலங்கடந்து விட்டதெனக் கூறி தேர்தல் நடத்தப்பட்டது. முகாபே வென்றதாக அறிவிக்கப்பட்டது. இது ஸிம்பாப்வேயின் அவல நிலை

ஸிம்பாப்வேயின் பிரச்சனை வெறுமனே சனநாயகம் பற்றிய ஒன்றல்ல. சனநாயகம் மட்டுமே பிரச்சனை என்றால் ஸிம்பபேயை விட மிக மோசமான அடக்குமுறை ஆட்சிகள் எத்தனையோ உள்ளன. ஸிம்பாப்வே இலக்கு வைக்கப்படுவது அதற்காக அல்ல. ஸிம்பாப்வேயின் பொருளாதாரம் மிக மோசமான நிலையில் உள்ளது. பண வீக்கமும் விலைவாசி

ஏற்றமும் மாதத்திற்குப் பல மடங்கு; ஆண்டுக்கு பல நூறு மடங்கு என்பது ஒரு பாரிய பிரச்சனை. ஆட்சி மாறினால் அந்நிய முதலீடு வந்து குவியும் பொருளாதாரம் வேகமாகச் சீரடையும் என்று வெளிவெ ளியாகவே பிரசாரம் செய்யப்படுகிறது. இவற்றின் நோக்கங்களை விளங்கிக் கொள்வது கடினமானதல்ல.

ஏகாதிபத்திய எதிர்ப்பில் முகாபே இன்னமும் உறுதியாவுள்ளமையே அவர் பற்றிய நிலைப்பாடுகளைத் தீர்மானிக்கின்றன. எனினும் ஸிம்பாப்பேயின் பலவீனமான பொருளாதாரம் நாட்டை எதிர்நோக்கி நிற்கும் பயங்கரமான வறுமையும் முகாபேயினதும் ஸாணு பி.எவ் அமைப்பிற்கு மிகவும் பாதகமானவை. முகாபே மேற்கொண்ட காணிச் சீர்திருத்தத்தை ஒரு மக்கள் இயக்கமாக்கி ஒரு தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு முயன்றிருக்க வேண்டும்.அதற்கான காலம் கடந்துவிட்டது.

மறுபுறம் சனநாயகத்திற்கான எதிரணி எனப்படுவது தன்னை முற்று முழுதாகவே சில ஏகாதிபத்திய நாடுகளின் ஆதரவிலேயே தங்கியுள்ளது.இந்தப் பின்னனியிலேயே அவர்கட்கு ஆபிரிக்காவின் ஆட்சியாளர்களது ஆதரவைத் திரட்டுவதில் சிரமமுள்ளது. ஆட்சி அதிகாரம் பற்றிய மோதல் தொடருமானால் ஸிம்பாப்வே கொடூரமான ஒரு உள்நாட்டு யுத்தத்தை எதிர்நோக்கும். ஸிம்பாப்வே முன்னுள்ள தெரிவுகள் எளியனயல்ல இலகுவான தீர்வு என எதுவும் அவற்றின் மூலம் வரப் போவதில்லை.

ஸிம்பாப்வேயின் பொருளாதார நெருக்கடி மிக மோசமாகவுள்ளது. நாடு விரைவிற் பஞ்சத்தை எதிர் நோக்கலாம். சனநாயகம் ஈன நிலையிலுள்ளது. அடக்குமுறை மூலமே அரசால் கிளர்ச்கிகளை கட்டுப்படுத்த இயலுமாக உள்ளது. எனினும் ஸிம்பாப்வேயின் பிரச்சினையை எந்தவித அயற் குறுக்கீட்டின் மூலமும் தீர்க்க முயலுவது தவறானது. ஒருபுறம் இன்றைய அரசியல் நெருக்கடி ஒரு ஐக்கிய அரசாங்கத்தின் மூலமே தீர்க்கப்பட வேண்டும் மறுபுரம் மக்களின் அத்தியாவசியத் தேவைகளை முன்னி றுத்திப் பொருளாதாரம் விருத்தியடைய வேண்டும்.

ஆட்சியாளர்களும் எதிர்க்கட்சியினரும் உண்மையான சனநாயகவாதிகளல்ல. எனவே ஸிம்பாப்வேயின் தொழிலாளி வர்க்கத்தின் மத்தியிலிருந்து ஏகாதிபத்திய விரோதச் சிந்தனையை முன்னிறத்தும் சனநாயக இயக்கம் ஒன்று கட்டியெழுப்பப்படுவதும் மக்களின் அடிப்படைத் தேவைகளையும் சனநாயக உரிமைகளையும் முன்னெடுக்கும் இயக்கமொன்று அந்நியரதும் என்.ஜி.ஓக்களதும் குறுக்கீடின்றி நடைபெறாமல் ஸிம்பாப்வே தனது சுதந்திரத்தை காப்பாற்ற இயலாது. .ஸிம்பாப்வேயில் ஏகாதிபத்திய குறுக்கீட்டையும் ஸிம்பாப்வே மீதான பல்வேறு தடைகளையும் ஆபிரிக்க நாடுகள் எதிர்ப்பதை உலகின் ஒடுக்கப்பட்ட மக்கள் ஆதரிக்கும் அதே வேளை ஸிம்பாப்வேயில் சனநாயகத்திற்காகவும் மேல் நாடுகளின் ஆதிக்கத்திற்கு எதிராகவும் சுயசார்பான பொருளாதாரம் ஒன்றைக் கட்டியெழுப்பவும் வேண்டிக் குரல் கொடுக்க வேண்டும்.

நரசிம்மா -

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்


REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

ஆகஸ்ட் 2008

# புதிய பூமி

இணையத் தளம் : Website: www.ndpsi.org

## உலக வளங்களைக் கொள்ளையிடும் செல்வந்த நாடுகளின் G8 உச்சி மாநாட்டை எதிர்த்து யப்பான் ஜேர்மனி நாடுகளில் மக்கள் நடாத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள்.









வெளியிடுபவர் : இ.தம்பையா, இல 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு : கொம் பிரின்ட் சிஸ்ரம், HL, 1/2 டயஸ் பிளேஸ், கொழும்பு 12.